புதிய

# தமிழர் கண்ணோட்டம்

6 - 7 தி.ஆ. 2039 ஆடி 2008 சூலை விலை ரூ.10.00






# திமுக பாமக முறிவு

# கல்வி – கடைச்சரக்கு

முனைவர் தமிழடியார்



கல்வியாம் அறிவு தன்னை
   கடையினிற் சரக்காய் விற்றார்
செல்வமாம் கலையின் நோக்கம்
   சிதைவதால் நன்மை உண்டோ?
செல்வரே வாய்ப்பைப் பெற்றார்
   சிதைவுகள் ஏழைக் கன்றோ?
சொல்வதோ சமூக நீதி
   தொடர்வதோ செல்வ நீதி.

கற்றிடில் ஏழை தேர்வான்
   கல்வியோ ஏழைக் கில்லை
மற்றவன் கற்பான் கல்வி
   மடையனே எனினும் செல்வன்
கொற்றவன் எம்மை ஆள்வோன்
   கூறுவான் ‘எலோர்க்கும் கல்வி’
செற்றவன் கல்விக் கூடம்
   சிதைத்திடும் ஏழைக் கூட்டம்

கற்றிடாப் பேர்கள் எல்லாம்
   கடைசியில் ஒன்று சேர்வார்
விற்றிட ஒன்றும் இல்லை
   விடியலே வேண்டி நிற்பார்
கற்றிடக் காசே வேண்டாம்
   கேட்பவர் தலையும் உண்டோ?
மற்றவை மாறும் இங்கே
   மானுடம் புரட்சி செய்யும்!

புதிய தமிழர் கண்ணோட்டம்

சூலை 2008 6 - 7

**கட்டண விவரம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 120/- |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. 300/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1200/- |

ஈழத் தமிழர் வீடு வாங்கத் தடை
இனஒதுக்கலில் இன்னொரு வடிவம் 12
***தமிழ்த் தேசியன்***

சங்கம் - குறித்த சிவத்தம்பி ஆய்வு
பிழையானது 21
***முனைவர் இரா.சக்குபாய்***

கோலார் தங்கவயல் தமிழகத்தைச் சேர்ந்ததே
வரலாற்றுச் சான்றுகள் 25
***புலவர் முத்து எத்திராசன்***


உள்ளாட்சியும் தேச அரசும் 30
***ஆதன்***

மருத்துவர்களும் மதகுருக்களும்-1 32
***ம.செந்தமிழன்***

வேதாரணியம் வேதனைபுரம் ஆனது ஏன் 37

தமிழ்நாட்டு எண்ணெய் நெருக்கடி தீர... 39
***கி.வெ.***

நிறை குறை 43
ஆயிரத்தில் ஒருவர் 45



**சே-குவேரா:**
**பின்பற்றவேண்டிய போர்க்குணம் - 7**
***கி.வெங்கட்ராமன்***



**குழந்தைகளை வேட்டையாடும்**
**சொட்டு மருந்துக் கொள்ளையர்கள் - 28**
***செவ்வேள்***



**உணவு இறையாண்மையே**
**உணவுப் பஞ்சத்தைப் போக்கும் - 14**
***வான்முகில்***

*ஆசிரியர் -வெளியீட்டாளர் :*
**பெ.மணியரசன்**
*இணை ஆசிரியர்:*
**கி.வெங்கட்ராமன்**
*குழு உறுப்பினர்கள்:*
**கவிபாஸ்கர்**
**க.அருணபாரதி**

*வடிவமைப்பு*
**ஓவியர் புகழேந்தி**
**கவிபாஸ்கர்**
*ஒளி அச்சு*
**அடவி வரைகலை**

*தொடர்புக்கு*
**புதிய தமிழர் கண்ணோட்டம்,**
**2ஆம் தளம், 20/7, முத்துரங்கம் சாலை,**
**தியாகராயர் நகர்,**
**சென்னை-17. ✆ 24348911**

இணையதளம் : www.tamizharkannotam.blogspot.com
மின்னஞ்சல் : tamizhdesiyam@gmail.com
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி
இணையதளம் :
www.tamizharkannotam.blogspot.com

# தி.மு.க. - பா.ம.க. முறிவும் தமிழ்த் தேசிய அரசியலும்

தி.மு.க. - பா.ம.க. கூட்டணி உறவு முறிந்துவிட்டது. தி.மு.க.வின் உயர்நிலை செயல்திட்டக் குழு 17.06.2008 அன்று சென்னையில் கூடி பா.ம.க.வை "இணைத்துக் கொண்டு இந்தக்கூட்டணியை இனி தொடர முடியாது என்ற நிலையை, வருத்தத்தோடு" அறிவித்தது.

பா.ம.க.வின் இரண்டாம் நிலைத் தலைவர்களில் ஒருவரும், வன்னியர் சங்கத்தின் தலைவருமான ஜெ.குருவின் உள்ளரங்கக் கூட்டப் பேச்சு ஒன்றுதான், உறவை முறித்ததற்குக் காரணமாக தி.மு.க. கூறுகிறது. முதல்வர் கருணாநிதி, தி.மு.க.வின் தில்லி அமைச்சர் ஆ.இராசா, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர், தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் சிவசங்கர் ஆகியோரை பா.ம.க. குரு இழிவாகக் கொச்சை மொழியில் பேசினார் என்றும் ஆ.இராசா, சிவசங்கர் ஆகியோர்க்கு எதிராகக் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் இவ்வாறு அவர் பேசியதற்கு ஒலிப்பேழை சான்று உள்ளதென்றும், தி.மு.க. கூறுகிறது.

குருவின் கொலை வெறிப்பேச்சை மருத்துவர் இராமதாசு கவனத்திற்குக் கொண்டு சென்றும், அவர் குருவை வருத்தம் தெரிவிக்கச் செய்யவில்லை என்று தி.மு.க. தீர்மானம் கூறுகிறது.

மருத்துவர் இராமதாசோ,இது ஆறுமாதங்களுக்கு முன் பேசப்பட்டது , இப்பேச்சு குறித்து கருணாநிதிக்குத் தாம் ஆறுதல் கடிதம் எழுதியுடன் இச்சேதி முடிந்து போன ஒன்றாகிவிட்டது. இப்பொழுது வேண்டுமென்றே, உறவை முறிப்பதற்காக கருணாநிதி கிளப்புகிறார் என்று மறுமொழி கூறிவிட்டார்.

குரு பேச்சு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஆனால் குருவின் பேச்சுக்காகத்தான் பா.ம.க.வைக் கழற்றிவிட்டது தி.மு.க. என்பதை நம்ப முடியவில்லை.

சிக்கலின் தொடக்கம் என்ன? 1952 தேர்தலுக்குப்பின், தமிழகத்தில் முதல் தடவையாக 2006 தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை எக்கட்சிக்கும் கிடைக்கவில்லை. இதுவே சிக்கலின் தொடக்கம். அறுதிப் பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை. தி.மு.க. விற்குக் கிடைத்தது 95 இடங்கள். பின்னர் நடந்த இடைத்தேர்தலுக்குப்பின் அது 96 ஆனது.

கூட்டணி அமைச்சரவை அமைக்காமல் தி.மு.க. தனிச் சிறுபான்மை அமைச்சரவை அமைத்தது. அதைக் கூட்டணிக் கட்சிகள் வெளியிலிருந்து ஆதரித்தன.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியோடு கலைஞர் கருணாநிதி பேசி , இவ்வேற்பாட்டுக்கு அவரின் ஒப்புதலைப் பெற்றுவிட்டார். காங்கிரஸ் தலைமையிலான இந்திய ஆட்சி, தி.மு.க. போன்ற கட்சிகளின் கூட்டணியோடு தான் நடந்து கொண்டுள்ளது. 35 சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியே அமைச்சரவையில் இடம் கோராமல் தி.மு.க. ஆட்சியை ஆதரித்த நிலையில், பா.ம.க. அமைச்சரவையில் இடம் கேட்டுப் பிடிவாதம் செய்யமுடியவில்லை. பா.ம.க.வுக்கு 18 சட்டப் பேரவை உறுப்பினர்கள் உள்ளனர்.

கூட்டணிக் கட்சிகளின் துணையோடுதான் சிறுபான்மை ஆட்சியை நடத்துகிறோம் என்ற எண்ணம் கலைஞர் கருணாநிதிக்கோ, அவரது குடும்ப அதிகார மையங்களுக்கோ, தி.மு.க. வினர்க்கோ சிறிதும் இல்லை.

அரசாங்கக் கொள்கை முடிவுகள் மற்றும் திட்டங்கள் வகுப்பதில், அவற்றைச் செயல்படுத்துவதில் கூட்டணிக் கட்சிகளின் அறிவுரைகளைப் பெற வேண்டும் என்று தி.மு.க. கருதவில்லை. பெரும்பான்மை ஆட்சி நடத்திய காலங்களில் நடந்துகொண்ட பழைய எதேச்சாதிகார பாணியிலேயே அது நடந்து கொள்கிறது.

இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டாலும், பணப்பங்கீடு, பதவிப் பங்கீடு போன்றவற்றில் தங்களுக்குரிய விகிதம் கிடைக்காததை காங்கிரஸ், பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இடது சாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் ரப்பர் பாம்புகள். குழந்தைகளைப் பயமுறுத்த அல்லது அவர்களுக்கு விளையாட்டுக்காட்ட பயன்படும் ரப்பர் பாம்புகள். அவை நெளிந்தோடும், சீறும், ஆனால் கடிக்காது.

இடதுசாரிக் கட்சிகளுக்கு , அனைத்திந்திய அளவிலும் சரி, தமிழக அளவிலும் சரி மார்க்சிய – லெனினிய வழிப்பட்ட அரசியல், தத்துவார்த்தத் தலைமை அமையவில்லை. நிர்வாகிகளின் கூட்டுத் தலைமைதான் அமைந்துள்ளது. அந் நிர்வாகிகள் மார்க்சிய – லெனினிய ஆதரவாளர்கள்.

அவர்களுக்குப் பணம், பதவி போன்றவற்றில் தி.மு.க. ஆட்சியுடன் பெரிய முரண்பாடுகள் இல்லை. மக்கள் சிக்கல்களில் அவ்வப்போது நெளிந்து, சீறி, அடங்கி விடுவார்கள்.

காங்கிரஸ் தலைமை, தனதுஅன்றாட ஆட்சியைத் தில்லியில் நடத்தப் பெரும்பாடு பட்டுக்கொண்டிருப்பதால், தி.மு.க.வுடன் உரசல் வேண்டாம் என்று ஒதுங்கிக் கொண்டது. அத்துடன், தமிழகத்தில் காங்கிரஸ்காரர்களை அமைச்சர்கள் ஆக்கினால், அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலேயே பாதக் குறடு கழற்றித் தங்கள் பண்பாடு காட்டத் தொடங்கி விடுவார்கள் என்ற அச்சமும் சோனியாவுக்கு இருந்திருக்கும்.

எஞ்சியிருப்பவை பா.ம.க.வும் விடுதலைச் சிறுத்தைகளும் தாம்.

பா.ம.க. இந்திய அரசின் அமைச்சரவையில் பங்கு கொண்டுள்ளது. இருவர் அமைச்சர்களாக உள்ளனர். ஒரு சிக்கலில் கூட பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு நடுவண் ஆட்சியைக் குறை சொல்லியதோ, கண்டித்ததோ இல்லை.தேவைப்பட்டால் சில அறிவுரைகள் சொல்வார்.

இந்திய நாட்டையே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலடியில் இறுதிக்கும் இறுதியாகப் பிணைத்துப்போடும் அணு ஆற்றல் ஒப்பந்தம் இந்தியாவெங்கும் அக்குவேறு, ஆணிவேறாக அலசி ஆராயப்பட்டது. மாற்று நிதிநிலை அறிக்கைகள், வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை தக்க வல்லுநர்களுடன் கலந்து ஆய்வு செய்யும் பா.ம.க. ஒரு தடவை கூட அமெரிக்காவுடனான அணு ஒப்பந்தத்தை அலசி ஆராயவில்லை.

அணு ஒப்பந்தத்தை பா.ம.க. ஆதரித்தே வந்தது. இப்பொழுது தனது பொதுக் குழுக் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி ஒப்பந்தத்தை ஆதிரித்துள்ளது.

சிறப்புப் பொருளியல் மண்டலங்களுக்காக, தி.மு.க. அரசு ஒப்பந்தங்கள் போட்டால் பா.ம.க. எதிர்க்கும் சிறப்புப் பொருளியல் மண்டலங்களுக்கு இந்திய அரசு அனுமதி வழங்கினால் எதிர்க்காது.

சிறப்புப் பொருளியல் மண்டலங்களுக்கான சட்டம் 2005 இல் நாடாளுமன்றத்தில் மன்மோகன் அரசு இயற்றியபோது அதை பா.ம.க. ஆதரித்தது. சிறப்புப் பொருளியல் மண்டலம் என்ற திட்டத்தை உருவாக்கித் தந்ததே நடுவண் ஆட்சிதான் ! இந்தியாவைப் பன்னாட்டு நிறுவனங்களின் காலனியாக்கிடும் நடுவண் அரசின் தாராள மயம், உலகமயம், தனியார் மயம் ஆகியவற்றை மருத்துவர் இராமதாசு எதிர்க்கவில்லை.

தமிழக அரசின் ஆங்கில ஆதரவுப்போக்கை எதிர்த்து, தமிழ் மொழிக்கு ஆதரவாக பா.ம.க. இயக்கம் நடத்துகிறது. ஆனால் இந்திய அரசின் இந்தித்திணிப்பை எதிர்த்து அது சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை.

சென்னை பெருங்களத்தூரிலிருந்து திண்டிவனம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையில் வழிக்குறிப்புகள் இந்தியில் எழுதப்பட்டன. மருத்துவர் இராமதாசு இதைக் கண்டித்து அறிக்கை கூட விடவில்லை. இந்தியை எழுதச் செய்தவர். தி.மு.க. வின் நடுவண் அமைச்சர் டி.ஆர்.பாலு.

த.தே.பொ.க, தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழர் தன்மானப் பேரவை ஆகிய அமைப்புகளைக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய முன்னணி தான் அந்த இந்தி எழுத்துகளைத் தார்பூசி அழித்தது.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது, பா.ம.க.வையும் இணைத்து தமிழகத்தில் கூட்டு அமைச்சரவை அமைத்திருந்தால், பா.ம.க.வின் ஆவேச எதிர்ப்புகளை தி.மு.க. ஆட்சி தவிர்த்திருக்கலாம் என்பதே.

இவற்றையெல்லாம் விட, நாம் கவலையோடு பார்ப்பது கீழ்வரும் செய்திகளே.

1. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு நாட்டை முழு அடிமையாக்கும் அணு ஒப்பந்தத்தை தி.மு.க.வும் பா.ம.க.வும் ஒரே குரலில் ஆதரிக்கின்றன.

2. உலக மயம்,தாராளமயம், தனியார் மயம், சிறப்புப் பொருளியல் மண்டலம் என்ற பன்னாட்டு முற்றதிகார முதலாளிய நிறுவனங்களின் கொள்ளைக்கான தில்லி அரசின் பொருளியல் கொள்கையை தி.மு.க. , பா.ம.கா. கட்சிகள் ஒரே குரலில் ஆதரிக்கின்றன.

3. தில்லி ஏகாதிபத்தியத்தின் இந்தித் திணிப்புக் கொள்கையை தி.மு.க.வும் எதிர்க்கவில்லை, பா.ம.க.வும் எதிர்க்கவில்லை.

4.தில்லி ஏகாதிபத்தியக்கட்சிகளான காங்கிரஸ் அல்லது பா.ஜ.க.வுடன் எந்த நேரத்திலும் கூட்டணி சேர்ந்து அவற்றின் அமைச்சரவையில் சேரத் தயங்காத கட்சிகள் தாம் தி.மு.க.வும், பா.ம.க.வும்.

தமிழர் நலன், தமிழர் உரிமை என்ற சிக்கல்களில் தி.மு.க., பா.ம.க., அணுகுமுறை என்ன?

1. காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு ஆகிய ஆற்று நீர்ச் சிக்கல்களில் தமிழ்நாட்டிற்குள்ள சட்டப்படியான உரிமைகளை நிலைநாட்டித்தராமல் மறை முகமாக கன்னடர், மலையாளி, தெலுங்கர் போன்ற அண்டைப் பகைவர்களுக்குத் துணை செய்யும் தில்லி ஏகாதிபத்தியத்தையும் அதன் ஆளுங்கட்சிகளையும் ஆதரிப்பதில் தி.மு.க. வுக்கும் பா.ம.க. வுக்கும் முரண்பாடு இல்லை.

2. அன்றாடம் தமிழக மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் சிங்களப் படைக்கு ஆய்தம் வழங்கும் இந்திய அரசையும் அதன் ஆளுங்கட்சிகளையும் ஆதரிப்பதில் இவ்விரு கட்சிகளிடையே முரண்பாடு இல்லை.

3. தாயக விடுதலைக்குப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளை வீழ்த்த சிங்கள அரசுக்கு படையுதவி, பொருள் உதவி, பன்னாட்டு அரசியல் உதவி உள்ளிட்ட அனைத்து வகை உதவிகளையும் செய்யும் இந்திய ஏகாதிபத்திய ஆட்சியையும் அதன் ஆளுங்கட்சிகளையும் ஆதரிப்பதில் தி.மு.க.வுக்கும், பா.ம.க.வுக்கும் முரண்பாடு இல்லை.

இந்த அரசியலைத் தான் நாம் கங்காணி அரசியல் என்கிறோம்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு இரண்டு சட்டப்பேரவை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். தொல்.திருமாவளவனுக்கும் தி.மு.க.விடம் ஏதோ மனக்குறை உள்ளது. அதனை வெளிப்படுத்தும் வகையில் தி.மு.க., பா.ம.க. உறவு முறிவில் அவர் நடுநிலை வகிக்கிறார். திருமாவின் மனக்குறை கொள்கை சார்ந்தது அல்ல என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

தி.மு.க., பா.ம.க. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவற்றிடையே உள்ள முரண்பாடுகள் ஒரு கட்டுக்குள் இருந்தவை தாம். இப்போது ஏன் அவை வெளிப்படுகின்றன.

உலகு தழுவிய, அரசியல், பொருளியல் காரணங்கள் இம்முரண்பாட்டு வெளிப்பாட்டிற்கும் அடிப்படையாய் உள்ளன. உலகெங்கும் அரசியல் நிலையற்ற தன்மை வெளிப்பட்டு வருகின்றது.

தானே வெட்டிக் கொண்ட சவக்குழி நோக்கி உலகமயம் போய் கொண்டுள்ளது. ஆட்சிகளாலும் அரசியல் கட்சிகளாலும் வஞ்சிக்கப்பட்ட மக்கள் உலகெங்கும் ஏதோ ஒரு காரணத்திற்காக வீதிக்கு வருகிறார்கள். கலகம் செய்கிறார்கள்.

நாம் 2007 ஆகஸ்ட் இதழ் தமிழர் கண்ணோட்டத்தில் அரசியல் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளதைப் பின்வருமாறு கூறியுள்ளோம்.

''வானக்கூரையின் கீழ் ஒரே குழப்பம் ; எதிரிகள் கை குலுக்கிக் கொள்கிறார்கள் ; நண்பர்கள் பிரிகிறார்கள் ; நிரந்தரம் என்று கருதப்பட்டவை நிலையற்று ஆடுகின்றன; வரம் கொடுத்த பூதங்கள் சாபம் கொடுக்கின்றன ; கண்ணுக்குத்தெரியாமல் கூட்டத்தோடு கூட்டமாய் நின்றிருந்த வீரனொருவன் உருவிய வாளோடு மேடையேறுகிறான்''

இக்காட்சி மாற்றங்களைக் கண்டு தமிழ்த் தேசியர்கள் குழம்பிப் போகக் கூடாது. அரசியல் நிலையற்ற தன்மை நிலவும் காலத்தில் தமிழ்த் தேசியத்திற்கான வெளி ஒன்று கிடைக்கிறது. அந்த வெளியை அடைவதற்கு முயலாமல் கங்காணி அரசியலில் ஏதாவதொரு முகாமுடன் ஒட்டிக் கொள்ளக்கூடாது. அல்லது புதிய கங்காணிக் கூட்டணியை அமைக்க முயலக் கூடாது.

**தற்சார்புத் தமிழ்த் தேசியம் என்பது தனிச் சிறப்பான அரசியல், பொருளியல், சமூகவியல், தத்துவக்கொள்கைகளைக் கொண்டது. அது ஏகாதிபத்திய அரசியலுக்கு எந்த அளவுக்கு எதிரானதோ அதே அளவிற்கு அதன் கங்காணி அரசியலுக்கும் எதிரானது.**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டு வகையான ஏகாதிபத்தியங்கள் அணிசேர்ந்து கொண்டு தாக்குகின்றன ; சூறையாடுகின்றன. ஒன்று வட அமெரிக்கா தலைமையிலான உலக ஏகாதிபத்தியம் ; இன்னொன்று அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள துணை ஏகாதிபத்தியமான இந்திய ஏகாதிபத்தியம்.

நாம் ஏற்கெனவே கூறி வருவது போல், அனைத்திந்திய அரசியலிலும், தமிழக அரசியலிலும், கூட்டணிகள் இன்னும் கூறுபடப் போகின்றன. கட்சிகள் இன்னும் பிளவுபடப் போகின்றன. மக்கள் வீதிக்கு வந்து போராடப்போகிறார்கள். அரசியல் நிலையற்ற தன்மை கூடுதலாகக் கூடுதலாக ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளைக் கூடுதலாக ஏவுவார்கள். மக்கள் உரியவாறு அடக்குமுறையை எதிர்கொண்டால் அடக்குமுறை அமைப்புகளிலும் பிளவு ஏற்படும்.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு முன்னேறுவதாக தமிழ்த் தேசிய ஆற்றல்கள் வலுப்பெற வேண்டும். தமிழ்த் தேசியப் புரட்சிக்காக வரலாறு வாயில் கதவைத் திறந்து வைத்துள்ளது.

# சே-குவேரா:

# பின்பற்ற வேண்டிய போர்க்குணம்

▪ கி.வெங்கட்ராமன்

‘‘புரட்சியின் மனித வடிவம்’’ என்று ஃபிடல் காஸ்ட்ரோவால் வர்ணிக்கப்பட்ட சே-குவேராவின் எண்பதாவது பிறந்த நாள் நிறைவு விழாவை உலக முற்போக்காளர்கள் கொண்டாடி வருகிறார்கள்.


**எர்னஸ்ட்டோ சே குவேரா டி லாசெர்னா** பிறந்த அர்ஜன்டினாவின் ரொசாரியோ நகரில் 2008, சூன் 14 அன்று- அவரது எண்பதாவது வயதைக் கொண்டாட அவ்வூர் இளைஞர்கள் அவரது வெண்கலச் சிலையை நிறுவினர். பல்லாயிரக் கணக்கில் மக்களிடம் திரட்டப்பட்டத் திறவுகோல்களை (சாவி) உருக்கி உருவாக்கப்பட்டதாம் அந்தச் சிலை.

புதியபொருள் செறிவோடு இன்று உலகம் சே-குவேராவை நினைவு கூர்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உலகெங்கிலும் இப்போது ‘சே’ நினைத்துப் பார்க்கப் படுகிறார். ‘சே’-யின் இரண்டாம் வருகை என்று கூட இதனைக் குறிக்கலாம். சே-குவேராவின் போர்க் குணம், ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல், பொருளியல் சிந்தனைகள் அனைத்தும் இன்று மறுவாசிப்பு செய்யப்படுகின்றன. புதிய ஈர்ப்பைப் பெற்றுள்ளன.

குறிப்பாக உலகமயப் பொருளியல், சோவியத் ஒன்றி யத்தின் வீழ்ச்சி, ‘உலகப் பேரரசின்’ போர்வெறி, ஊழல் மயமாகும் அரசியல் ஆகியவற்றால் நசுக்குண்ட மக்களுக்கு ஒரு மாற்று உலகத்தைக் காட்டும் ஈர்ப்பு மையமாக ‘சே’ திகழ்கிறார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, அடிமைப்பட்ட தேசங்களின் விடுதலை, அர்ப்பணிப்பு அரசியல் ஆகியவற்றுக்கான உந்து சக்தியாக சே-குவோரா விளங்குகிறார். ஆதிக்க எதிர்ப்பின் சின்னமாக அவர் இருக்கிறார்.

*‘‘சே-குவேராவைப் பற்றி இறந்த கால வாக்கியத்தில் என்னால் பேசவே முடியவில்லை. ஏனெனில் அவர் எங்களுடனே*



வாழ்கிறார். உந்து சக்தியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்' என்று ஃபிடல் காஸ்ட்ரோ கூறுவது கியூபாவிற்கு மட்டுமின்றி வல்லாதிக்க எதிர்ப்பில் முனைந்திருக்கும் எல்லோருக்குமே பொருந்துவது ஆகும்.

உலகமய எதிர்ப்பு, போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் சே குவேராவின் படங்களும், பதாகைகளும் தவறாமல் இடம் பெறுவதே இதற்கொரு சான்று.

*''அரசியல் வல்லாண்மையையோ, ஆயுத வலுவையோ அல்லது இரண்டையுமோ கொண்டு பிற நாடுகள் மீது காலனிய, புதுக் காலனிய விலங்கு பூட்டும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தப் போராட்டம் தனித்த ஒன்றன்று. ஏழ்மையையும், பின்தங்கிய தன்மையையும் எதிர்த்தப் போராட்டத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். வளமையும் நீதியும் நிறைந்த புதிய சமூகத்தைப் படைக்கும் பாட்டையில் இரண்டுமே இணைந்த முன்னெடுப்புகள்தாம்...*

*..............*

*மரணப் போராட்டத்திற்கு நாட்டு எல்லைகள் ஏதுமில்லை. ஏதோ ஒரு நாட்டில் ஏகாதிபத்தியத்தை முறியடித்து ஈட்டப்படும் வெற்றியானது நம் எல்லோருக்குமான வெற்றியாகும். அதேபோல் ஏகாதிபத்தியத்திடம் ஏதோ ஒரு நாடு தோற்குமானால், அது நம் எல்லோருக்குமான தோல்வி ஆகும். எனவே, உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும் அது குறித்து பாராமுகமாக இருக்கக் கூடாது''* என்கிறார் சே.

*(1965 பிப்ரவரி 26அன்று அல்ஜீரியா நாட்டுத் தலைநகர் அல்ஜியர்ஸில் நடந்த ஆசிய-ஆப்பிரிக்க சகோதரத்துவ அமைப்பின் இரண்டாவது பொருளியல் மாநாட்டில் சே-குவேரா ஆற்றிய உரையிலிருந்து)*

**'ஒரு மக்கள் மீது ஏகாதிபத்தியத்தின் பொருளியல் ஆதிக்கம் முடிவுக்கு வந்தால்தான் அம்மக்கள் விடுதலை அடைந்ததாகப் பொருளாகும்' என்ற சேகுவேராவின் அறிவிப்பை, உலகமயமும் இந்திய மயமும் இணைந்து ஆதிக்கம் செய்யும் சூழலில் தமிழ்நாட்டுக்குரிய பொருளில் புரிந்துகொள்ள வேண்டும்.**

*''ஒரு மக்கள் மீது (அதாவது ஒரு தேசிய இனத்தின் மீது) ஏகாதிபத்தியத்தின் பொருளியல் ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டால்தான் அம்மக்கள் விடுதலை அடைந்துவிட்டதாகப் பொருளாகும்''* என்று அதே உரையில் சே குறிப்பிடுகிறார்.

வடஅமெரிக்காவும் பிற வல்லரசுகளும் திணிக்கும் உலகமயப் பொருளியல் உலகெங்கிலும் உள்ள மக்களை வேட்டையாடி வருகிறது. இதனை ஏற்க மறுக்கும் நாடுகள் மீது நேரடி இராணுவ ஆக்கிரமிப்பு ஏவி விடப்படுகிறது.

ஆயினும் பொருளியல் முனையிலும் போர் முனையிலும் ஏகாதிபத்தியம் தோல்வியடையத் தொடங்கியுள்ளது.

இன்று உலகு தழுவி ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி, எரி எண்ணெய் விலையேற்றம் ஆகியன உலகமயப் பொருளியலைத் தோலுரித்துக் காட்டியுள்ளன.

சே-குவேராவின் நினைவை ஏந்தி இலத்தீன் அமெரிக்க நாடுகளில் எழுந்துவரும் 'இளஞ்சிவப்பு அலை' (Pink tide) அமெரிக்க வல்லாதிக்கத்தை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

ஈராக்கில் மீளமுடியாத புதைச் சேற்றில் அது சிக்கியிருக்கிறது. ''பின்லேடனை ஒழிக்க முடியவில்லை மாறாக இஸ்லாமிய நாடுகளின் பகைமையைத்தான் சம்பாதித்தோம்'' என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ் தோல்வியை ஒத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 'தாலிபான்கள் தடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டார்கள்' என்று அறிவிக்கப்பட்ட நிலையில் ஆப்கானிஸ்தானில் கண்டகார் சிறைத் தகர்ப்பை நிகழ்த்தி தாலிபான்கள் வல்லரசுகளைத் திகைக்க வைத்துள்ளனர்.

அமெரிக்க ஆதரவு பெற்ற நேபாள மன்னர் ஞானேந்திரா முடிதுறந்து அரண்மனையை விட்டு வெளியேறி விட்டார். அமெரிக்காவின் நிழல் அரசு நடத்திய பாகிஸ்தான் அதிபர் முசாரப் ஒடுங்கிக் கிடக்கிறார்.

இந்தியாவில் மன்மோகன்சிங், ப.சிதம்பரம், அலுவாலியா ஆகிய '**ஏகாதிபத்தியப் பொருளாதார அடியாட்களின்**' ஆட்சி அம்பலப் பட்டு நிற்கிறது. உலகமயமும், இந்தியமயமும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பது முன்னெப் போதையும் விட இப்போது தெற்றெனத் தெரிகிறது.

நிலம் விழுங்கும் சிறப்புப் பொருளியல் மண்டலத்தை எதிர்த்த உழவர்களின் நிலவுரிமைத்

தற்காப்புப் போராட்டமும், தமிழர்களின் தாயக உரிமைப் போராட்டமும் ஒன்றிணைந்த ஒன்று என்பது தெளிவாகி வருகிறது.

உலகமயமும் இந்திய மயமும் தனது சொந்த சந்தையைப் பறிக்க வரும்போது, 'தமிழ்நாட்டைத் தனி உணவு மண்டலமாக்கு' என்ற தமிழ்த் தேசிய முழக்கம்தான் தற்காப்பு முழக்கம் என்பதை உழவர்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

வெளிநாட்டு வால்மார்ட் வந்தாலும், வடநாட்டு ரிலையன்ஸ் வந்தாலும், மலையாளத்து ஆலுக்காஸ் வந்தாலும் விளைவு ஒன்றுதான் என்ற உண்மையை சில்லரை வணிகர்கள் உணரவேண்டிய தேவை எழுந்துள்ளது.

'தமிழ்நாட்டு வணிகம் தமிழர்களுக்கே! வெளியாரை வெளியேற்றுவோம்'

என்ற தமிழ்த் தேசிய முழக்கம் அவர்களது வாழ்வுரிமை முழக்கமாக வலுப்பெற்று வருகிறது.

நவீன உலகமயத் தொழிலகங்களும், இந்திய அரசு நிறுவனங்களும் வெளி மாநிலத்தவரின் வேலை வாய்ப்பகங்களாக மாறி வரும் சூழலில் 'மண்ணின் மக்களுக்கே வேலை' என்ற தமிழ்த் தேசிய முழக்கத்தின் பொருள் இதுவரை புரியாதவருக்கும் புரியத் தொடங்கி உள்ளது.

அமெரிக்கச் சார்பு உலகமயமும், பார்ப்பனச் சார்பு இந்திய மயமும் ஒரேதளத்தில் செயல்படுவதற்கு நீதிமன்றத் தீர்ப்புகளே சாட்சி கூறுகின்றன.

மொழியுரிமை, அரசியல் உரிமை என்ற தளத்தில் மட்டுமே பெரிதும் புரிந்து கொள்ளப்பட்டு வந்தத் தமிழ்த் தேசியம், இன்று வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் தனது இன்றியமையாத் தன்மையை நிறுவி வருகிறது.

'**ஒரு மக்கள் மீது ஏகாதிபத்தியத்தின் பொருளியல் ஆதிக்கம் முடிவுக்கு வந்தால்தான் அம்மக்கள் விடுதலை அடைந்ததாகப் பொருளாகும்**' என்ற சேகுவேராவின் அறிவிப்பை, உலகமயமும் இந்திய மயமும் இணைந்து ஆதிக்கம் செய்யும் சூழலில் தமிழ்நாட்டுக்குரிய பொருளில் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் இரண்டு அணிவகுப்புகள்தாம் உள்ளன. உலகமய- இந்திய மய காங்கிரசு, பா.ச.க. கட்சிகள்- அவர்களோடு கைகோத்து நிற்கும் இடதுசாரிக் கங்காணிகள் மற்றும் மாநில அரசியல் கங்காணிகள். இக்கட்சிகள் எல்லாம் ஒரே அணிவகுப்பில் உள்ளன. இவைகளுக்குள் தேர்தல் அணிசேர்க்கை வெவ்வேறு வகையில் அமையலாம். ஆனால் அரசியலில் இவற்றிற்கிடையே அடிப்படை வேறுபாடு ஏதுமில்லை.

இந்த அணி வகுப்பில் இடம் பெற்றுள்ள கங்காணிக் கட்சிகளில் 'இதைவிட அது பரவாயில்லை' என்று மேலோட்டமான வேறுபாடுகளைப் பார்த்து மயங்குவதற்கு இடமில்லை.

இவை எல்லாம் தமிழர் விரோத அணிவகுப்பு என்ற வகையில் ஒரே முகாமில் வருவனதாம்.

தமிழ்நாட்டில் இவற்றிற்கு நேர் எதிரான புரட்சிகர அணிவகுப்பு தமிழ்த்தேசியம்தான். ஆயினும் அது அமைப்பு வகையில் பலவீனமாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டு அரசியல் ஒரு முட்டுச் சந்தில் நிற்கிறது. ஆயினும் அதுவே ஒரு திருப்பு முனையாக அமையும் வாய்ப்பையும் காட்டுகிறது.

தேர்தல் அரசியல் இளைஞர்களை ஈர்ப்பதாக இல்லை. தேர்தல் கட்சிகளில் 35 வயதுக்குக் கீழ் உள்ள இளைஞர்களைக் காண்பது அரிது. பெரிய மாநாடுகளுக்கு மட்டுமின்றி, சிறிய பொதுக் கூட்டங்களுக்குக் கூட பணம் கொடுத்தும், ஆட்டம் பாட்டம் என கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியும் ஆள் சேர்க்க வேண்டிய நிலையில் இக்கட்சிகள் உள்ளன.

அதே நேரம் 2010க்குள் தமிழக மக்கள் தொகையில் பெரும்பான்மையோராக 35க்குக் கீழே உள்ள இளைஞர்கள் இருப்பார்கள் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தேர்தல் தன்னல அரசியலுக்கு அப்பால் இருப்போர் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே இதன் பொருள். அதாவது மக்கள் அரசியலுக்கான அரசியல் வெளி (Political Space) அதிகரித்து வருகிறது என்பது இதன் மூலம் புலனாகும்.

உலகமயமும் இந்திய மயமும் இணைந்த இந்திய அரசு மட்டுமின்றி கன்னடர்களும், மலையாளிகளும், தெலுங்கர்களும், சிங்களர்களும் தங்கள் எதிர்மறைச் செயல்கள் மூலம் தமிழ்த் தேசியத்தின் இன்றியமையாமையை உணர்த்தி வருகிறார்கள். நாம் சொல்லிப் புரிவதை விட எளிதில் புரியவைக்கிறார்கள். அதாவது தமிழ்த் தேசியத்திற்கான அரசியல் வெளி விரிவடைந்து வருவது தெளிவு.

தமிழ்த் தேசிய அரசியல் செயல்பாடு தீவிரம் பெறாது போனால், இப்போது உருவாகியுள்ள இந்த அரசியல் வெளி பயனற்றுப் போகும். அவ்வாறான சூழலில் அந்த வெளி நீடிக்காது. அதனை ஏதாவது பாசிச சக்திகள் கைப்பற்றிக் கொள்ளும் ஆபத்து உண்டு.

இவ்வாறானதொரு திருப்புமுனை சூழலில்தான் ''**நாளை என்பது மிகத் தாமதம்**'' என்ற ஃபிடல் காஸ்ட்ரோவின் சொற்களின் பொருள் செறிவைப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான மனநிலை சே-குவேராவுக்கு இயல்பிலேயே இருந்தது.

''தான் குண்டு வீசித் தகர்த்ததால் எரியும் பாலத்தைக் கூட, மறுமுறை திரும்பிப் பார்க்கமாட்டார் சே. அந்த விநாடியை அடுத்த நகர்வுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றே நினைப்பார்'' என்று சேகுவேரா பற்றி காலினோ என்ற பத்திரிகையாளர் குறிப்பிடுகிறார். (Monthly Review, January 1968)

போர்முனையில் மட்டுமின்றி, கியூபாவின் அமைச்சராக இருந்த போதும் சே-விடம் இந்த எதிர்காலம் நோக்கிய அணுகுமுறை இருந்தது.

இன்றைய சூழலில் தமிழ்த் தேசியர்கள் பெறவேண்டிய மனநிலை இதுதான்.

சே-குவேரா நடத்திய அதே கெரில்லாப்போர் வழிமுறையை அதே ஆயுதப் போராட்ட வழி முறையை அப்படியே, நகலெடுத்துத் தமிழ்நாட்டில் பின்பற்றத் தேவை யில்லைதான். இங்கு மக்கள் திரள் எழுச்சி என்பதுதான் தமிழ்த்தேசியப் புரட்சிக்கான பாதை.

இதன்பொருள் தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோரை வீதிக்கு வரவழைப்பது என்பதல்ல. இளைஞர்களில் செயலூக்கமுள்ள ஒரு விழுக்காட்டு எண்ணிகையினரும், அவர்களைச் சுற்றி ஆதரவாகச் செயல்படும் பத்து விழுக்காட்டு எண்ணிக்கையிலான தமிழக மக்களும்தான் நாம் திரட்ட வேண்டியவர்கள். இதன் அதிர் வலையில் பெரும்பாலான பிற மக்கள் பகுதியினர் ஆதரவு நிலையோ நடுநிலையோ வகிப்பர்.

தெளிவான கொள்கையும் உறுதியான போராட்டச் செயல்பாடும் உள்ள புரட்சிகர அமைப்பினால்தான் மேற்குறித்த செயலூக்கமுள்ள பகுதியினரைத் தமிழ்த்தேசியப் புரட்சி நோக்கித் திரட்ட முடியும்.

கருத்தியல் தெளிவும், அயராத அர்ப்பணிப்பு உணர்வும் உள்ள செயலூக்கமிக்கவர்களைக் கொண்டதாக இத்தகைய அமைப்பு விளங்க வேண்டும்.

கருத்தியல் தெளிவு என்பது அறிவு சார்ந்தது. அர்ப்பணிப்பு உணர்வு என்பது மனம் சார்ந்தது. இவை இரண்டுக்குமிடையில் இயங்கியல் ஒருங்கிணைப்பு இருக்க வேண்டியது அவசியம். இவ்வாறான ஒருங்கிணைப்பு பெற்ற மனிதரிலிருந்துதான் புரட்சியே தொடங்குகின்றது என்கிறார் சே.

*''ஒரு மனிதன் தான்-குறிப்பான பெயரும் குறிப்பான தலைப்பெழுத்தும் கொண்ட தனி மனிதன்தான்- புரட்சியின் தொடக்கப் புள்ளியாக இருக்கிறான். அவன்மீது நாம் நம்பிக்கை வைக்கிறோம்.*

---

**கருத்தியல் அறிவு பெற்றவராக மட்டுமே ஒருவர் இருந்தால், அது வெறும் தொழில் நுட்பமாக (technique) சீரழிந்து விடும் ஆபத்து உண்டு. தமிழ்த் தேசியத்திற்கான புரட்சிகரக் கருத்தியல் 'தெரிந்தவராக' மட்டுமே ஒருவர் இருந்து, அதற்குரிய புரட்சிகர அறவியல் அவரிடம் இல்லாது போனால் அவரது அறிவு ஒரு போலித் தோற்றத்தைக் கொடுத்து மக்களைக் குழப்பி விடும்; தமிழ்த் தேசிய அரசியலை சீர்குலைத்து விடும்.**

---

*புரட்சியின் வெற்றி, தோல்வி அவனது செயல்திறனைச் சார்ந்து இருக்கிறது. இவ்வாறான தனிமனிதர்கள் ஒன்றிணைந்துதான் முன்னணிப்படை உருவாகிறது.... ... இவர்கள் கடும் ஆபத்துக்களுக்கிடையே, பெரும் பொறுப்புகளைத் தங்கள் தோள்களில் சுமக்கிறார்கள். தங்கள் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவது ஒன்றுதான் அவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது''* என்கிறார் சே-குவேரா. (Man and Socialism in Cuba, 1965).

அறிவும் மனமும் புரட்சி என்ற புள்ளியில் குவிந்திருக்கும் நிலையை இங்கு சே எடுத்துக் காட்டுகிறார். ஆழ்ந்து நோக்க வேண்டிய செய்தி இது.

'மக்கள்தான் வரலாற்றைப் படைக்கிறார்கள்' என்றார் காரல் மார்க்ஸ். இதன்பொருள் கை, கால் முளைத்த மனிதர்கள் எல்லாம் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்பதாகாது. 'ஒரு கருத்திற்கு ஆட்பட்ட மக்கள்', 'ஒரு கருத்தின் கீழ் திரட்டப்பட்ட மக்கள்' என்பதுதான் இதற்குப் பொருள்.

''ஒரு கருத்து மனித மூளையைக் கவ்வி விட்டால் அது பௌதிக ஆற்றலாக மாறுகிறது' என்ற மார்க்சின் வாசகம் சமூக இயக்கத்தில் கருத்துக்களின் மையமான பாத்திரத்தை எடுத்துக் காட்டுகிறது.

அரசியல், சமூக நிகழ்வுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஒருவருக்கு உருவாகும் கருத்துக்குப் பின்னால் ஒரு கருத்தியல் (idealogy) அல்லது மெய்யியல் பின்புலமாக இருக்கிறது.

அறிவியல் வழிப்பட்ட கருத்திய லானது, அரசியல் சமூக நிகழ்வுகள் குறித்து சரியான கருத்துகள் பிறக்க வழிகாட்டுகிறது. மார்க்சியம் என்பது வளர்ச்சி யடைந்த சமூக அறிவியல் ஆகும். அது நாம் எதிர்கொள்கிற அரசியல், சமூக சிக்கல்கள் குறித்து சரியான கருத்துகள் உருவாக வழிகாட்டுகிறது. சரியான தீர்வுகளைக் கண்டறிய நம்மை வழிநடத்துகிறது. அதன்போக்கில் மார்க்சியம் என்ற இக்கருத்தியல் தானும் செழுமையுற்று வளருகிறது.

புரட்சிகரக் கருத்தியல் பயிற்சி உள்ளவர்கள்தாம் எதிர்ப்படுகிற அரசியல், சமூக சிக்கல்களுக்கு

சரியான தீர்வு வழங்க முடியும். ஆதிக்க சக்திகளின் கருத்துகளை முறியடிக்க முடியும். இத்தகை யோரின் ஒருங்கிணைவாக இருக்கிற அமைப்புதான் மக்களுக்குத் தலைமை தாங்க முடியும்.

கருத்தியல் மேலாண்மையை (idealogical hegemony) நிறுவுவதில் நடக்கிற மோதல்தான் புரட்சிப் போரின் முதல்படி என்கிறார் இத்தாலிப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் **அன்டோனியோ கிராம்சி**. புரட்சி நீடித்திருப்பதற்கும் இந்த கருத்தியல் மேலாண்மை முகாமையானது என கிராம்சி கூறுகிறார்.

ஆதிக்கக் கருத்தியல் மக்களிடம் மேலாண்மை செலுத்துவதால்தான் தங்களது அடிமைத்தனத்திற்கு அவர்கள் 'ஒப்புதல்' வழங்குகின்றனர். கருத்தியல் களத்தில் கலகம் நிகழ்த்தினால்தான் இதனைக் கலைக்க முடியும் என்கிறார் அவர்.

இந்தக் புரட்சிகரக் கருத்தியல் மேலாண்மைக்கான போராட்டத்தை அறிவுத்தளத்தில் மட்டும் நிகழ்த்தினால் போதாது, உணர்ச்சித் தளத்தில் நுழைய வேண்டும்; பண்பாட்டுத் தளத்தில் ஊடுருவ வேண்டும் என்கிறார் கிராம்சி.

எப்போதுமே 'அறிவு' செயலுக்கு வழிகாட்டும். ஆனால் உணர்ச்சிதான் செயல்படவைக்கும், ஆபத்தைத் துச்சமாகக் கருதவைக்கும்.

விடுதலைக் கருத்தியல் விடுதலை அறவியலாக மலர வேண்டும் என்பதில் சே-குவேரா கண்ணும் கருத்துமாக இருந்தார்.

''*பொதுவுடைமைச் சமூகத்தைப் படைக்க வேண்டுமானால், அதற்கு ஏற்ற பொருளியல் அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டும் போதாது, புதிய மனிதனை உருவாக்க வேண்டும்*'' என்றார் சே.

''*கம்யூனிச அறவிழுமியங்கள் இல்லாத சோசலிசப் பொருளாதாரத்தில் எனக்கு ஆர்வம் இல்லை. ... ..... சோசலிசம் என்பது நிர்வாகத்தில் பாட்டாளிகள் பங்கேற்பதோடு, அறவியல் உணர்வு நிலையை அவர்களிடம் உருவாக்கினால்தான் வெற்றி பெற்றதாகப் பொருள்*'' என்றார் அவர்.

தமிழ்த்தேசிய அரசியலுக்கும் அடிப்படையில் இது பொருந்தும்.

கருத்தியல் அறிவு பெற்றவராக மட்டுமே ஒருவர் இருந்தால், அது வெறும் தொழில்நுட்பமாக (technique) சீரழிந்து விடும் ஆபத்து உண்டு. தமிழ்த் தேசியத்திற்கான புரட்சிகரக் கருத்தியல் 'தெரிந்தவராக' மட்டுமே ஒருவர் இருந்து, அதற்குரிய புரட்சிகர அறவியல் அவரிடம் இல்லாது போனால் அவரது அறிவு ஒரு போலித் தோற்றத்தைக் கொடுத்து மக்களைக் குழப்பி விடும்; தமிழ்த் தேசிய அரசியலை சீர்குலைத்து விடும்.

எனவே, கருத்தியல் வேறு, அதைப் புரிந்து கொண்ட தனிநபர் வேறு என்று தேங்கிக் கிடக்காமல், கருத்தியலோடு அந்தத் தனிநபர் இரண்டறக் கலந்துவிட வேண்டும்.

இவ்வாறு இரண்டறக் கலந்துவிட்ட நிலையில், அந்தத் தனிநபரை ''அகநிலை'' அல்லது ''தன்னிலை'' (Subject) என்று அல்தூசர் அழைக்கிறார். (லூயி அல்தூசர், பிரெஞ்சு மார்க்சியர் ஆவார்)

''**கருத்தியல் ஒரு தனிநபர் மீது ஊடாடி அவரை ஒரு அகநிலையாக மாற்றுகிறது**'' என்கிறார் அவர். (Idealogy and State p.44)

தாங்கள் நம்புகிற கருத்தியலோடு ஒன்றித்துப் போனவர்கள் தாம் தீவிரச் செயல்பாட்டில் இறங்க முடியும். துன்பங்களைத் தாங்க முடியும். மக்கள் சார்ந்த வெற்றியில் மகிழ்ச்சி காண முடியும்.

இவ்வாறான அகநிலைகளின் இணைவாக ஒரு தமிழ்த் தேசிய அமைப்பு இருந்தால் தான் இங்கே தமிழ்த் தேசியப் புரட்சி சாத்தியமாகும்.

இந்த இணைவை உண்டாக்க வெறும் மேடைப்பேச்சாளராக இருந்தால் மட்டும் போதாது. இடைவிடாதத் தொடர்பாளராக, தூண்டுபவராக, அமைப்பாளராக இருப்பது அவசியம்.

அதைவிட, புரட்சிகரக் கருத்தாகவே அவர் வாழ வேண்டும். சொல்லுக்கும், செயலுக்கும்- கொள்கைக்கும், வாழ்க்கைக்கும் பிரிக்கமுடியாத நெருக்கமான ஒத்திசைவு இருக்க வேண்டும்.

சே-குவேரா அவ்வாறே வாழ்ந்தார். தாம் நம்பிய விடுதலைக் கருத்தியலுக்காகவே மரணம் அடைந்தார்.

அதனால்தான் ''**சே-குவேராவைப் பற்றி இறந்தகால வாக்கியத்தில் பேசமுடியாது**'' என்று உலகமே கூறுகிறது.

சே-குவேராவின் புரட்சிகரப் பண்பாட்டை- போர்க்குணத்தை நமதாக்கிக் கொண்டு உலகமய- இந்திய மயத் தளையிலிருந்து தமிழ்த் தேசத்தை விடுவிப்போம்.

■

## வாழ்த்துகள்

*ஒசூர் த.தே.பொ.க. தோழர் இரா.முத்தாலு-த.உமா இணையருக்கு 18.5.2008 அன்று ஆண் குழந்தை பிறந்துள்ளது.*

*குழந்தை பிறந்த இனிய செய்தியையொட்டி புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ.500 அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். குழந்தையும் பெற்றோரும் நீடூழி வாழ புதிய தமிழர் கண்ணோட்டம் வாழ்த்துகிறது.*

# ஈழத் தமிழர் வீடு வாங்கத் தடை இனஒதுக்கலில் இன்னொரு வடிவம்

■ தமிழ்த் தேசியன்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், ஈழத் தமிழர்கள், தமிழ் நாட்டில் சொந்தமாக வீடோ நிலமோ வாங்க அனுமதிக்கக்கூடாது என்று அண்மையில் அலுவலர்களுக்கு ஆணையிட்டுள்ளார்.

தில்லியில் இருப்பது தமிழ் இனத்தைப் பகையினமாகக் கருதும் ஏகாதிபத்திய அரசு என்றும், தமிழ்நாட்டில் இருப்பது அதன் கங்காணி அரசு என்றும் த.தே.பொ.க. வரையறுத்திருப்பது எவ்வளவு சரியான கணிப்பு என்பதற்குக் கருணாநிதியின் மேற்படிக் கட்டளை மற்றுமொரு சான்றாகும்.

ஈழத் தமிழர் வேற்று நாட்டவர் ; இந்தியக் குடிஉரிமை பெற்றவர் மட்டுமே தமிழகம் உள்ளிட்ட இந்தியாவில் நிலம் மற்றும் சொத்துகள் வாங்க முடியும் என்ற அரசமைப்புச் சட்ட விதியின் கீழ் இவ்வாறு தமிழக முதலமைச்சர் கட்டளை பிறப்பித்துள்ளார். இந்த அரசமைப்புச்சட்ட விதி, வட அமெரிக்கா, சப்பான், தென்கொரியா, பிரான்சு, பிரிட்டன் போன்ற வெளிநாட்டு முதலாளிகளுக்குப் பொருந்தாதா? அவர்கள் இங்கு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை சொந்தமாக வாங்க உரிமை அளிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர் தமிழக மண்ணை சுத்தக் கிரய சாசனத்திற்கு வாங்கிக் குவிக்கிறார்கள். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக முதல்வர் அன்றாடம் கையொப்பமிட்டு, தமிழ்நாட்டை விற்றுக் கொண்டுள்ளார். இதற்குத் தொழில் வளர்ச்சி என்று, அவர் பெயர் சூட்டுகிறார்.

தமிழர்களைத் தொழில் மற்றும் வணிகத்திலிருந்து வெளியேற்றி, தமிழ் மண்ணையும் அயல் இனத்தார்க்கு விற்கும் தொழில் வளர்ச்சி, யாருக்கான தொழில் வளர்ச்சி? அது தமிழர்களுக்கான தொழில்வளர்ச்சி இல்லை. அயலார்க்கான தொழில் வளர்ச்சி ! தமிழ்நாட்டை அயல் இனத்தாரின் முழுக்காலனியாக மாற்றும் சூழ்ச்சி அது.

ஆனால் தமிழ் இனத்தைச் சேர்ந்த ஈழத் தமிழர்கள் மூன்று செண்ட் வீட்டு மனையோ அல்லது ஒரு வீடோ விலைக்கு வாங்க உரிமை இல்லை என்கிறார் கருணாநிதி.

டாட்டா என்ற வடநாட்டு பார்சி இனத்தைச் சேர்ந்த முதலாளி தூத்துக்குடி மாவட்டத்தில் சற்றொப்ப பதினைந்தாயிரம் ஏக்கர் நிலத்தைச் சொந்தமாக விலைக்கு வாங்க அனுமதித்தார் கருணாநிதி. அங்குள்ள மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

உடனடியாகக் கருணாநிதி தம் கட்சியைச் சேர்ந்த நடுவண் அமைச்சரான இராதிகா செல்வி, தமிழக அமைச்சரான கீதா ஜீவன் உள்ளிட்ட உள்ளூர் கட்சிக் காரர்களைக் களத்தில் இறக்கி 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை டாட்டாவுக்கு விற்கும் படி மக்களிடம் பரப்புரை இயக்கம் நடத்தினார்.

அயல் இனத்தைச் சேர்ந்த மார்வாடி குசராத்தி சேட்டுகள், தமிழகத் தொழில் வணிகத்தை மட்டுமல்ல ; தமிழ் மண்ணையே அபகரித்து விழுங்கிக் கொண்டுள்ளார்கள். அவர்களுக்குத் தடைஇலை. நடைபாவாடை விரித்து வரவேற்று அவர்களுக்குத் தமிழ் மண்ணை விற்கிறது தமிழக அரசு.

இந்திய அரசைப் பொறுத்த வரை, தமிழ்நாட்டை வெளிநாட்டு மற்றும் வடநாட்டு ஏகாதிபத்திய முதலாளிகளுக்கு அடமானம் செய்து தமிழர்களைச் சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக மாற்றிவிடவேண்டும் என்ற பகை உணர்ச்சியுடனும் கொள்கையுடனும் செயல்படுகிறது .

தமிழக அரசு, அது தி.மு.க. தலைமையில் இருந்தாலும், அ.இ.அ.தி.மு.க. தலைமையில் இருந்தாலும், தில்லி ஏகாதிபத்தியத்திற்குக் கங்காணி வேலை பார்த்து, தமிழ்நாட்டை முழுக் காலனியாக மாற்றிக் கொண்டுள்ளது.

1983லிருந்து தமிழ்நாட்டில் ஏதிலிகளாக வாழ்ந்து உழைத்துப் பிழைக்கும் நம் இனத்தைச் சேர்ந்த ஈழத்தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில் குடியுரிமை வழங்கினால் என்ன குற்றம்? வடஅமெரிக்கா , கனடா, பிரிட்டன், பிரான்சு, நார்வே, டென்மார்க், ஆஸ்திரேலியா போன்ற பலநாடுகளில் ஏதிலிகளாகச் சென்ற ஈழத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கியுள்ளார்கள். அவர்கள் அந்நாடுகளில் நிலம் உள்ளிட்ட அனைத்து நிலையான சொத்துகளையும் விலைக்கு வாங்க உரிமை பெற்றிருக்கிறார்கள். உலகத் தமிழ் இனத்தின் தாய் மண்ணான தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்கள் வீடு வாங்கக்

கூடாதா? நிலம் வாங்கக்கூடாதா? அவர்களுக்கு உரிமை இல்லையா?

ஏமாளித் தமிழர்களே, பகைவர்களின் சூழ்ச்சி இன்னுமா புரியவில்லை? கங்காணிகளின் கயமை இன்னுமா விளங்கவில்லை ?

தென் ஆப்ரிக்காவைக் காலனியாக்கிக் கொண்ட வெள்ளையர்கள், மண்ணின் மக்களாகிய கருப்பின மக்களை, தனிக்குடியிருப்புகளில் ஒதுக்கி வைத்து, அவர்களுக்கு சொத்து வாங்க, வாக்களிக்க உரிமை மறுத்தார்கள் அல்லவா? அதை இனஒதுக்கல் என்று உலகம் கண்டித்தது அல்லவா? அதே இன ஒதுக்கல் கொள்கையைத் தான் தமிழ் இனத்திற்கெதிராகத் தமிழ் நாட்டில் இந்திய ஏகாதிபத்திய அரசும், தமிழகக் கங்காணி அரசும் கடைபிடிக்கின்றன.

இன்று ஈழத் தமிழர்கள் நிலம் வாங்கத் தடைவிதிக்கும் ஆட்சியாளர்கள், நாளை, தமிழகத் தமிழர்களையும் , தமிழகத்தில் நிலம் வாங்கத் தடை போடலாம். அதற்கு வெவ்வேறு காரணங்களைக் கூறுவார்கள். வெவ்வேறு பெயர்களைச் சூட்டுவார்கள்.

இவ்வாறு நாம் கூறுவது, ஏமாளித் தமிழர்களுக்கு மிகைக் கற்பனையாகத் தெரியும். பூச்சாண்டி காட்டுவதாகப் புலப்படும்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று திரியும். தமிழர்களிடையே, விழிப்புணர்வு கொண்டுள்ள வீரத்தமிழர்கள் இல்லாமல் இல்லை. அவர்களைப் பார்த்துக் கேட்கிறோம்.

தமிழகத்தில் இயங்கும் இந்திய அரசு நிறுவனங்களான மிகுமின் தொழிற்சாலை, பெட்ரோலியம், தொடர்வண்டித் துறை, வருமானவரி மற்றும் உற்பத்தி வரித்துறை போன்றவற்றில் அவற்றின் மேலாண் அதிகாரிகள் தமிழர்களைப் புறக்கணித்து வேற்று மாநிலத்தவர்க்கு முன்னுரிமை கொடுத்து வேலையில் சேர்த்துக் கொள்ளவில்லையா?

மார்வாரி, குசராத்தி சேட்டுகள் தமிழகத்தில் சென்னை, ஈரோடு உள்ளிட்ட பல நகரங்களில் கட்டியுள்ள அடுக்கு மாடி வீடுகளைத் தமிழர்களுக்கு விற்பது இல்லை ; தமிழர்களுக்கு வாடகைக்கு விடுவதில்லை என்று அறிவிக் கிறார்களே அது உண்மை இல்லையா?

அன்னையின் மடியிலேயே அனாதை ஆக்கப்படும், ஏமாளித் தமிழர்களே, ஈழத்தமிழர்களுக்குத் தானே நிலம் வாங்கத் தடை, வீடுவாங்கத் தடை என்று அக்கறையின்றி, இந்த இனப்பகைச் செயலை அனுமதிக்காதீர். உங்களுக்கும் இதே கதிதான் வரும்.

பாலஸ்தீன அகதிகள் வீடுகள் வாங்க சொத்துகள் வாங்கப் பக்கத்தில் உள்ள அரபு நாடுகள் தடை போடுகின்றனவா? இல்லை. சிரியா, ஜோர்டான், எகிப்பது போன்ற நாடுகளில் பாலஸ்தீன ஏதிலிகள் தஞ்சம்புகுந்து சொந்த நாடுகளில் வாழ்வது போல் சொத்து சுகங்களுடனும் குடியுரிமையுடனும் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் ‘அரபு’ என்ற இனப்பற்று கோலோச்சுகிறது.

ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலம், இந்திக்காரர்களுக்கு ஏற்பட்டிருந்தால், பக்கத்து நாட்டிலிருந்து ஏதிலிகளாக வரும் இந்திக்காரர்களை இந்தியாவில் சொத்து வாங்கத் தடைபோடுவார்களா? அவர்களுக்குக் குடியுரிமை வழங்க மறுப்பார்களா?

காசுமீரப் பார்ப்பனர்களான பண்டிட்டுகள், இந்தியா முழுவதும் ஏதிலிகளாகப் போய் இந்திய அரசின் முழுமையான நிதி உதவியில் செழிப்பாக வாழ்கிறார்கள். அவர்கள் இந்தியாவில் எங்கு தங்கியுள்ளார்களோ அங்கிருந்து கொண்டே காசுமீர்த் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றிருக் கிறார்கள்.


தமிழ் இனத்திற்கு எதிராகத் தான் இந்த இன ஒதுக்கல் கொள்கை செயல்படுத்தப்படுகிறது.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு தற்சார்புள்ள புரட்சிகரத் தமிழ்த் தேசியத்தைக் கையில் ஏந்துவதுதான். தமிழ்த் தேசக்குடியரசு நிறுவுவதுதான்!

ஏகாதிபத்தியக் கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க. கட்சிகளைப் புறக்கணியுங்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்திந்திய இடது சாரிக் கட்சிகளும், மாநிலக்கட்சிகளும் தமிழர்களை, தமிழகத்தை அடமானம் வைக்கும் கங்காணிக்கட்சிகளே.

அவற்றை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். அவற்றிடமிருந்து விலகி நில்லுங்கள். புரட்சிகரத் தமிழ்த் தேசியத்தைக் கையில் ஏந்துங்கள். ■

## மணமக்கள் வாழ்க



த.தே.பொ.க. தோழர் காதாட்டிப்பட்டி (பூதலூர் ஒன்றியம்) கு.சுப்பிரமணியன் திருவாட்டி சிந்தா தேவி ஆகியோர் மகன் செல்வன் **சு.குழந்தைவேலு**வுக்கும், திருவையாறு ஒன்றியம் , அள்ளூர் திரு கண்ணுச்சாமி - திருவாட்டி அமராவதி ஆகியோர் மகள் செல்வி **க.புனிதா**வுக்கும் 23.06.2008 திங்கட்கிழமை பூதலூரில் தோழர் பழ.இராசேந்திரன் (த.தே.பொ.க., தஞ்சை மாவட்டச் செயலாளர்) தலைமையில் இனிதே திருமணம் நடைபெற்றது. தோழர்கள் க.காமராசு, ரெ.கருணாநிதி, ஆ.தேவதாசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500.00 அன்பளிப்பு வழங்கப்பட்டது.

மணமக்கள் நீடு வாழ்க.

# உணவு இறையாண்மையே உணவுப் பஞ்சத்தைப் போக்கும்

■ வான்முகில்

*'விலைவாசியைக் குறைக்க முடியாத 'அரசு' கண்டிப்பாக பதவியை விட்டு கீழிறங்க வேண்டும். காவல்துறையும், ஐ.நா.படையும் எங்களைச் சுட்டுத் தள்ளினாலும் பரவாயில்லை. துப்பாக்கி குண்டுகளால் கொல்லப்படா விட்டாலும் நாங்கள் பட்டினியால் சாகப்போவது உறுதி'.*

- உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எதிராக ஹெய்தியில் போராடுபவர்.

ஹெய்தியில் உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் உணவை வாங்க முடியாமல் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அவர்கள் களிமண்ணுடன் சிறிது எண்ணெயையும், உப்பையும் கலந்து செய்யப்பட்ட களிமண் பிஸ்கட்டுகளை உணவாக உண்டு வருகின்றனர்.

கனடாவில் பன்றிகளின் விலை சந்தையில் மிகவும் குறைந்து விட்டதால், அதன் உற்பத்தியைக் குறைக்க கனடா அரசு கொல்லப்படும் பன்றி



ஒவ்வொன்றிக்கும் 225 டாலர் உதவிப்பணம் தருகிறது. பன்றி வளர்க்கும் விவசாயிகளும் அரசின் உதவியை வேகமாகப் பெற வேகமாகப் பன்றிகளைக் கொன்று வருகின்றனர். கொல்லப்படும் எந்த ஒரு பன்றியும் உணவு விலை உயர்வால் வாடும் ஹெய்திக்கு அனுப்பப்படுவதில்லை. கொல்லப்படும் பெரும்பான்மை பன்றிகள் வீணாக அழிக்கப் படுகின்றன. இதுதான் முதலாளித்துவ விவசாய முறை உருவாக்கியுள்ள மிகக் கொடுமையான நிலை. கனடாவில் உணவுப்பொருட்களின் விலை மிகவும் குறைந்துள்ளதால் அவை அழிக்கப்படுகின்றன. உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் ஹெய்தி போன்ற நாடுகளில் மக்கள் உண்மையில் குப்பையைக் கூட உணவாக உண்கின்றனர்.

உலகவங்கி தந்துள்ள அறிக்கை 2008ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலான கடந்த 36 மாதங்களில் உலகளவில் கோதுமையின் விலை 181 சதவிகிதமும், மொத்த உணவுப் பொருட்களின் விலை 83 சதவிகிதமும் அதிகரித்துள்ளதாகக் கூறுகிறது. இந்தநிலை 2015 ஆண்டுவரை நீடிக்கும் எனவும் இந்த அறிக்கை கூறுகிறது. இந்த உணவு விலை ஏற்றத்தால் பெரும்பான்மை ஏழை மக்கள் பாதிப்படைந்துள்ளனர். ஒரு நாளைக்கு 2 அமெரிக்க டாலருக்கும் குறைவான வருமானமுடைய 250 கோடி மக்கள், தங்கள் வருமானத்தில் 80 சதவிகிதத்தை உணவிற்காக மட்டுமே செலவிட வேண்டியுள்ளது. இதனால் உணவை வாங்க வழியின்றி பசியால் வாடுகின்றனர். உலகம் முழுவதும் உணவு விலை ஏற்றத்திற்கு எதிராக ஏழை எளிய மக்கள் போராடி வருகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் உலகில் 33 நாடுகளில் சமூகக் கொந்தளிப்பும் போராட்டமும் ஏற்படும் என உலக வங்கி தன் அறிக்கையில் கூறுகிறது. எத்தியோப்பியா, ஹோண்டுராஸ், பாக்கிஸ்தான், எகிப்து, மடகாஸ்கர், தாய்லாந்து, இந்தோனேஷியா, நைஜர், பெரு, பிலிப்பைன்ஸ், ஜாம்பியா, ஷெனகல் போன்ற பல நாடுகளில் உணவின்றி வாழும் மக்கள் உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

ஹெய்தியில் விவசாயிகள் பல நூற்றாண்டுகளாக அரிசியை உற்பத்தி செய்து வருகிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் வருடத்திற்கு 1,70,000 டன் அரிசியை உற்பத்தி செய்தனர். இது 95 சதவிகித உள்ளூர் தேவைகளை நிறைவு செய்தது. இந்த விவசாயிகளுக்கு எந்த அரசும் மானியம் தரவில்லை. எல்லா நாடுகளைப் போலவும் ஹெய்தி நெல் விவசாயிகளுக்கான உள்ளூர்ச் சந்தை அரிசி இறக்குமதிக்கு அதிக வரிவிதிப்பதன் மூலம் காப்பாற்றப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டு ஹெய்திக்கு உடனடியாகத் தேவைப்பட்ட கடனைத் தருவதற்கு சர்வதேச நிதிநிறுவனம் அரிசி இறக்குமதிக்கான வரியை 35 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்ற நிபந்தனையை வைத்தது. ஹெய்தியின் அரசு இறக்குமதி வரியை 3 சதவிகிதமாகக் குறைத்தது. வடஅமெரிக்கா தனது அரிசி விவசாயிகளுக்கு மான்யங்கள் தந்து அங்கு உற்பத்தியான அரிசியை ஹெய்தியின் அரிசி விலையில் பாதியளவிற்கு சந்தையில் விற்றது. உள்ளூர் சந்தையில் வடஅமெரிக்க அரிசியுடன் ஹெய்தி அரிசியால் போட்டியிட முடியவில்லை. இதனால் பல்லாயிரக்கணக்கான ஹெய்தி விவசாயிகள் விவசாயத்தைத் தொடர முடியாமல், தங்களது நிலத்தையும் வாழ்வாதாரங்களையும் இழந்தனர்.

இன்று ஹெய்தியில் தேவைப்படும் மொத்த அரிசியில் 75 சதவிகிதம் வடஅமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகிறது. வடஅமெரிக்காவில் உற்பத்தியாகும் அரிசி, ஹெய்தி அரிசியை விட எந்த

**1999-2000 ஆம் ஆண்டில் வட அமெரிக்காவில் உற்பத்தியான அரிசியின் மொத்த மதிப்பு 120 கோடி டாலர். அதே காலகட்டத்தில் அரிசி விவசாயிகளின் வருமானத்திற்கு ஆதரவாக தரப்பட்ட தொகை 130 கோடி டாலர். ஜப்பான், தனது பொருளாதாரத்திற்கு வேளாண்மையிலிருந்து கிடைக்கும் மொத்தப் பங்களிப்பைக் காட்டிலும் கூடுதலான தொகையை மானியமாக விவசாயிகளுக்கு தந்து உதவியுள்ளது.**

விதத்திலும் தரமானதோ, சுவை யானதோ அல்ல. அமெரிக்க விவசாயிகள் ஹெய்தி விவசாயி களைவிட அதிக திறமைசாலிகளும் அல்லர். ஹெய்தியின் அரிசிச் சந்தையை அமெரிக்க அரிசி ஆக்கிரமிப்பதற்குக் காரணமே வடஅமெரிக்கா தனது விவசாயி களுக்கு தரும் மிக அதிகமான மானியமே. 2003ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியாளர்கள் 170 கோடி டாலரை மானியமாகப் பெற்றார்கள். இந்த மானியமும் ஒருசில பெருநில உடைமையாளர்களுக்கும் வேளாண் வணிகக் கூட்டுக் குழுமங்களுக்குமே தரப்பட்டன. இந்த மானியமே அரிசி ஏற்றுமதியாளர்களை அரிசி உற்பத்திக்கான செலவில் 30 முதல் 50 சதவிகிதம் வரை குறைந்த விலைக்கு விற்க வழிசெய்தது.

வடஅமெரிக்கா ஹெய்தி அரசை மிரட்டி உள்நாட்டு விவசாயிகளுக்கு கொடுத்து வந்த பாதுகாப்பை கைவிடச் செய்தது. வடஅமெரிக்கா தனது நாட்டு விவசாயிகளுக்கு தரப்படும் அரசு மானியத்தையும் பாதுகாப்புத் திட்டங்களையும் பயன்படுத்தி ஹெய்தியின் உள்ளூர் அரிசிச் சந்தையை கைப்பற்றியது.

வல்லரசிய நாடுகள் தாராளமயம், உலகமயம் என்ற போர்வையில் மூன்றாம் உலக நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்று கின்றன. ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் ஏற்படும் பஞ்சத்தையும், பேரிடர் களையும் பயன்படுத்தி, உலகமய தாராளமயக் கொள்கைகளைத் திணிக்கின்றன.

உலகமயமும், தாராளமயமும் மூன்றாம் உலக நாடுகளின் விவசாயி களை நிலத்தை விட்டே துரத்திவிட்டன. உணவுப் பொருட்கள் மனிதர்களின் அடிப்படைத் தேவை- உரிமை- என்ற நிலையை மாற்றி அவற்றையும் சந்தைக்கான சரக்காக மாற்றிவிட்டன. அவை வணிகத்தை சீர்குலைக்கும் மானியங்களின் (Trade Distorting Subsidies) வாயிலாக மூன்றாம் உலக நாடுகளின் வேளாண்மையை அழித்து வருகின்றன. 2002 ஆம் ஆண்டு தொடங்கி 10 ஆண்டுகளுக்கு மிகக் குறைவான எண்ணிக்கையிலுள்ள தனது விவசாயிகளுக்குக் கூடுதல் ஆதரவு அளிக்கும் வகையில் 18000 கோடி டாலர் நிதியை ஒதுக்கியுள்ளது. இதில் 1.5கோடி டாலர் மரபீனி மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது.

**அயல்நாடுகளின் போட்டியால் அழியும், ''சொந்த நாட்டின் விவசாயத்தைக் காப்பாற்றுவதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க ஒவ்வொரு நாட்டிற்கும், தேசத்திற்கும் உரிமை உண்டு என்பதை உலக வர்த்தக அமைப்பு கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டுள்ளது.'' இதனைப் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகள் மெக்சிகோவைப் போல 'வேளாண் காப்பு அரணை' உருவாக்க வேண்டும்.**

1999-2000 ஆம் ஆண்டில் வட அமெரிக்காவில் உற்பத்தியான அரிசியின் மொத்த மதிப்பு 120 கோடி டாலர். அதே காலகட்டத்தில் அரிசி விவசாயிகளின் வருமானத்திற்கு ஆதரவாக தரப்பட்ட தொகை 130 கோடி டாலர். ஜப்பான், தனது பொருளாதாரத்திற்கு வேளாண்மை யிலிருந்து கிடைக்கும் மொத்தப் பங்களிப்பைக் காட்டிலும் கூடுதலான தொகையை மானியமாக விவசாயிகளுக்கு தந்து உதவியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் ஒவ்வொரு விவசாயப் பண்ணைக்கும் நேரடியாக தந்துவந்த உதவித் தொகையை ஆண்டிற்கு 3 சதவிகிதம் வீதம் மொத்தம் 20 சதவிகிதம் வரை குறைக்க ஒப்புக் கொண்டது. இதன்படி ஒவ்வொரு பண்ணைக்கும் நேரடியாகத் தரக்கூடிய அதிகபட்ச உதவித் தொகையாக 3 லட்சம் யூரோக்களைத் தருவதற்குத் திட்டமிட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பண்ணைக்குத் தருகின்ற நேரடி உதவித்தொகை, இந்தியாவின் சிலபகுதிகளில் 1000 விவசாயக் குடும்பங்களின் மொத்த ஆண்டு வருமானத்தை விடவும் மிக அதிகமாகும். இது பஞ்சாப் போன்ற வளமான பகுதிகளில் 100 முதல் 200 விவசாயக் குடும்பங்களின் மொத்த ஆண்டு வருமானத்தை விடவும் அதிகமாகும்.

உணவை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து குவிப்பது இன்று உலகளாவிய நடப்பாகிவிட்டது. 2000 ஆம் ஆண்டு உலகளவில் ஒரு டன் கோதுமையின் விலை 73 பவுண்டுகள். இங்கிலாந்தில் ஒரு டன் கோதுமை உற்பத்திக்கான செலவு 113 பவுண்டுகள். இங்கிலாந்து தனது ஒரு டன் கோதுமையை 70 பவுண்டிற்கு உலக சந்தையில் விற்றது. இது ஒரு டன் கோதுமை உற்பத்திக்கான செலவை விட 48பவுண்டுகள் குறைவு. உற்பத்திக்கான செலவை ஈடு செய்ய இங்கிலாந்து அரசு விவசாயிகளுக்கு நேரடியாக மானியம் அளித்தது.

வளர்ந்த நாடுகள் தங்கள் நாட்டின் வேளாண்மையையும், விவசாயிகளையும் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளன.

இந்தியாவிற்கு வந்த உலக வங்கியின் முதன்மைப் பொருளாதார வல்லுநர் நிக்கோலஸ் ஸ்டெர்ன், பணக்கார நாடுகள் தங்கள் விவசாயி களுக்குத் தருகின்ற மானியங்களை மிகப்பெரிய அளவில் செய்யப்படும் பாவச் செயல் என்று குறிப் பிட்டுள்ளார். ஆனால், இந்தியா தனது சந்தையை முற்றிலுமாகத் திறந்து விடாமல் இருப்பதைக் கண்டித்தார். ''வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி கவலை கொள்ளாமல் தங்களது நாட்டில் வர்த்தகத் தடைகளைக் கண்டிப்பாக நீக்க வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

இறக்குமதிக்கான வர்த்தகத் தடைகளையும் வரியையும் உலக வர்த்தக அமைப்பின் விதிப்படி பல நாடுகள் நீக்கின. இதனால் 14 நாடுகளில் குறைந்த விலையில் பெருமளவிற்கு உணவுப்பொருட்கள் இறக்குமதியாயின. இந்தியாவிலும், பிரேசிலிலும் 1990-94 கால கட்டத்திற்கும், 1995-98 காலகட்டத் திற்குமிடையே உணவு இறக்குமதி இரண்டு மடங்கானது. அதிக உணவு இறக்குமதி வேளாண்மையை அடிப் படையாகக் கொண்ட பொருளா தாரத்தை சீர் குலைக்கிறது. உணவு இறக்குமதி உண்மையில் வேலையில்லாத் திண்டாத்தையே இறக்குமதி செய்கிறது. பணக்கார நாடுகளில் அளிக்கப்படும் அதிகபட்ச மானியத்தால் வடஅமெரிக்க கோதுமை, வடஇந்தியாவில் உற்பத்தியாகும் கோதுமையை விட குறைந்த விலையில் கிடைக்கிறது. வடஅமெரிக்காவிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்வது, வடஇந்தியாவிலிருந்து வாங்குவதைக் காட்டிலும் லாபம் தருவதாக உள்ளது. இதனால் வடஇந்திய மாநிலங்களில் கோதுமை உபரியாக மிஞ்சி, திறந்த வெளிகளில் வீணாகக் கெட்டுபோகிறது. வடஇந்திய கோதுமை விவசாயிகள் பாதிக்கப்பட்டு பெரும்பான்மையோர் திவாலாகிவிட்டனர். அரசும் கோதுமையை வாங்கத் தயக்கம் காட்டுவதால் விவசாயிகள் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பணக்கார நாடுகளிலிருந்து மூன்றாம் உலக நாடுகளுக்கு உணவு ஏற்றுமதி தங்கு தடையின்றி அதிகரித்துள்ளது. பல நாடுகளிலும் மரபான வேளாண்மை என்பது உள்ளூர் சமூகத் தேவைகளை நிறைவு செய்யவே உணவு உற்பத்தி செய்தது. தொழில் மயமாக்கப்பட்ட பன்னாட்டுக் கூட்டுக் குழுமங்களின் லாப வேட்டைக்கான வேளாண்மை மரபான வேளாண்மையையும், வேளாண்மை முறைகளையும் அழித் தொழித்துள்ளது. உள்ளூர் தேவை களுக்காக உற்பத்தி என்ற நிலைமாறி வல்லரசிய நாடுகளின் தேவைக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. கென்யநாடு, 25 ஆண்டுகளுக்கு முன்பு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தது. ஆனால் இன்று 80 சதவிகித உணவை இறக்குமதி செய்கிறது. கென்யாவின் மொத்த ஏற்றுமதியில் 80 சதவிகிதம் பணக்கார நாடுகளின் ஆடம் பரத்திற்கான வேளாண் உற்பத்திப் பொருட்களாக உள்ளது. பிரேசில், பராகுவே போன்ற பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் கரும்பு, மக்காச்சோளம் போன்ற உணவுப் பயிர்கள் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் பணக்கார நாடுகளின் கார்களுக்கு எரிபொருள் தயாரிக்க உற்பத்தி செய்யப்படுகின்றன. உயிர்ம எரிபொருள் தயாரிப்பிற்காக அமேசான் காடுகளும் விளை நிலங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கான ஏற்று மதிக்கும் பல தடைகள் விதிக்கப் பட்டுள்ளன. ஏற்றுமதியாகும் பொருட்களுக்கு அதிகவரி விதிக்கப் படுகிறது. மிகவும் கடுமையான சுகாதார நிபந்தனைகளுக்கு ஏற்றுமதியாகும் பொருட்கள் உட்படுத்தப்படுகின்றன.

அர்ஹென்தினாவிலிருந்து ஏற்றுமதியான தேனுக்கு வட அமெரிக்கா 60 சதவிகிதம் வரி விதித்தது. இதனால் தேன் ஏற்றுமதி தடைப்பட்டது. தேன் ஏற்றுமதியை நம்பி வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான அர்ஹென்தினா விவசாயிகள் பாதிப்புக்குள்ளானார்கள். முன்பு அர்ஹென்தினாவின் 'ஆரஞ்சு' ஏற்றுமதிக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. சில வருடங்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பூக்களுக்கும் ஐரோப்பா அதிக வரி விதித்தது. இதனால் வளர்ந்து வரும் பூக்கள் உற்பத்தி தொழிலுக்கும் அதிகமான பாதிப்பு ஏற்பட்டது.

மூன்றாம் உலக நாடுகள் நெறியற்ற, சமத்துவமற்ற வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. உலக வர்த்தக அமைப்பின் கட்டுப்பாட்டுகளுக்கு, சட்ட திட்டங்களுக்கு வேளாண்மையை உட்படுத்தக் கூடாது. வல்லரசிய நாடுகள் தங்கள் நாட்டின் விவசாயத் திற்கும், விவசாயி களுக்கும் தருகின்ற அனைத்து மானியங் களையும் முழுவதுமாக நிறுத்தினால் மட்டுமே மூன்றாம் உலக நாடுகள் விவசாய ஒப்பந்தங்கள் குறித்து பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும். இல்லையெனில், உலகமயச் சூழலில் வல்லரசிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவினால், மூன்றாம் உலக நாடுளின் விவசாயமும், விவசாயி களும் முற்றிலுமாக அழித்து ஒழிக்கப்படுவது உறுதி. வளரும் நாடுகள் தங்களது உணவு இறையாண்மையை இழக்க நேரிடும்.

தொழில்மயமான பணக்கார நாடுகள் குறைந்த எண்ணிகையுள்ள தங்களது விவசாயிகளின் நலனைக் காப்பாற்ற அனைத்து வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கும் பொழுது, விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்ட வளரும்

நாடுகள் தங்களது விவசாயத்தையும், விவசாயிகளையும் காப்பாற்றத் தயங்கக்கூடாது. தங்குதடையற்ற சந்தை, உலகமயம், தாராளமயம் என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளின் உணவுச் சந்தையை வல்லரசுகள் தங்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளன. பன்னாட்டுக் கூட்டுக் குழுமங்களின் லாப வேட்டைக்கான உலகமயத்தை நாம் முற்றிலுமாக மறுதலிக்க வேண்டும். வல்லரசுகளின் பொருளாதார மேலாண்மைக்கும் இராணுவ மேலாண்மைக்கும் நாம் ஒருபோதும் அடிபணியக் கூடாது.

உலக நாடுகளுக்கிடையேயான வணிகம் நியாயமான அடிப் படைகளில், பங்கேற்கும் நாடுகளுக்குப் பயனளிக்கும் வகையில் நடைபெறவேண்டும். நெறிமுறையற்ற போட்டியால் உலகமயச் சூழலில் வடஅமெரிக் காவின் தங்கு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் தனது நாட்டின் விவசாயிகள் அழியாமல் காப்பதற்காக மெக்ஸிகோ ''வேளாண் காப்பு அரணை'' அறிவித்துள்ளது. அயல்நாடுகளின் போட்டியால் அழியும், ''சொந்த நாட்டின் விவசாயத்தைக் காப்பாற்று வதற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க ஒவ்வொரு நாட்டிற்கும், தேசத்திற்கும் உரிமை உண்டு என்பதை உலக வர்த்தக அமைப்பு கொள்கை ரீதியாக ஒப்புக் கொண்டுள்ளது.'' இதனைப் பயன்படுத்தி மூன்றாம் உலக நாடுகள் மெச்சிகோவைப் போல 'வேளாண் காப்பு அரணை' உருவாக்க வேண்டும்.

வடஅமெரிக்கா உட்பட்ட பல வல்லரசிய நாடுகளின் அரசுகள் வேளாண் வணிகக் கூட்டுக் குழுமங்களின் கைப்பாவையாக செயல்படுகின்றன. இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் ஆகிய அமைப்புக்களைப் பயன்படுத்தி கடந்த இருபதாண்டுகளில் உலக அளவில் வேளாண்மையை தங்கள் லாப வேட்டைக்கு சாதகமாக மாற்றி அமைத்துள்ளன. அவை உள்நாட்டு அரசு ஆதரவுடன் பலநாடுகளில் உணவு உற்பத்தி செய்யப்படும் முறையையும், உணவு விநியோகிக்கப்படும் முறையையும் முற்றிலுமாக மாற்றி அமைத்து விட்டன. இந்த மாற்றங்கள் வேளாண் வணிகக் கூட்டுக் குழுமங்களுக்கு அதீத லாபத்தையும், பெரும்பான்மை ஏழை மக்களுக்கு பஞ்சத்தையும், உணவுக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளன.

கார்கில், மான்சாண்டோ, ஏ.டி.எம்., டூபான்ட் உள்ளிட்ட ஆறு மிகப்பெரும் கூட்டுக் குழுமங்களே உலகளவில் வேளாண் உற்பத்தி பொருட்களை வாங்கவும், விற்கவும் முற்றுரிமை பெற்றுள்ளன. இந்த ஆறு கூட்டுக் குழுமங்களே உலகளாவிய உணவுதானிய வணிகத்தில் 85 சதவிகிதத்தை கட்டுப்படுத்துகின்றன. கார்கில், ஏ.டி.எம்., உள்ளிட்ட மூன்று கூட்டுக்குழுமங்கள் உலகின் மக்காச் சோளத்தின் உற்பத்தி- விற்பனை ஆகிய அனைத்து செயல் பாடுகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

2008 ஆம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் உணவுதானிய வணிகத்தில் ஏ.டி.எம். கூட்டுக்குழுமம் சென்ற ஆண்டைக் காட்டிலும் 155 சதவிகிதம் அதிக லாபம் ஈட்டியுள்ளது; கார்கில் 86 சதவிகித நிகர லாபத்தை எட்டியுள்ளது; புஞ்ஜே என்ற குழுமம் 189 சதவிகித லாபம் அடைந்துள்ளது.

விதைகள் மற்றும் பூச்சிக் கொல்லி விற்பனையில் மான் சாண்டோ 54 சதவிகிதம் லாபம் அடைந்துள்ளது. 2008ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் உரவிற்பனை செய்யும் குழுமங்கள் 185 சதவிகிதம் முதல் 1200 சதவிகிதம் வரை கொள்ளை லாபம் ஈட்டியுள்ளன.

இதே காலகட்டத்தில் உலகெங்கிலும் 33 நாடுகளில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து மக்கள் உணவின்றி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகளவில் இன்று வேளாண் தொழில் பசித்த மக்களுக்கு உணவளிக்கவில்லை; பன்னாட்டுக் கூட்டுக் குழுமங்களுக்கு கொள்ளை லாபம் ஈட்டித் தரும் வகையில் வேளாண்மை மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

உணவுத் தட்டுப்பாட்டிற்கு மக்கள் தொகை ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. உண்மையில் மக்கள் தொகை அதிகரித்த விகிதத்தைக் காட்டிலும் இன்றுவரை உணவு உற்பத்தி விகிதம் அதிகமாகவே உள்ளது. ஐ.நா.சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கை உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 2800 கலோரிக்கும் அதிகமான உணவு கிடைக்குமளவிற்கு உற்பத்தி உள்ளது என்று கூறுகிறது. (ஒவ்வொரு மனிதருக்கும் தேவையான சராசரி உணவு 2400 கலோரிகள்) அளவுக்கு அதிகமான உற்பத்தி இருந்தும் 18000 குழந்தைகள் உணவின்றி ஒவ்வொரு நாளும் சாகின்றனர். பெரும்பான்மை மக்கள் உணவின்றி பசியால் வாடுகின்றனர். உலக உணவு உற்பத்தி அமைப்பிற்கு பசியால் வாடுபவர் களுக்கு உணவளிப்பது நோக்கமல்ல; வேளாண் வணிகக் கூட்டுக் குழுமங்களுக்கு அதிகலாபத்தை உண்டாக்குவதே அதன் முதன்மை செயல்பாடாக உள்ளது.

உணவிற்கான இன்றைய நெருக்கடி, முதலாளித்துவப் பொருளாதாரம் வரலாற்றில் முற்றிலுமாக தோல்வி யடைந்துள்ளதன் மிகப்பெரும் மெய்ப்பிப்பு என்கிறார் வெனிசுவேலா குடியரசுத் தலைவர் சாவேஸ்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த போதிலும், ''முதலாளித்துவ அமைப்பு அறிவு பூர்வமான வேளாண்மைக்கு எதிராகவே செயல்படும்... அறிவு பூர்வமான வேளாண்மை முதலாளித்துவ அமைப்புடன் ஒத்து போகவே முடியாது'' என்று ஒரு நூற்றாண்டுக்கு முன்பே காரல்மார்க்ஸ் கூறியுள்ளார். இன்று உணவிற்கும் வேளாண்மைக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மார்க்சின் கூற்றை மெய்ப்பித்துள்ளன.

மனிதத் தேவைகளை மறுத்து லாபத்தை நோக்கமாகக் கொண்டு, பல லட்சக்கணக்கான விவசாயிகளை நிலத்திலிருந்து விரட்டி, மண்ணின் உற்பத்தித் திறனை அழித்து, நீரையும் காற்றையும் நஞ்சாக்கி, ஏறக்குறைய 100 கோடி மக்களை பட்டினிக்கும், சத்துக்குறைவுக்கும் உள்ளாக்கி மனித குலத்திற்கே எதிராக உள்ளது முதலாளித்துவ அமைப்பு.

இந்த முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பதில் கிராமப்புற, நகர்ப்புற உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

வல்லரசுகளின் தங்கு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கு மாற்றாக, வெனிசுவேலா, ஈக்வேடார், பொலிவியா, கியூபா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகள் சுரண்டலற்ற சமத்துவமான அல்பா என்ற பொலிவாரிய மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தைத் தங்களுக்குள் ஏற்படுத்தியுள்ளன. வளரும் நாடுகள் முதலாளித்துவ சமூகத்திற்கு மாற்றாக மனிதத் தேவைகளை முன்னிலைப் படுத்துகின்ற சோசலிச சமூகத்தை உருவாக்கி வருகின்ற நாடுகளுடன் கல்வி, மருத்துவம், விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக இந்திய வடஅமெரிக்க அறிவுசார் முன்முயற்சிக்களுக்கான ஒப்பந்தத்திற்கு மாற்றாக இந்திய- கியூப அறிவு சார் முன்முயற்சிகள் தொடங்கப்பட வேண்டும்.

கியூபாவின் பத்தாண்டுகால அனுபவம் நமக்குத்தரும் பாடம் இதுதான். சிறிய, நடுத்தர அளவு விவசாய நிலங்களில் நீடித்த வேளாண் திணைமவியல் முறைகளைக் கொண்டு செய்யப்படும் வேளாண்மையே அதிக உற்பத்தியைத் தருகின்றது. அது சுற்றுச்சூழலையும் இயற்கையையும் அழிப்பதில்லை. இக்கால வேளாண் ஆய்வுகளும் இந்த உண்மையை மெய்ப்பித்துள்ளன. மூன்றாம் உலக நாடுகள் கியூப அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதுடன் பல வர்த்தக ஒப்பந்தங்களையும் விவசாயம், மருத்துவம், கல்வி, உயிரியல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நீர், நிலம் போன்ற இயற்கை வளங்கள் மக்களின் பொதுச் சொத்தாக்கப்பட வேண்டும். நகரங்களில் சிறுநிலத்தையும் வீணாக்காமல் நகரங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அங்கேயே உற்பத்தி செய்ய வேண்டும். கியூபாவின் நகரிய பண்ணைகள் வளரும் நாடுகள் அனைத்தும் பின்பற்ற வேண்டிய நல்லதோர் முன் உதாரணம்.

வேலையற்ற நகர்ப்புற/ கிராமப்புற இளைஞர்களுக்கு நீடித்த வேளாண் தொழில்நுட்ப முறைகளில் பயிற்சி அளித்து, கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கான உணவு உற்பத்தியில் ஈடுபட அவர்களுக்கு நிலத்தை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். பன்னாட்டுக் கூட்டுக் குழுமங்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக, புது வல்லரசுகளின் புதுக்காலனிய சுரண்டலுக்கு எதிராக தாய் மண்ணை மீட்கும் பெருமித உணர்வை இளைஞர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

காற்று, நீர் போன்று உணவும் மனிதர்களின் அடிப்படை தேவை. உணவு மக்களின் அடிப்படை மனித உரிமை. வேளாண்மையும் வேளாண் தொழில் நுட்பங்களும் மக்களின் உணவுத் தேவைக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். விளை நிலங்களை- உணவுப் பயிர்களை மேட்டுக்குடி மக்களின் கார்களுக்கு எரிபொருள் தயாரிக்கப் பயன்படுத்தக் கூடாது. உணவுப் பயிர்கள் சந்தைக்கான சரக்காக மாற்றப்படக் கூடாது.

மூன்றாம் உலக நாடுகள் உலக வர்த்தக அமைப்பின் சட்ட திட்டங்களுக்கு வேளாண்மையை உட்படுத்தக் கூடாது. வல்லரசிய நாடுகள் தங்கள் நாட்டு விவசாயத் திற்கும், விவசாயி களுக்கும் தருகின்ற அனைத்து வகை மானியங் களையும் நிறுத்தும் வரை வேளாண்மைக்கான எந்த ஒப்பந்தத்திலும் வளரும் நாடுகள் கையெழுத்திடக் கூடாது.

வளரும் நாடுகள் தங்கள் மரபான வேளாண்மையையும் விவசாயிகளையும் பாதுகாக்க அவர்களுக்கு அனைத்துவகை மானியங்களையும் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் வரும் வகையில் அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளே உலக மயச் சூழலில் வளரும் நாடுகளின் உணவு இறை யாண்மையை பாதுகாக்க உதவும்.

ஆதாரக் கட்டுரைகள்:


1. Zero Tolerance For Farm Subsides- Devendar Sharma
2. Food Crisis- World Hunger, Agri business and food Soveringnity Alternative - Ian Angus Socialist Voice Pamphlet
3. The world Food Crisis- Sources and Solutions - Fred Magdoff, Monthly Review

# ஓசூரில் தமிழ்ப்பள்ளி புறக்கணிப்பு
## தெலுங்கு, கன்னடப் பள்ளிகளுக்கு மேலாதிக்கம்
## த.தே.பொ.க. கண்டன ஆர்ப்பாட்டம்.




தருமபுரி, கிருட்டிண கிரி மாவட்டங்களில் எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழக அரசின் தமிழ் வழிப் பள்ளிகள், கல்வி அலுவலர்களால் புறக்கணிக்கப் படுகின்றன. தெலுங்கு, கன்னடப் பள்ளிகள் ஊட்டி வளர்க்கப்படுகின்றன.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட கல்வி அதிகாரிகளும், சட்டப் பேரவை உறுப்பினரும் இவ்வாறு மொழி ஓர வஞ்சனையில் ஈடு படுகின்றனர்.

தமிழ்நாட்டில், தமிழக நிலப்பரப்பு முழுவதிலும் தமிழ்தான் முதன்மை ஆட்சி மொழி. குறிப்பிட்ட எண்ணிக்கையில் சிறுபான்மை மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழுக்கு அடுத்த நிலையில் துணை ஆட்சி மொழியாக சிறுபான்மை மொழி இருக்கலாம் என்பதே அரசின் ஆணை.

ஆனால் பல இடங்களில் தலைகீழாக செயல்படுத்தப்படுகிறது. துணை ஆட்சி மொழி என்ற நிலையில் கூட தமிழ் பயன்படுத்தப்படுவதில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக ஓசூரில் உள்ள ஊராட்சி ஒன்றியத் (தமிழ்) தொடக்கப்பள்ளியைக் கூறலாம். 54 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பள்ளி சிறப்பாக இயங்கிவருகிறது. இதில் 1முதல் 5 வகுப்புகள் இருக்கின்றன.

இத்தமிழ்த் தொடக்கப்பள்ளியில் இப்பொழு துள்ள மாணவர் எண்ணிக்கை 850. ஆசிரியர் எண்ணிக்கை 29 கட்டட வசதியும்இருக்கிறது. ஆனால் இப்பள்ளியை எட்டாம் வகுப்புவரை உள்ள நடுநிலைப்பள்ளியாக மாற்ற மாவட்டக்கல்வி நிர்வாகம் மறுக்கிறது. இப்பள்ளியிலிருந்து ஆறாம் வகுப்பு செல்லும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை 270.

இதே ஓசூரில் ஊராட்சி ஒன்றியத் தெலுங்கு, கன்னடத் தொடக்கப்பள்ளி உள்ளது. அதிலிருந்து ஆறாம் வகுப்பு செல்லும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை 64. அப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல் குமுதேப் பள்ளி, அந்திவாடி, இராம்நகர், அனுமந்தபுரம் ஆகிய ஊர்களில் செயல்படும் தமிழக அரசின் ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் மிக மிகக் குறைவான மாணவர் எண்ணிக்கை கொண்டுள்ள போதிலும் நடுநிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. காரணம் இவை தெலுங்கு, கன்னடம், உருது மொழிப்பள்ளிகளாக இருப்பதுதான்.

ஆனால் 850 மாணவ, மாணவியரைக் கொண்டுள்ள ஓசூர் ஒன்றியத் தொடக்கத் தமிழ்ப் பள்ளி தரம்உயர்த்தப் படவில்லை . கொடுமை என்ன வெனில் தெலுங்கு, கன்னடப் பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து கூடப் பாடப்படுவதில்லை. சுதந்திர நாள், குடியரசு நாள் , ஆசிரியர் நாள் போன்ற முகாமையான நாட்களில் கூட தெலுங்கு, கன்னடப்பாடல்களே பாடப்படுகின்றன.

ஓசூரில் உள்ள உதவித்தொடக்கக் கல்வி அலுவலர் இருவரும் தெலுங்கு மொழியினராக இருப்பதால் அவர்கள் திட்டமிட்டுத் தமிழைப் புறக்கணிக்கின்றனர்.

தெலுங்கு, கன்னட நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை அமர்த்துகிறார்கள். சூசூவாடி, புனுகன் தொட்டி, ஓசூர் சமத்துவபுரம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ் நடுநிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை அமர்த்தவில்லை.

தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் இழைக்கப் படும் இந்த இனத்துரோகத்தை எதிர்த்துத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சார்பில் 18.06.2008 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்குத் தோழர் கோ.மாரிமுத்து, (மேற்கு மண்டலச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமை தாங்கினார்.

தோழர் நடவரசன் கண்டன முழக்கங்கள் எழுப்பினார். தோழர் கா.மா.இளவரசன் (பொதுச் செயலாளர், மனித உரிமைகள்பாதுகாப்புக் கவுன்சில்) கண்டன உரையாற்றினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆண்களும், பெண்களும், மாணவர்களும் திரளாகக் கலந்து கொண்டனர். ■

# சங்கம் - குறித்த சிவத்தம்பி ஆய்வு பிழையானது

■ முனைவர் இரா.சக்குபாய்

**எழுத்து, சொல், பொருள் என வகைப்படுத்தப்பட்ட தமிழ் இலக்கண மரபில் சங்க இலக்கியங்கள் பொருள் இலக்கண அடிப்படையில் உருவானவை. பொருளிலக்கணம் மனித இனத்தின் இம்மை வாழ்வைப் பற்றிப் பேசுவது. அங்கே மறுமைக்கு இடமில்லை. அதன் காரணமாக சங்க இலக்கியங்கள் கடவுளை, மறுமையை மறுத்து அமைந்துள்ளன. கடவுளையும், மறுமையையும் கண்டித்ததால் சங்க இலக்கியங்கள் சமயவாதிகளின் கண்டனத்திற்கும் உள்ளாயின.**

தமிழ் செம்மொழி யாக அறிவிக்கப்பட்டு, சங்க இலக்கியங்களின் தொன்மை பலராலும் ஏற்கப் பட்டுள்ள நிலையில் சங்க இலக்கியங்கள் கி.பி. 1274-ல் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் காலத்தில் தொகுக்கப்பட்டன என்று பேராசிரியர் சிவத்தம்பி கூறுவது வருந்தத்தக்கது.

பேரா. கா.சிவத்தம்பியின் சங்கமும், சங்க இலக்கியமும் எனும் கட்டுரைத்தொடர், தினமணியில் 4, 11.05.2008 ஆகிய இருநாள்களில் வந்தது. தமிழ் மரபு அனைத்துமே காலத்தால் பிற்பட்டன என்றும் சைனம் முதலிய சமயங்களின் வழியாகத் தமிழுக்கு வந்தவை என்றும் மிக மிக அபத்தமாக அக்கட்டுரைத் தொடர் அமைந்திருந்தது. அதற்கான மறுப்பே இக்கட்டுரை.

**சங்கம் :**

சங்கம் என்ற சொல்லை விரிவாக ஆராயும் பேரா. கா.சிவத் தம்பி பல்வேறு நிகண்டுகளிலிருந்து அச்சொல்லிற்கான விளக்கங்களை எடுத்துக்காட்டுகிறார். சங்கம் என்ற சொல் பரந்துபட்ட பொருளைத் தருவதாகக் கூறும் அவர் இச்சங்கம் தமிழோடு தொடர்புபட்டது கி.பி.7-9-ம் நூற்றாண்டுகளில் தான் என்று இறையனார் களவியல் உரையை மேற்கோள்காட்டிச் சொல்வது அவர் இறையனார் களவியலையும் புரிந்துகொள்ள வில்லை என்பதைக் காட்டுகின்றது.

இறையனார் களவியல் ஆசிரிய மாணவர் வழியில் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனாரில் தொடங்கி முசிறி ஆசிரியர் நீலகண்டனார் வரையிலும் (10 தலைமுறையாக) தொடர்ந்து வந்தது என இறையனார் களவியல் இந்த உரையின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. இவ் உரைவரலாறு இவ்வாறு தொடர்ந்தாலும் இதனுடைய தொடக்கம் கடைச்சங்க காலத்திற்கு உரியது என்பதை ஆவணப்படுத்துகிறது.

**சங்கம் - வரலாறு :**

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் வேத மறுப்புக் கொள்கையை மக்களிடம் பரப்பு வதற்காக அறிஞர்கள் சிறு சிறு குழுக்களாகச் செயல்பட்டுள்ளனர். அக்குழுக்கள் சங்கங்கள் என்று அழைக்கப்பட்டன. அச்சங்கங்களின் தலைவர்கள் அமணர்கள் என்று தமிழிலும் சிரமணர் எனப் பாலி, பிராகிருத மொழிகளிலும் குறிக்கப் பட்டுள்ளனர். இப்படிப்பட்ட சங்கங்கள் இந்தியா முழுமையிலும் 363 (முந்நூற்று அறுபத்து மூன்று) இருந்ததாகப் பிராகிருத மொழி யிலுள்ள சைன இலக்கியங்கள் கூறுகின்றன. இவற்றுள் பரவலாக அறியப்பட்டவை 63 சங்கங்கள் என்று பாலிமொழியில் உள்ள பவுத்த இலக்கியங்கள் குறிக்கின்றன. இந்த 63 சங்கங்களுள் புத்தர் காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்தவை 6 சங்கங்கள் ஆகும். அவ் ஆறு சங்கங்களின் தலைவர்கள் வருமாறு:

1. பக்குடுக்கை நன்கணியார் எனும் பக்குடுக்கச் காச்சாயனார்
   - அணுக்கோட்பாடு
2. பூரண காயபர்
   - தற்செயல்கோட்பாடு
3. நரிவெரூஉத் தலையார் எனும் அஜிதகேச கம்பாளர்
   - கடவுள் மறுப்பு அல்லது நாத்திக வாதம்.
4. மற்கலி கோசாலர் எனும் அறப்பெயர் சாத்தன்
   - ஊழ்க்கோட்பாடு அல்லது நியதிவாதம்

5. சஞ்சய பேலட்டபுத்தன்
- ஐயுறவுக் கோட்பாடு எனும் விட்சேப வாதம்
6. மகாவீரர் எனும் வர்த்தமானர்
- சாதுர்யாம சம்வரவாதம் (இன்றைய திகம்பர சைனம்)

மேற்காட்டிய அனைவருமே புத்தரின் சம காலத்தவர்களாக இருந்தாலும் புத்தரைவிட வயதில் மூத்தோர் ஆவர். மேலே சொல்லப் பட்ட ஆறு சங்கங்களுள் இந்தியா முழுமையிலும் மாணவர்களைக் கொண்டிருந்ததும், மிகப்பெரிய செல்வாக்கைப் பெற்றிருந்ததுமான சங்கம் பக்குடுக்கை நன்கணியாரின் சங்கமே என பாலி நூலான சாமண்ண பால சூக்தம் போற்றுகின்றது. இச்சங்கம் பரப்பிய கோட்பாடுதான் எண்ணியம் என்பதாகும். 24 கூறுகளைக் கொண்ட மெய்யியலாக இயல்புக் கோட்பாடு வடிவமைக்கப் பட்டதால் அதை எண்ணியம் என்றனர். இப்பொருளிலேயே சாங்கியம் என்ற வடசொல் வழக்கு உருவாயிற்று. இச்சாங்கியப் பள்ளியில் மாணவராக இருந்தவர் தான் கவுதம புத்தர் என்பது வரலாறு.

மேற்காட்டிய ஆறு சங்கத்தலைவர்களுள்

1. பக்குடுக்கை நன்கணியார்
2. பூரண காயபர்
3. நரிவெரூஉத் தலையார்
4. மற்கலி கோசாலர் எனும் அறப்பெயர் சாத்தன்

ஆகிய நால்வரும் தமிழ் நாட்டவர் என்பதும், அந்நால்வரும் சங்கப் புலவராக இருந்தனர் என்பதும், அந்நால்வரின் பாடல்களும் முறையே புறநானூறு, நற்றிணை, அகநானூறு ஆகிய தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன என்பதையும் பேராசிரியர் க. நெடுஞ்செழியன் தம் ஆய்வு நூலில் நிறுவியுள்ளார்.

மேற்சொல்லப்பட்ட நான்கு சங்கங்களுள் நரிவெரு உத்தலை யாரின் சங்கத்தைத் தவிர மற்று மூன்று சங்கங்களும் இணைந்து உருவானது தான் ஆசீவகம் எனும் சமயமாகும். இச்சமயத்தை நிறுவியவர் மற்கலி கோசாலர் எனும் அறப்பெயர் சாத்தன் ஆவார்.

சைன மரபுப்படி மகாவீரர் 24-வது திருத்தங்கரர். இவர் பரிநிர்வாணமடைந்தது ( வீடு பேறு அடைந்தது) கி.மு. 527 -ம் ஆண்டு. மற்கலி கோசாலர் மகாவீரரோடு ஒன்றாகத் தவமிருந்து, பின் அவரிடமிருந்து விலகி ஆசீவகத்தை உருவாக்கினார். அதன் காரண மாகவே மகாவீரருக்கும் மற்கலிக்கும் இடையே பேரளவில் முரண்பாடுகள் தோன்றின. அம்முரண்பாடுகள் சமய நிலையில் இன்றும் தொடர்கின்றன.

மகாவீரர் கி.மு. 527-ல் வீடுபேறடைந்தார் எனச் சைன மரபு கூறுவதாலும், ஆசீவக சமயம் அவர் வீடுபேறடைவதற்கு முன்பே நிறுவப் பட்டுவிட்டதாலும் ஆசீவகத்தை உருவாக்கிய தலைவர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதாலும் சங்க காலம் என்பதையே கி.மு.6-ஆம் நூற்றாண்டிற்கு முன் என்றும் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிற்கு பின் எனவும் வரையறை செய்யும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்திய மெய்யியல், சமயவியல் ஆகியவற்றை ஆராய்ந்தவர்கள் கடவுள் மறுப்புச் சாங்கியத்திற்கும் ( நிரீச்சுர சாங்கியம்) ஆசீவகத்தின் கடவுள் மறுப்பிற்கும் எடுத்துக் காட்டாகத் தரும் மேற்கோள்

**“ ஓரில் நெய்தல் கறங்க ஓரில்**
**ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப”**

எனத் தொடங்கும் பக்குடுக்கை நன்கணியாரின் புறநானூற்றுப் பாடலே என்பது அக்கருத்தை உறுதிசெய்கின்றது. இவ்வரலாற்றை எல்லாம் கண்டு கொள்ளாமல் வச்சிரநந்தி கி.பி.470-ல் தொடங்கிய திரமிள சங்கம் தான் தமிழ்ச் சங்கங்களுக்கு அடிப்படை என்பது பேரா. சிவத்தம்பியின் உள் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது என்று கூறாமல் வேறு எப்படிச் சொல்வது?

புத்தர் காலத்திற்கு முன்பே வேத, வைதீகத்திற்கு எதிரான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல சங்கங்கள் தோன்றின. அப்படித் தோன்றிய சங்கங்களுள் மிகப்பெரியதும் இந்தியா முழுமையிலும் பரவியிருந்ததுமான ஒன்று தமிழ்நாட்டுக்காரரின் தலைமையில் இயங்கியது என்றால் சங்கம் என்ற அமைப்பின் மூல வடிவமே தமிழகத்திற்கு உரியது

**‘ தமிழ் ஆய்வுலகில் அமணர் சைனர் பற்றிய பொருள் குழப்பம் நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. சமணர் என்ற சொல் அமணர் என்ற தமிழ் வடிவத்தின் திரிபாகும். இச்சொல் வைதீக எதிர்ப்பாளர் என்ற பொருளில் ஆளப்பட்டாலும் தமிழ் இலக் கியங்களில் இச்சொல் ஆசீவகர்களை மட்டுமே குறித்துள்ளது. ஆசீவகர்களை அமணர்கள் என்றும் சைனர்களை அருகர்கள் என்றும் பெரிய புராணம் இவ்விருவரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. ’**

என்பது, புலப்படவில்லையா?

**இறையனார் களவியல் :**

இறையனார் களவியல் உரையில் சங்கத்தோடு சிவனையும், முருகனையும் இணைக்கின்ற முயற்சி ஒரு தற்காப்பு முயற்சியாகும். எழுத்து, சொல், பொருள் என வகைப் படுத்தப்பட்ட தமிழ் இலக்கண மரபில் சங்க இலக்கியங்கள் பொருள் இலக்கண அடிப்படையில் உருவானவை. பொருளிலக்கணம் மனித இனத்தின் இம்மை வாழ்வைப் பற்றிப் பேசுவது. அங்கே மறுமைக்கு இடமில்லை. அதன் காரணமாக சங்க இலக்கியங்கள் கடவுளை, மறுமையை மறுத்து அமைந்துள்ளன. கடவுளையும், மறுமையையும் கண்டித்ததால் சங்க இலக்கியங்கள் சமயவாதிகளின் கண்டனத்திற்கும் உள்ளாயின. இதனைக் கண்டித்து மறுத்தவர்களுள் முதலிடத்தில் இருந்தவர்கள் சைவர்கள் என்பதே வரலாற்று உண்மை. சங்க இலக்கியங் களைப் படிக்கக்கூடாது என்பது சைவர்கள் விதித்திருந்த தடையாகும். இத்தடையின் தன்மையினை வையாபுரிப்பிள்ளை தொகுத்த "சங்க இலக்கியம்" நூல் தொகுதி முன்னுரையில் சைவ சமாஜத்தைச் சார்ந்த பாலசுப்ரமணியம் எடுத்துக் காட்டியுள்ளார். இப்பின்னணியில் சைவர்களுக்கு நடுவே சங்க இலக்கியங்களைப் புறக்கணிக்கக் கூடாது என்ற எண்ணமும் உருவாகி யுள்ளது. அதன் விளைவாகச் சங்கப் புலவர்களான கபிலர், பரணர், நக்கீரர் முதலான 49 கடைச்சங்கப் புலவர்களைச் சிவனின் அடியவர் களாகப் போற்றும் மரபு ஒன்று சைவ சமயத்திற்கு உள்ளேயே கிளைத்தது. அம்மரபின் அடையாளத்தை நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் தொகையில் காணலாம்.

**"அருள் நமக் கீயும் திருவால வாயரன் சேவடிக்கே**
**பொருளமைந் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"**

என நம்பியாண்டார் நம்பி பாடிய பாடல் அம்முயற்சிக்கான சான்றாகும்.

சங்கப்புலவர்களைச் சிவபெருமானின் அடியவர்களாக நம்பி பாடுபடுவதற்கான ஒரு சூழலை உருவாக்கும் வகையிலேயே கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளிலக்கணமாகிய இறையனார் களவியலுக்கு அமைந்த உரையில் சிவனும், முருகனும் இடம் பெற்றுள்ளனர் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் மறுப்பாளர்கள் தங்கள் இலக்கியங் களைக் காப்பாற்றுவதற்காக இப்படிப் பட்ட தற்காப்பு முயற்சிகளில் ஈடுபடுவது உண்டு. கணி ஆதன் எனப்படும் கணாதர் இயற்றிய சிறப்பியம் எனப்படும் வைசேடிகமும், கவுதமர் இயற்றிய ஞாய சாத்திரமும் முறையே அணுக் கோட்பாட்டையும், தருக்க வியலையும் விளக்குவன. இவ்விரு கோட்பாடுகளுமே கடவுள் நம்பிக்கைக்கும் வைதிக நெறிக்கும் எதிரானவை. ஆனாலும் அவ் விரண்டு நூல்களிலும் கடவுளையும் வேதத்தையும் போற்றக்கூடிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு இவ்விரு கூறுகளும் அந்நூல்களில் இடம் பெற்றுள்ள மைக்கான காரணத்தை ஆராய்ந்த இந்திய மெய்யியல் அறிஞர் தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா கணி ஆதனும், கவுதமரும் தங்களுக்கு உடன்பாடில்லாத செய்திகளைத் தாங்கள் நம்புவது போலப் பாசாங்கு செய்துள்ளார்களெனத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டி யுள்ளார். அப்படிப்பட்ட ஒரு பாசாங்காகத்தான் மதுரை கணக் காயனார் மகனார் நக்கீரனார் தொடங்கிய இறையனார் களவியல் உரையில் சிவனும் முருகனும் இடம் பெற்றுள்ளதை நாம் காண வேண்டும். அப்படிப் பாசாங்கு செய்து கூட நக்கீரர் காப்பாற்றப்படவில்லை, தண்டிக்கப்பட்டார். அதுவும் கடுமை யாகவே தண்டிக்கப்பட்டார். அத்தண்டனையின் கதைதான் தருமி நக்கீரர் மோதலில் சிவன் தலையிட்டதாக வருவது.

**அமணர் -சைனர்**

தமிழ் ஆய்வுலகில் அமணர் சைனர் பற்றிய பொருள் குழப்பம் நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. சமணர் என்ற சொல் அமணர் என்ற தமிழ் வடிவத்தின் திரிபாகும். இச்சொல் வைதீக எதிர்ப்பாளர் என்ற பொருளில்

## மணமக்கள் வாழ்க



தஞ்சை நகரம் வடக்குவாசல் த.தே.பொ.க. தோழர் தமிழ்ச் செல்வன் தங்கையும் திரு.மா.இராசு, திருவாட்டி இரா.விசயலட்சுமி மகளுமான செல்வி **மணிமேகலைக்கும்** புதுக்கோட்டை திரு.செல்லையா- திருவாட்டி இராசலட்சுமி மகன் செல்வன் **வீரையாவுக்கும்** 6.6.2008 அன்று புதுக்கோட்டையில் இனிதே திருமணம் நடந்தது. அதையொட்டி 7.6.2008இல் தஞ்சையில் நடந்த வரவேற்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500 மணமக்கள் சார்பில் அன்பளிக்கப்பட்டது.

மணமக்கள் நீடு வாழ்க!

ஆளப்பட்டாலும் தமிழ் இலக் கியங்களில் இச்சொல் ஆசீவகர்களை மட்டுமே குறித்துள்ளது. ஆசீவகர்களை அமணர்கள் என்றும் சைனர்களை அருகர்கள் என்றும் பெரிய புராணம் இவ்விருவரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. அத்துடன் ஆசீவகர்களை அமணர்கள் என்றும் சைனர்களைச் சாதி அமணர் என்றும் பிரித்து அடையாளப்படுத்தும். இப்படி பெரியபுராணம் ஆசீவகர் களையும் சைனர்களையும் வேறு படுத்திக் காட்டுவதை முதன்முதலாக ஆராய்ந்து உரைத்தவர் பேரா. முனைவர் டி.வி. மகாலிங்கம் ஆவார். தமிழ் நாட்டிலுள்ள சங்க காலக் கற்படுக்கைகள் யாவும் ஆசீவகர் களுக்கு உரியன என்பதைச் சான்றுகளோடு நிறுவியவர் அவரே ஆவார். ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மையை அவர் வெளிப்படுத்தியிருந்த போதிலும் தமிழ் ஆய்வுலகம் அவரை இருட்டடிப்புச் செய்து வந்துள்ளது. இந்த இருட்டடிப்பில் பேரா.கா. சிவத்தம்பியும் பங்கு பெற்றதை அவரின் கட்டுரைத் தொடர்கள் உறுதி செய்கின்றன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சைனர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து விட்டார்கள் எனக்கூறும் பேரா.சிவத்தம்பி கி.பி. 470-ல் மதுரையில் வச்சிரநந்தி தொடங்கிய திரமிள சங்கம்தான் தமிழ்ச் சங்கங்களுக்கெல்லாம் மூலவடிவம் எனக் கூறுவது வேடிக்கையாக இருக்கின்றது. அப்படியானால் கி.மு. 300-ல் இருந்து கி.பி. 470 வரையிலான இந்த நீண்ட நெடிய காலகட்டத்தில் சைனர்கள் தமிழ் நாட்டில் என்ன செய்து கொண் டிருந்தார்கள்? இக்கேள்விக்கான விடையை பேரா. சிவத்தம்பியும் அவரைப்போன்ற பேரறிஞர்களும் விளக்க வேண்டியது வரலாற்றுக் கட்டாயமாகும்.

வச்சிரநந்தி என்ற பெயருடைய சைனத்துறவி தொடங்கிய திரமிள சங்கத்தின் பெயரிலேயே தமிழ் இல்லை. அப்படியிருக்க அவர்கள் தமிழ் மொழிக்கு எப்படித் தொண்டாற்றி யிருக்க முடியும்? தமிழ் இலக்கியங்களுக்கு அவர்கள் எப்படிப் பங்களித்திருக்க முடியும் ? தமிழ் இலக்கண இலக்கியத்திற்கு ஆசீவகர்கள் வழங்கிய அறிவுக் கொடைகளை எல்லாம் சைனர் களுக்கு உரியனவாகச் சொல்லும் நிலை தொடர்கின்றது என்பதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. நீலகேசி, பெருங்கதை, சீவக சிந்தாமணி முதலான சில நூல்களே சைனர்களால் அதுவும் திகம்பர சைனர்களால் உருவாக்கப் பட்ட நூல்களாகும். மற்றபடி அவர்களின் பங்களிப்பு என்பது பலரும் கருதிக்கொண்டிருப்பது போல அல்ல.

ஆய்வு என்பது திறந்த மனத்தோடு செய்யவேண்டிய அறிவார்ந்த தொண்டு. தரவுகளைத் திரட்டி அத்தரவுகளின் அடிப் படையில் முடிவுக்கு வருவதே சிறந்த ஆய்வின் அடையாளம். அந்த ஆய்வு நேர்மை இன்றைக்குப் பலரிடம் காணப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும். பிறழ உணர்தலும், ஒன்றை மற்றொன்றாகத் திரித்து உணர்தலும் ஆய்வுலகைக் கவ்வியுள்ள இருட்படலம். அவ் இருட்படலத்தை நீக்கி ஒளி காண்போம்.

■

## சே-குவேரா பிறந்த நாள் கருத்தரங்கம்



### சிதம்பரம்

**தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் சிதம்பரம் ஆறுமுக நாவலர் நிலையத்தில் சே-குவேரா பிறந்த நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழக மாணவர் முன்னணி தலைவர் ப.அன்புதாசன் தலைமை தாங்கினார். தமிழக இளைஞர் முன்னணி அமைப்பாளர் ச.சந்திரகுமார் முன்னிலை வகித்தார். சே-குவேராவின் தியாகம் குறித்தும், இன்றைய தமிழக அரசியல் குறித்தும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தலைமைச் செயற்குழு உறுப்பினர் கி.வெங்கட்ராமன் உரையாற்றினார்.**

**சே-குவேரா வாழ்வும், புரட்சியும் என்ற 'குறும்படம் காண்பிக்கப்பட்டது.**

**நிறைவாக நகரச் செயலாளர் கு.சிவப்பிரகாசம் நன்றி கூறினார். ஏராளமான இளைஞர்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.**

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் பெசன்ட் அரங்கம் அருகே, சேகுவேராவின் 80-வது ஆண்டு பிறந்த நாள் விழாக்கூட்டம் தோழர் பழ. இராசேந்திரன் (த.தே.பொ.க மாவட்டச் செயலாளர்) தலைமையில் நடந்தது. தோழர்கள் பெ. மணியரசன், நா. வைகறை, குழ. பால்ராசு, இராசு.முனியாண்டி, க. காமராசு, கெ.செந்தில்குமார், க.வெங்கடேசன் ஆகியோர் உரை யாற்றினார். சேகுவேராவின் படம் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டது.

### ஓசூர்

'சே'வின் பிறந்த நாள் நிகழ்வு 22.06.2008 ஞாயிறு அன்று ஓசூர் சங்கீத் அரங்கத்தில் த.தே.பொ.க. சார்பில் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக ''சே குவேரா'' ஆவணப்படம் திரையிடப்பட்டது. தோழர் முருகானந்தம் வரவேற்றார். தோழர் சிவபெருமாள் தலைமை உரையாற்றினார்.

தோழர் நடவரசன் சே-வின் வாழ்வையும் தமிழ்த் தேசியத்தின் தேவையையும் இணைத்து எழுச்சியுடன் கவிவீச்சு வழங்கினார். ம.தி.மு.க. தோழர் சங்கர் வாழ்த்துரைத்தார். நிறைவில் த.தே.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் பெ.மணியரசன் செறிவான சிறப்புரை ஆற்றினார்.

தோழர் முருக பெருமாள் நன்றி கூறினார். திரளானோர் கலந்து கொண்டனர்.

# கோலார் தங்கவயல் தமிழகத்தைச் சேர்ந்ததே வரலாற்றுச் சான்றுகள்

■ புலவர் முத்து எத்திராசன்

பிற்காலச் சோழர் அரசர்களிலேயே மிகவும் சீரும் சிறப்பும் கொண்டு பேரரசனாக விளங்கியவன் முதலாம் இராசராச சோழனாவான். இவன் பல போர்களைக் கண்டவன். தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை நன்கு விளக்கும் மெய்க்கீர்த்தியை இனிய தமிழ்மொழியில் அகவற்பாவினால் அமைத்துத் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்ட பெருவேந்தன் இராசராச சோழனாவான்.

இவ்வேந்தன் இரண்டாம் பராந்தக சோழனுக்கு அவன் பட்டத்தரசியாகிய வானவன் மாதேவிபாற் பிறந்த அரும் பெறற் புதல்வன் ஆவன். இவனுடைய இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பது.

இவன் தன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகிய கி.பி. 988-ல் சேரனையும் அவனுக்கு உதவி புரியவந்த பாண்டியனையும் காந்தளூர்ப் போரில் புறங்கண்டு வாகை சூடினான் என்பதை,

"*திருமகள் போல பெருநிலச் செல்வியும்*
*தனக்கே உரிமை பூண்டமை மணக்கொள*
*காந்தளூர் சாலை கலமறுத்தருளி*
*வேங்கை நாடும் கங்கபாடியும்*
*நுளம்ப பாடியும் தடிகை வழியும்*"

எனத் தொடங்கும் கல்வெட்டால் அறியலாம்.

அவ்வெற்றியின் பயனாக இவன் அவ்வேந்தர்களின் இரு முடிகளையும் கைப்பற்றிக்கொண்டு மும்முடிச் சோழன் என்னும் சிறப்புப் பெயரும் எய்தினான். அந்நாள் முதல் அரசர்க்கரசன் என்னும் பொருள்படும் '**இராசராசன்**' என்னும் சிறப்புப்பெயரும் பெற்று அந்நாள் முதற்கொண்டு இராசராசன் என்று அனைவராலும் அழைக்கப் படலானான்.

அடுத்து இவன் மெய்க் கீர்த்தியில் வரும்,

"**வேங்கை நாடும் கங்கபாடியும்**
**நுளம்ப பாடியும் தடிகை வழியும்**" - என்பதைப் பற்றிய செய்திகளாம். அவற்றுள் நாம் இப்போது கங்கை பாடியைப் பற்றிய செய்தியைக் காண்போம்.

## குவளாலபுரத்தை (கோலார்) ஆண்ட கங்க அரசர்கள்

கங்கபாடி என்பது மைசூர் நாட்டின் தென்பகுதியும் சேலம் மாவட்டத்தின் வடபகுதியும் தன்னகத்துக் கொண்ட கங்கநாடாகும். அதன் தலைநகர் தலைக்காடு என்பது. அந்நாட்டைக் குவளாலபுர பரமேசுவர்களான மேலைக் கங்கர்கள் ஆண்டு வந்தனர்.

நுளம்ப பாடி என்பது மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதியையும் பல்லாரி மாவட்டத்தையும் தன்பாற் கொண்ட நாடாகும். பல்லவருள் ஒரு பிரிவினரான நுளம்பர்கள் அதனை ஆண்டு வந்தனர். தடிகைபாடி என்பது மைசூர் நாட்டில் உள்ள ஒரு பகுதியாகும்.

வேங்கைநாடு என்பது கிருஷ்ணை, கோதாவரி ஆகிய இரு பேராறுகளுக்கும் இடையில் முற்காலத்தில் அமைந்திருந்த ஒரு நாடாகும்.

இப்பொழுது முதலாம் இராசராசசோழனுடைய ஆட்சி காலத்தில் கங்கபாடியை ஆண்ட அரசனைக் காண்போம்.

சிதம்பரம் வட்டத்தில் காட்டுமன்னார் கோவில் அருகில் உள்ள உடையார்குடியில் கோயில் கொண்டுள்ள அனந்தீசுவரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு, (S.I.I.No.XIII) எண்.61.

"**ஸ்வஸ்த ஸ்ரீ கோவீர ராஜகேசரி வன்மர்க்கு யாண்டு மூன்றாவது, உடையார் பெருந்தரத்து கங்க ஈசாயிரத்துக் குவளாலத்துக் கங்கன் அம்பலவன் கண்டராதித்தனாகிய மும்முடி சோழ விழுப்பரையன், வடகரை பிரமதேயம் ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து திருவனந்தீசு வரத்துப் பரமசுவாமி திருமுற்றத்திலே சந்திராதித்தவல் பிராமண போஜனம் செய்வதற்கு வைத்த கலம் ஐம்பது**" என்பதைக் கூறியபின் ஐம்பத்தாறு பிராமணர் களுக்கு நாள்தோறும் சோறு போடுவதற்காக வேண்டி காசு எழுநூற்றைம்பதும் கொடுத்ததோடு பத்தொன்பது வேலி நிலமும் தானமாகக் கொடுத்த செய்தியைக் காண்கிறோம்.

இதைக் கொடுத்தவன் '**உடையார் பெருந்தரத்து கங்க ஈசாயிரத்துக் குவளாலத்துக் கங்கன் அம்பலவன் கண்டராதித்தனாகிய மும்முடி சோழ விழுப்பரையன்**' என்பவனாவான். இவன் தான் முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் ஆண்ட கங்க அரசனாவான்.

இவன் பெயர் முன் வரும் ஊர் குவளாலபுரம் என்பதாகும். இது கங்கநாட்டின் தலைநகரமாக இருந்துள்ளது. அதுவே இன்று கர்நாடகநாட்டில் காணப்படும் கோலார் எனப்படும் ஊராகும். இது முதலாம் ராசராசன் காலத்திலிருந்து மூன்றாம் குலோத்துங்கன் காலம் வரையிலும் தமிழர் வாழ்ந்த தமிழ்ப்பகுதியாக இருந்துள்ளதை வரலாறு கூறுவதைக்கொண்டு காண்போம்.

போசள மன்னனான பிட்டிக விஷ்ணுவர்த்தனன் என்பவன்

கி.பி.1100 முதல் 1152 வரை ஹொய்சள நாட்டை ஆண்டவன். இவன். கி.பி. 1116-ல் தலைக்காடு கொண்ட அரசன் (The cholas vol-11-Page 42) என்று தன்னைக் கூறிக்கொள்வதால் கங்கபாடி நாட்டின் தலைநகராகிய தலைக்காட்டை அவன் முதற் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) காலத்தில் கைப்பற்றிக் கொண்டான் என்பதை அறிகிறோம். மேலும் அதே ஆண்டில் அவன் தலைக்காடு, குவளாலபுரம் ( கோலார்) என்னும் நகரங்களிலிருந்து கங்கபாடி நாடு முழுவதையும் அரசாண்டான் என்பது அவன் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. (Ibid page 42)

அடுத்து சோழவேந்தனான மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218) என்பவன் சோழ இராச்சியத்திற்குச் சக்கரவர்த்தியாக முடி சூட்டப்பெற்றான்.

இவன் காலத்தில்தான் சேக்கிழார் அடிகளைக் கொண்டு பெரியபுராணம் என்று வழங்கப்படும் திருத்தொண்டர் புராணம் எழுதப்பெற்றது. மேலும் நேமிநாதம், வச்சணந்திமாலை, வெண்பாப் பாட்டியல் போன்ற இலக்கண நூல்களை இயற்றிய குணவீர பண்டிதர் என்பார் இவ்வரசன் காலத்தில் வாழ்ந்த புலவராவார்.

தமிழிலக்கணப் பயிற்சி பெற விரும்புவோர் யாவரும் முதலில் கற்கத் தொடங்கும் **''நன்னூல்''** என்ற இலக்கண நூலை இயற்றிய பவணந்தி முனிவர் என்பார் இவ்வேந்தன் காலத்தில் வாழ்ந்த புலவர் ஆவார்.

நம் மூன்றாம் குலோத்துங்கனுக்குக் கப்பம் செலுத்திக்கொண்டு கங்கநாட்டில் அரசாண்ட அமராபரணசீய கங்கன் என்னும் கங்க அரசன் வேண்டு கோளை ஏற்று இம்முனிவர் நன்னூல் இயற்றினார் என்பது அந்நூல் சிறப்புப் பாயிரத்தால் அறியப்படுகிறது. இவர் மைசூர் நாட்டில் உள்ள திருமுக்கூடல் நரசிபுரம் வட்டத்தில் காணப்படும் சந நாதபுரத்திலிருந்த ஒரு சமண முனிவர் ஆவர்.

கங்க அரசனான சீயகங்கன், காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பர நாதர்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காக 302 பசுக்களையும் ஒரு காளைமாட்டையும் அறக் கொடையாக அளித்துள்ளான் என்பதை, தென்னிந்தியக் கல்வெட்டுத்தொகுதி ஆறில் உள்ள 832 ஆம் எண்ணுள்ள கல்வெட்டு நமக்கு எடுத்துக்கூறுகிறது. அக்கல்வெட்டு வருமாறு : ''*திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்கச் சோழத் தேவர்க்கு யாண்டு 27 -ஆவது ... காஞ்சிபுரத்து உடையார் திருவேகம்ப முடையார்க்கு.. ஸ்ரீமத் குவளாலபுர பரமேஸ்வரன் கங்க குலோற்பவன் சீயகங்கன் அமராபரணனான திருவேகம்பமுடையானேன் வைத்த திரு நுந்தாவிளக்கு ஒன்றுக்குப் பசு 302, ரிஷபம் ஒன்று*''.

சீயகங்கனுடைய கல்வெட்டுக்கள் மூன்றாம் குலோத்துங்கனது மூன்றாம் ஆட்சியாண்டு முதல் 34-ம் ஆண்டு முடிய நம் தமிழகத்தில் காணப்படுகின்றன.

சீயகங்கனுடைய பட்டத்தரசி அரியபிள்ளை என்பாள் கி.பி.1212-ல் திருவல்லத்திலுள்ள சிவன் கோயிலில் இரண்டு சந்தி விளக்குகள் எரிப்பதற்கு நிவந்தம் அளித்துள்ளமை அவ்வூர்க் கல்வெட்டால் ( S.I.I.Vol III No.62 ) அறிகின்றோம்.

கி.பி. 1181-ல் இவன் புதல்வன் அருங்குன்றைப் பிள்ளையான் சீயகங்கன் என்பான் திருக்காளத்தி இறைவர்க்கு ஒரு நந்தா விளக்கு எரிப்பதற்காகவேண்டிச் சாவா மூவா பசுக்கள் அளித்துள்ளான் என்பதைக் ( S.I.I.Vol VIII No.149 )கூறுகிறது.

இவ்வமராபரண சீயகங்கன் திருக்காளத்தி, காஞ்சி ஆகிய கோயில்களில் நந்தாவிளக்குகள் வைத்துள்ளான் என்பதைக் காணும்போது இவன் சிறந்த சிவபத்தன் என்பது தெளிவாகிறது.

அடுத்து, தொன்று தொட்டுவரும் பெருமையை உடையவன், வீரக்கழலும், வெண் கொற்றக் குடையும் மழைபோல் வரையாது கொடுக்கும்

## தஞ்சையில் நூல் வெளியீட்டு விழா
## பழ.நெடுமாறன் சிறப்புரை

திருவள்ளுவர் தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் தஞ்சையில் 13.6.2008 அன்று இருநூல் வெளியீட்டு விழா நடந்தது.

தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயலாளர் திரு. அய்யனாபுரம் சி.முருகேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தி.அழகிரிசாமி எம்.ஏ. அவர்கள் எழுதிய ''**படகுப்பயணமும் பட்டினிப் போராட்டமும்**'' என்ற நூலினை தமிழர் கண்ணோட்டம் ஆசிரியர் தோழர் பெ.மணியரசன் வெளியிட பேராசிரியர் அரங்க சுப்பையா, தோழர் நாக.இரகுபதி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

முனைவர் பழ.கோமதிநாயகம் எழுதிய ''**தமிழக ஆறுகளில் மணல் கொள்ளை**'' என்ற நூலினை பேராசிரியர் த.செயராமன் வெளியிட பேராசிரியர் கணேசமூர்த்தி பெற்றுக் கொண்டார்.

திரு. தி.அழகிரிசாமி, முனைவர் பழ.கோமதிநாயகம் ஆகியோர் ஏற்புரையாற்றினர்.

உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக தோழர் பொன்.வைத்தியநாதன் வரவேற்புரையாற்ற முடிவில் தோழர் உ.லெனின் நன்றி கூறினார்.

வள்ளன்மையும், செங்கோல் ஆட்சியும் உடையவன், போரில் ஏற்படும் புண்களை அணியாகக் கருதுபவனாகிய சீயகங்கன் வேண்டிக்கொண்டதால் சனகாபுரியில் வாழும் சன்மதி முனிவரின் மைந்தனான பவணந்தி முனிவர் நன்னூல் என்னும் சிறப்புடைய இலக்கண நூலை எழுதினார்.

*“கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்*
*திருந்திய செங்கோல் சீய கங்கன்*
*அருங்கலை விநோதன் அமர் ஆபரணன்*
*மொழிந்தனன் ஆக முன்னோர் நூலின்*
*வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன்*
*பொன்மதில் சனகைச் சன்மதி முனி அருள்*
*பன்னரும் சிறப்பின் பவணந்தி*
*என்னும் நாமத்து இருந்தவத்தோனே”*

-என்று கூறப்பட்டுள்ள நன்னூல் சிறப்புப் பாயிரத்தின் வாயிலாக நம் சீயகங்கன் சிறந்த தமிழ்ப்பற்று மிக்கவன் என்பதைக் காண்கிறோம். அவன் காலத்தில் தமிழ்நாடு குணகடல் ,குமரி, குடகம், வேங்கடம் ஆகிய எல்லைகளைக்கொண்டுள்ளதைக் குறிப்பிடுகிறது.

கிழக்கே வங்காளக் கடலும், தெற்கே குமரிமுனையும், மேற்கே அரபிக்கடலும் , வடக்கே வேங்கட மலையும் தமிழ்நாட்டின் எல்லைகளாக இருந்தன. ஆனால் காலமாற்றத்தால் கன்னடம், தெலுங்கு, மலையாளம் தோன்றிய பின்பு தமிழ்நாட்டின் எல்லைகள் சுருங்கின. அத்துடன், தமிழ் பேசும் இடங்களாக விளங்கிய வெண்கலூர் (பெங்கலூர்) குவளாலபுரம் (காலார்) நெல்லூர், சித்தூர், தேவிகுளம், பீர்மேடு போன்ற இடங்களும் அரசியல் குணக்கேடர்களால் தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளமையைக் காணும்போது நம் நெஞ்சம் எரிகிறது. இப்படிப்பட்ட நிலையில் மேலும் நாம் இருக்கின்ற இடத்தையும் இழக்காமல் இருக்க நாம் உறுதியுடன் இருந்து நிலை நாட்டுவோம். ■

# உழவர் போராளி இரத்தினசாமிக்கு வீரவணக்கம்



உழவர் போராளி கு.இரத்தினசாமி, திரு நாராயணசாமி தலைமையில் தமிழக விவசாயிகள் சங்கம் நடத்திய மாபெரும் உழவர் போராட்டத்தில் கிளைத்தெழுந்த போராளியாவார். 1970களில் மின் கட்டண உயர்வை எதிர்த்து நடந்த போராட்டம், கடன் தள்ளுபடி போராட்டம், போன்றவற்றில் தீவிரப் பங்கெடுத்தத் தோழர் இரத்தினசாமி தம் போர்க்குணத்தாலும் அறிவாற்றலாலும் உழவர் தலைவர் நாராயணசாமி அவர்களின் அன்பையும் அரவணைப் பையும் பெற்றார். அவர் கடந்த 18-06-2008 அன்று சொந்த ஊரான தேனி மாவட்டம் இராயப்பன்பட்டியில் உடல் நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 60 (30-04-1948).

இந்தி, ஆங்கிலம் இரண்டும் கற்றவர். இதனால் பல அலுவல கங்களில் பணிபுரிந்தார். இந்தி ஆசிரியராகவும் பணி புரிந்தார்.

1965இல் இந்தித் திணிப்புக்கெதிராக வெடித்துக் கிளம்பிய மாபெரும் மாணவர் போராட்டத்தின் போது இந்தி ஆசிரியர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் 70களில் விவசாய இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார்.

லட்சுமிநாயக்கன்பட்டி வெடிகுண்டு வழக்கில் தோழர் இரத்தினசாமி கைதானார். வருசநாட்டு விவசாயிகள் கடனுக்காக அரசு கட்டவிழ்த்துவிட்ட ஜப்தியைக் கண்டித்து நிலவள வங்கி முன் திரு செல்லமுத்து தலைமையில் நடந்த மறியலில் கைதானார். இராயப்பன்பட்டியில் ஜப்தியை அறிவித்து தண்டோரா போட்ட அரசு ஊழியரை உழவர்கள் தடுத்து அவரை புளியமரத்தில் கட்டி வைத்த வழக்கில் இரத்தினசாமி கைதானார்.

உழவர் தலைவர் திரு நாராயணசாமி வடமாநிலங்களுக்குச் சென்றபோது அவருக்கு மொழி பெயர்ப்பாளராக செயல்பட்டார்.

அண்மைக் காலமாக முல்லைப் பெரியாறு அணை உரிமை மீட்பு போராட்டங்களில் தீவிரமாக பங்கு கொண்டார். தமிழ்த் தேசிய அமைப்புகள் நடத்திய பல்வேறு உழவர் போராட்டங்களில், இயக்கங்களில் தோழர் இரத்தினசாமி கலந்து கொண்டார். தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும், தமிழக உழவர் முன்னணியும் நடத்திய உழவர் இயக்கங்களிலும் கலந்து கொண்டார்.

19-06-2008 அன்று இராயப்பன்பட்டியில் நடந்த அவரது உடலடக்கச் சடங்கில் தோழர்கள் பெ.மணியரசன்(த.தே.பொ.க.), தெ.காசிநாதன்(தமிழக உழவர் முன்னணி), மதுரைத் தோழர்கள் இராசு, மு.கா.வையவன் (த.தே.பொ.க.), தோழர் கொடைக்கானல் சேவியர் ஆகியோர் கலந்து கொண்டு உடலுக்கு மலர் மாலை வைத்து அமைதி வணக்கம் செலுத்தினர்.

திரு கே.எம்.அப்பாஸ் அவர்கள் தலைமையில் இரங்கல் கூட்டம் நடந்தது. அதில் பெ.மணியரசன் (த.தே.பொ.க.), பரந்தாமன் (த.தே.இ.), வேலுச்சாமி (விடுதலைச் சிறுத்தைகள்), தமிழ்ப்பித்தன் (பெ.தி.க.), கதிர்நிலவன் (த.தே.வி.இ.), தெ.காசிநாதன் (த.உ.மு.) உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

உழவர் போராளி தோழர் கு.இரத்தினசாமி அவர்களுக்குத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வீரவணக்கம் செலுத்துகிறது.

# குழந்தைகளை வேட்டையாடும் சொட்டு மருந்துக் கொள்ளையர்கள்

■ செவ்வேள்



மனித உழைப்பும், இயற்கையும் மட்டுமின்றி, பெண்ணின் அழுகை, குழந்தையின் புன்னகை, ஆணின் உடற்கட்டு.... அனைத்துமே முதலாளியச் சந்தை சரக்காக சுரண்டப் படுகின்றன. பச்சிளம் குழந்தைகளின் உடல்நலம் கூட முதலாளியச் சந்தையில் இலாப வேட்டைக்கான களமாக மாற்றப்படுகின்றது. தடுப்பு ஊசித் திட்டங்களே இதற்குச் சான்று.

இளம்பிள்ளைவாதத் தடுப்புக்கான போலியோ சொட்டு மருந்துகள் இருபது ஆண்டுகளுக்கு முன்னாலேயே வளர்ந்த நாடுகளில் கைவிடப்பட்டுவிட்டன. ஆனால் ஆரவாரமாக போலியோ சொட்டு மருந்து முகாம்கள் இங்கே நடத்தப்படுகின்றன.

'*மருத்துவ ஆய்வுக்கான இந்திய ஏடு*' (Indian Journal for Medical Research – IJMR) , புகழ்பெற்ற '*சயின்ஸ்*' (Science) இதழ் ஆகியவை இச்சிக்கல் குறித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக எச்சரிக்கை விடுத்துவருகின்றன. வாய்வழியாகக் கொடுக்கப்படுகிற போலியோ சொட்டு மருந்து இளம்பிள்ளைவாத நோயைத் தடுக்கிற ஆற்றல் அற்று இருப்பதை ஆய்வு ஆதாரத்தோடு இவ்வேடுகள் எடுத்துக் கூறின.

போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தீவிரமான வேறுவகை வாத நோய்

(Acute Flaccial Paralysis – AFP) வருகிறது என்பதை இந்தியா முழுதும் வெவ்வேறு இடங்களில் 1600 குழந்தைகளை ஆய்வு செய்து வி.கே..பாசின் என்ற அறிவியலாளர் எடுத்துக் காட்டி உள்ளார்.(Nature Bitechnology – சனவரி 2008 இதழை ஆதாரம் காட்டி **புஷ்பா பர்கவா** - *தி இந்து* - 11.6.08).

சத்தான, சரிவிகித உணவு எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்க வகை செய்தால் இளம்பிள்ளை வாதத்திற்கு தடுப்பு மருந்து கொடுக்கும் தேவை எழாது. வாய்ப்பு, வசதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளை விட, ஏழை எளிய மக்களையே இந்நோய் அதிகம் தாக்குவதிலிருந்து இது புலனாகும்.

அப்படியே தடுப்பு மருந்து கொடுப்பதாக இருப்பினும், அது பயனளிப்பதாக இல்லாமல், புதிய நோய்களை உருவாக்கும் வகையில் இருப்பதை ஆட்சியாளர்கள் கவனித்துக் களைய வேண்டும்.

ராஜீவ்காந்தி ஆட்சியில், 1988லேயே இந்த போலியோ சொட்டு மருந்தைக் கைவிடுவது; ஊசி மூலம் கொடுக்கும் தீவிர தடுப்பு மருந்தைப் பயன்படுத்துவது என முடிவெடுக்கப் பட்டது. ஆனால் ஆட்சியாளர்களின் நடப்பு இம்முடிவுக்கு எதிர்த்திசையிலேயே உள்ளது.

ஜோனஸ் சால்க் என்ற அறிவியலாளர் கண்டு பிடித்த ‘சால்க் வாக்சின்‘ என அறியப்பட்ட M-IFV என்ற தடுப்பு ஊசியையே பயன்படுத்துவது என 1988லேயே அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் முதலான மேற்குலகம் முடிவு செய்து விட்டது.

இதையொட்டி சொட்டு மருந்தைக் கைவிட்டு, போலியோ ஊசி மருந்துக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மாறுவது என இந்திய அரசும் முடிவெடுத்தது. போலியோ மற்றும் பிற நோய் தடுப்பு ஊசி மருந்துகள் தயாரிக்க முடிவானது. அரசுத் துறையில் அதற்கான தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன.

ஆனால் 1991ல் இங்கே தலை நீட்டிய உலகமயப் பொருளியல் கொள்கை அனைத்தையும் தலைகீழாக மாற்றியது. கிளாக்சோ ஸ்மித் க்ளைன் பீச்சம், ஹெக்ஸ்ட், அவந்திஸ் பாஸ்ச்சுர், மெர்க் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கும், சாந்தா பயோ டெக், சீரம் இந்தியா லிமிடெட் போன்ற இந்திய ஏகபோகங்களுக்கும் வேட்டைக்களமாக இந்தியக் குழந்தைகளின் உடல்கள் மாற்றப்பட்டன.

இந்த மருந்துக் கம்பெனிகள் தயாரித்த சொட்டு மருந்துகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் இனி சந்தை இல்லை என்றானது. இந்தியா உள்ளிட்ட பின் தங்கிய ஆசிய - ஆப்பிரிக்க நாடுகள் தாம் அதற்குச் சந்தை என்ற நிலை எற்பட்டது.

ஐ.நா.வின் உலக உடல் நலக் கழகம் (World Health Organisation – WHO) இந்தக் கொள்ளையைக் கொண்டு செலுத்தும் அமைப்பாகச் செயல்பட்டது.

சொட்டு மருந்து முகாம்கள் நடத்த முதலில் 20 கோடி டாலர் நிதி உதவியை WHO வழங்கியது. ‘*தடுப்பு மருந்து உலகக் கூட்டமைப்பு*’ (Global Alliance for Vaccines and Immunisation – GAVI) - ‘*காவி* என்ற அமைப்பின் மூலம் அதற்கான நிதி எற்பாடு நடந்தது.

தொடக்கத்தில் நன்கொடை அளித்த இந்த WHO அமைப்பு, பின்னால் “நிதிச்சுமையைக்” காரணம் காட்டி பின் வாங்கியது. ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்ய இந்திய அரசு ‘நிர்ப்பந்திக்கப்பட்டது’. இவ்வாறு ‘நிர்ப்பந்தத்தை’ வரவழைத்த அமைச்சர்களுக்கும், அதிகாரி களுக்கும் கையூட்டு வாரி வழங்கப்பட்டது. ஓய்வு பெற்ற பிறகு சில அதிகாரிகளுக்கு ஐ.நா. உடல் நல அமைப்பில் பதவிகளும் வழங்கப்பட்டன. மானியம் அளித்து சிக்கவைக்கும் இன்றைய ‘காவி’ அமைப்பின் சூத்திரதாரிகள் கிளாக்சோ ஸ்மித் க்ளைன் பீச்சம், அவந்திஸ் பாஸ்ச்சுர் போன்ற மருந்து கம்பெனிகளும், பில் கேட்ஸ் குடும்பமும் தான்.

உலக உடல் நலக் கழகம் இளம்பிள்ளைவாத சொட்டு மருந்தைப் போலவே பி-மஞ்சள் காமாலை தடுப்பூசி, (Hepatatis – B Vaccine) , மூளைக் காய்ச்சல் தடுப்பூசி (Hib Vaccine) போன்றவற்றையும் இந்திய நலத்துறைக்குப் ‘பரிந்துரை’ செய்தது. இந்தத் தடுப்பூசிகள் தேவை யற்றவை.

“இந்தியக் குழந்தைகளின் உமிழ்நீரில் கலந்துள்ள ஈ-கோலய் (E-Coli) நுண்ணுயிரி மூளைக் காய்ச்சலுக்கு எதிராகச் செயல்பட்டு, தடுக்கவல்லது; எல்லோருக்கும் Hib தடுப்பூசி தேவையற்றது. அதே போல் தைவான் நாட்டு புள்ளிவிவரங்களின் அடிப்படையில் இங்கு பி-மஞ்சள் காமாலைத் தடுப்பூசியை சகட்டு மேனிக்கு திணிப்பது கண்டிக்கத் தக்கது” என அறிவியலாளர் மாதவி எச்சரிக்கிறார். (**Y. மாதவி** – *Current Science,* June 10, 2006).

இந்திய ஆட்சியாளர்கள் எதையும் காதில் வாங்குவதாக இல்லை. பிரதமர் மன்மோகன் சிங், இந்திய நலத்துறை அமைச்சர் அன்புமணி இராமதாஸ் மற்றும் உயர் அதிகாரிகளின் கையூட்டுத் தேவைக்காக - பன்னாட்டு மருந்துக் குழுமங்களின் கொள்ளை இலாபத்திற்காக பச்சிளங் குழந்தைகள் வேட்டையாடப் படுகிறார்கள். ■

எதிரொலி

# உள்ளாட்சியும், தேச அரசும்

■ ஆதன்

புதிய தமிழர் கண்ணோட்டம் தன் பழைய பீடு நடையோடு தொடர்ந்து வெளிவருவது என் போன்றவர்க்கு ஊக்கம் தருவதாய் அமைந்துள்ளது. ம. செந்தமிழனின் "நவீன இந்திர சபையின் பேரழிவுத் திட்டம்" அமெரிக்க ஆட்சியாளர்களின் வஞ்சக எண்ணத்தை தோலுரித்துக் காட்டுகிறது. அமெரிக்காவின் இந்த நெருக்கடி நிலைக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பொருளியல் கட்டமைப்பு கடந்த 300 ஆண்டுகளாக செயற்கையான முறையில் கட்டியெழுப்பபப்பட்டுள்ளதே காரணம். இந்நாடுகளுக்கு தற்சார்பு (Self Dependence), சமன்பட்ட வளர்ச்சி (Balanced Grouth) ஆகியன எட்டிக்காயாய் கசக்கின்றன. இன்று மிகவிரைந்து செல்லுகின்ற அமெரிக்கா என்னும் கப்பலில் மிகப்பெரிய ஓட்டை விழுந்து மூழ்கும் நிலைக்கு வந்துவிட்டது. சற்றே சிறியதாக உள்ள கப்பல்களான இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகள் அமெரிக்காவை போல விரைந்து செல்ல எண்ணித் தம்மை ஓட்டைவிழுந்த அமெரிக்கா என்னும் கப்பலோடு பிணைத்துக் கொண்டுள்ளன.

அமெரிக்கக் கப்பல் மூழ்கும்போது அதன் இழுப்பினால் இவையும் சேர்ந்து மூழ்கப்போவது திண்ணம்.

**"யானை விழுங்கிய விளாம் பழங்களாய் மாநிலங்கள்"** என்ற முனைவர் த.செயராமனின் கட்டுரையில் நடுவணரசின் நேரடிப் பொறுப்பில் பஞ்சாயத்துகள் கொண்டு வரப்படுவதன் கோர விளைவுகளை தெற்றென விளக்கிக் காட்டிய பாங்கு அருமை.

ஆங்கிலரிடமிருந்து இந்தியா பெற்ற மரபுரிமை / தன்னாட்சி என்பதெல்லாம் வெறும் அரசியல் அளவிலேதான் உள்ளது. இன்னும் பொருளியல் மரபுரிமை (Economic Freedom) பெறவில்லை. அதனாலேயே அதிகாரமுடைய மாநில அரசோ அல்லது நடுவணரசோ போடும் வளர்ச்சித்திட்டம் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியையோ அல்லது நகரத்தையோ சார்ந்தாகவே உள்ளது. ஆதலினால் சமன்பட்ட வளர்ச்சியை எட்டமுடியவில்லை. இது உலகம் முழுவதும் பொதுவாகக் காணப்படுவது. இந்த குறை காரணமாகவே நகரத்தை மையமாகக் கொண்ட வளர்ச்சி, திட்டமிடல் என்ற அணுகுமுறை காரணமாகவே ஐரோப்பிய "கம்யூனிசமும்", முதலாளியமும் நெருக்கடிக்கு உள்ளாயின. வீழ்ச்சியை எதிர்நோக்கின. கம்யூனிச மற்றும் முதலாளிய நாடுகளில் வளர்ச்சி என்பது மேலிருந்து கீழ்நோக்கியதாக, அதாவது பெரிதிலிருந்து சிறியவற்றுக்கு என்னும் போக்கில் அமைந்துள்ளது. இது இயற்கைக்கு முரணானதாகும்.

ஒரு தெளிந்த நீர்ப்பரப்பின் மேல் கல்லை எறிகிறபோது சிறிய வட்ட அலைகள் தோன்றி பெரிதாக விரிந்து செல்லும். இதுவே இயற்கையான வளர்ச்சி. பண்டமாற்று காலத்தில் வளர்ச்சி இவ்வாறாகத் தான் இருந்தது. எனவே சமன்பட்ட வளர்ச்சி நிலவியது.

பஞ்சாயத்து அல்லது வட்டம், மாவட்டம், மாநிலம் , நடுவணரசு என்ற ஆளுகை (நிர்வாக) ஏணி அமைப்பில் வருமானம், விற்பனை, உற்பத்தி ஆகிய வரி வருவாய்கள் ஒன்று மாநில அரசிடமோ அல்லது நடுவணரசிடமோ தான் போகின்றன. பின்பு இவ்வரசுகள் ஒதுக்கித் தருகின்ற பணத்தைக் கொண்டுதான் பஞ்சாயத்துகளோ, மாவட்டங்களோ தம்முடைய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய அவலநிலை இன்று எல்லா உலக நாடுகளிலும் நிலவுகின்றன.

மேற்சொன்ன இந்த நடைமுறைக்கு மாறாக, ஒரு பஞ்சாயத்து அல்லது 1 லட்சம் மக்கள்தொகை என்ற கணக்கைக் கொண்ட வட்டம்(Taluk) தன்னுடைய ஆளுகை (நிர்வாக) எல்லையில் வருமானம், கலால், விற்பனை, உற்பத்தி ஆகிய வரிகளைத் தானே தண்டல் செய்து அதில் 8-ல் 1 பங்கையோ அல்லது 6-இல் 1 பங்கையோ தனக்கு மேல் உள்ள மாவட்ட ஆளுகைக்கு அனுப்ப வேண்டும். தனக்குரிய பங்கான 7/8 அல்லது 5/6 -ஐ கொண்டு தன் ஆளுகை எல்லைக்குள் வாழுகின்ற மக்களுக்குத் தேவையான வற்றை தன் நிலப்பரப்பில் உள்ள மூலப் பொருள்களையும் ஆள்களையும் கொண்டு நிறைவேற்ற வேண்டும். அதில் உணவு, உடுப்பு , உறையுள் மருத்துவம், கல்வி ஆகியன யாவும் அடங்கும்.

மாவட்ட ஆளுகை தன் கீழ் உள்ள 8 அல்லது 10 வட்டங்களில் இருந்து பெறும் 1/8 அல்லது 1/6 பங்குத் தொகுப்பைக் கொண்டு வட்ட அளவில் மேற்கொள்ள இயலாத பணிகளை அல்லது உற்பத்தியை மேற்கொள்ளும். இதில் தாம் பெற்ற பங்குத் தொகுதியில் 1/8 அல்லது 1/6 பங்கு வருவாயை மாநில ஆளுகைக்கு அனுப்பிவிடும். மாநில ஆளுகை ( நிர்வாகம்) சட்டமியற்றல், நடைமுறைப்படுத்தல், கண் காணித்தல், பெரும் முதலீட்டுத் தொழிலை மேற்கொள்ளல் போன்ற பணிகளை மட்டுமே மேற்கொள்ளும். மாநில ஆளுகை 1/8 அல்லது 1/6 என்ற அளவில் பல மாவட்டங்களிட மிருந்து தான் பெற்ற வருவாயி லிருந்து 1/8 அல்லது 1/6 என்ற பங்கில் நடுவணரசிற்கு ஒதுக்கிவிட்டு எஞ்சிய 7/8 அல்லது 5/6 என்ற தன் பங்கைக் கொண்டு மேற்சொன்ன தனக்கான பணிகளை மேற்கொள்ளும்.

நடுவணரசு என்பது சட்டமியற்றல் நடைமுறைப்படுத்தல் என்பதோடு வெளியுறவு, பணத்தாள் வெளியீடு, படைத்துறைபேணல், விண்வெளி ஆய்வு என்ற அளவிலேயே கட்டுண்டதாக அதன் அதிகார எல்லை சுருங்கிப்போகும்.

இவ்வாறான நிதி ஒதுக்கீட்டு முறையில், பங்கீட்டு முறையில் ஆளுகை ஏணியின் கீழ்நிலையில் உள்ள ஊராட்சி அல்லது வட்டம் தன் பங்கைத் தானே எடுத்துக்கொள்ளும் . தன் வரி வருவாயைத் திரட்டிக் கொள்வதற்கு அதற்கு மிகக் குறைந்த செலவே ஏற்படும். வரி ஏய்ப்பு அறவே குறையும், கள்ளப்பணம் ஒழியும். மேலும் தன் ஆளுகைப் பரப்பில் வாழும் மக்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தன்னால் இயன்றவரையில் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு தானே மேற்கொள்ளும். அவற்றின் வளர்ச்சித் திட்ட உரிமையில் மாவட்ட ஆளுகையோ அல்லது மாநில ஆளுகையோ தலையிட முடியாது. அவ்வாறான உரிமையும் அவற்றுக்குக் கிடையா.

இதேபோன்ற உரிமைதான் மாவட்ட ஆளுகைக்கும் . அதில் மாநில ஆளுகை தலையிட முடியாது. ஆதலால் மாநில ஆளுகைக்கு என்னதான் சட்டமியற்றும் அதிகாரம் இருந்தாலும் அதுவும் மட்டுப் பட்டதே. வட்ட ஆளுகை மற்றும் மாவட்ட ஆளுகை மக்கள்தொகை, செலவினம் காரணமாக ஊராட்சி மேற்கொள்ளவியலாத பெரு முதலீட்டுத் தொழில்களை மட்டுமே நடத்தும்.

இன்று இவ்வாறான பொருளியல் மரபுரிமை (Economic Independence) உலகில் எந்த நாட்டிலுமே இல்லை. இந்த வருவாய்ப் பகிர்வு முறை மேற்கொள்ளப்பட்டால் அது சமன்பட்ட வளர்ச்சிக்கு வழிவிடுவதோடு, எல்லாப் பகுதியிலும் தற்சார்பை நிலை நிறுத்தும். இந்த முறையே அந்தந்த ஆளுகைக்கு உண்டான அதிகாரம் என்னென்ன என்பதைத் தீர்மானிக்க உதவும். இந்த ஒரு பொருளியல் அமைப்பில் மக்கள் எல்லாமும் பெற்று வளமாய் வாழ்வார்கள். ஏற்றத் தாழ்வுகள் குமுக, பொருளியல் நிலையிலிருந்து அறவே அகற்றப்படும்.

இன்று உலகில் உள்ள ஒவ்வொரு நடுவணரசும் வரித் தண்டல் செய்வதற்கு மட்டுமே ஆயிரமாயிரம் கோடியைச் செலவழிக்கின்றன. அவற்றைப் பகிர்ந்தளிக்கவும், திட்ட வளர்ச்சிகளை மேற்கொள்ளவும் ஆயிரமாயிரம் கோடியைச் செலவு செய்கின்றன. நடுவே பலவாறாகப் பணம்விழுங்கப்பட்டு மிகச்சிறு அளவே மக்களைச் சென்றடைகிறது. காட்டாக, வரித்தண்டல் செய்வதிலும், வளர்ச்சித் திட்டங்களிலும், அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளமாகவே பல ஆயிரம் கோடி செலவாகிறது. மேற்சொன்ன 1/8 பகிர்வு முறையில் இந்தக் குறைபாடு ஒழிக்கப்படுகிறது.

இதுவே அதிகாரப் பரவலுக்கான (Decentralization) உண்மையான வழியும் கூட.

ஒரு நாடு அல்லது தேசிய இனம் முழு இறையாண்மை பெற்ற தேசம் ஆவது என்பது, அந்நிலப் பகுதியை அதன் அருகில் ஒட்டியுள்ள நிலப்பகுதியிலிருந்து பிளந்தெடுத்து எங்கோ ஒரு பெருங்கடல் நடுவிலோ அல்லது காணவே முடியாத கற்பனை சொர்க்கத்திலோ கொண்டு போய் வைத்துவிடுவது என்பதல்ல . இதை மக்கள் எல்லாரும் உணரும்படி செய்யவேண்டும். மக்களின் மதச்சார்பான எண்ணங்களின் காரணமாகவே ஒரு தேசிய இனத்தின் சொந்த மக்களே கூட தம் தேசியம் ஏற்கெனவே உள்ள நாட்டிலிருந்து தனித்து பிரிந்து போவதை விரும்புவதில்லை. தனி தேசமாகப் பிரிந்தாலும் தன்னை ஒட்டியுள்ள அயல் தேசிய நிலப்பகுதியோடு தொடர்ந்து நல்லுறவு பேணப்படும்; மக்கள் தங்குதடையின்றி சென்று வரலாம் என்ற உணர்வு அவர்களுக்குள் ஏற்பட வேண்டும் மக்களுக்கு 1/8 பங்கீட்டு முறையில் வட்ட, மாவட்ட அளவில் தற்சார்பான பொருளியல் வளர்ச்சி எட்டப்படும் பொழுது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். தம் எதிர்கால வாழ்வு குறித்த அச்சம் நீங்கும். பொருளியல் வளர்ச்சிக்கு இதுவே சிறந்த வழி.

இவ்வகையான கீழிருந்து மேல் என்ற அணுகுமுறை அதிகாரப் பகிர்வில் தனி இறையாண்மை கொண்ட தமிழ்த் தேச வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும். உலகம் முழுவதும் தேசிய இனத்தேசங்கள் எதிர்ப்பின்றி உருவாக வழிவகுக்கும். ■

# மருத்துவர்களும் மத குருக்களும் - 1

■ ம. செந்தமிழன்

ஆதி மதத்தின் தோற்றம் தந்திரப் பண்பாட்டுடன் நேரடித் தொடர்புடையது. இயற்கையைத் தமது தேவைகட்கு ஏற்பத் தூண்டும் செயல்முறையே தந்திரம் ஆகும். பயிர்த் தொழில் முகிழ்த்த காலத்தில் உற்பத்திக்காக, இயற்கையைத் தூண்டும் சடங்குகளைப் பெண்கள் மேற்கொண்டனர். இதுவே தந்திரப் பண்பாட்டின் தோற்றம்.

விளைநிலத்தில் பெண்கள் நிர்வாணமாக நடந்து சென்றால், விளைச்சல் பெருகும் என்ற தந்திரப் பண்பாட்டு நம்பிக்கை தொடக்கத்தில் இருந்தது.

'தம் பிறப்புறுப்பை வெளியே காட்டுவதன் மூலம் இயற்கையை உற்பத்தி செய் எனத் தூண்டலாம் என்பதே கருத்து' [1]

நிலம் எனும் இயற்கை அங்கத்தையும் பயிர்த்தொழில் சார்ந்த பிற இயற்கை இயக்கப் பொருட்களையும் புரிந்து கொள்ளும் முயற்சியில் மனித குலம் ஈடுபட்டபோதே தந்திரப் பண்பாடு தொடங்கிவிட்டது. இப்பண்பாடு, சாரத்தில் அறிவியல் மற்றும் உளவியல் வகைப்பட்டது.

மந்திரம் எனப்பட்டது தந்திரப் பண்பாட்டின் ஒரு வளர்ந்த கூறுதான்.

'மந்திரம் (magic) வெறும் அறியாமை எனல் தவறு. அது மனோதத்துவ வகையில் செயலுக்கு வழிகாட்டியாயிற்று. ஆரம்பகால விவசாயத்திற்கு இன்றியமையாததாயிற்று.' [2]

**மருத்துவர்களும் மத குருக்களும் இன்றைய சமூகத்தின் முதலாளியக் கட்டமைப்பின் அங்கமாகியுள்ளனர். மருத்துவம் மதம் ஆகிய இரு அறிவுத்துறைகளும் மனித குல வரலாற்றில் தனிப்பிரிக்கவியலாத வகையில் பின்னிப் பிணைந்து இயங்கி வந்துள்ளன.**

**இவ்வரலாற்றுப் பின்னணியிலிருந்து இன்றைய மருத்துவர்களையும் மத குருக்களையும் அணுகினால் தமிழ்த்தேசியத்தின் சமூகப் பொருளாதார கோட்பாட்டு வடிவமைப்பிற்கான உள்ளீடுகளைப் பெற இயலும். மேலும், தமிழர் வாழ்வியல் குறித்த சில அடிப்படைகளை வரையறுக்க இவ்வணுகுமுறை உதவும்.**

மனித உடல் குறித்த சிக்கல்களையும் இதே வழியில் எதிர்கொண்டது ஆதிச்சமூகம். விளைச்சலுக்காக இயற்கையைத் தூண்டும் தந்திர நடவடிக்கைகளைப் போல, நோய்வாய்ப்பட்ட உடலைச் சுகப்படுத்தவும் தந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆதிப் பழங்குடியினரில் மந்திரவாதிகளே மருத்துவர்களாகவும் இருந்தனர்.

பயிர்த் தொழில் தந்திரப் பண்பாடு, உளவியல் ஊக்கத்தை அளித்தது போலவே, உடலியல் தந்திரங்களும் பேரளவு உளவியல் ஊக்கம் அளிக்கும் அடிப்படையிலேயே செயல்பட்டன.

நோய்வாய்ப்பட்ட ஒருவருக்குத் தந்திரச் சடங்குகள் மேற்கொள்வதன் வழியே, தாம் குணமடைவோம் என்ற நம்பிக்கையை அவருக்கு ஏற்படுத்துவது இதன் சாரமான பண்பு.

மனித உடல் தனது நோய்களைத் தானே தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் உடையது என்ற அறிவியல் இம்முறையில் பொதிந்திருந்ததால், இம்முறை பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்தது.

தந்திரப் பண்பாடு சாரத்தில் பொருள் முதல் வாதக்

கருத்தியலுக்கு நெருக்கமானது. அதே வேளை இது பகுத்தறிவுவாதம் (Rationalism) அல்ல.

இயற்கைக்கும் மனிதனுக்கும் நிகழ்ந்த ஊடாட்டங்களின் விளைவாக, இயற்கையைப் புரிந்துகொண்டு அதன் அங்கமாக அனுசரித்து வாழ்வது என்ற முடிவை உலகெங்கும் நிலவிய தொன்மையான மெய்யியல்கள் பிரதிபலிக்கின்றன.

மனிதஉடலை இயற்கையின் அங்கமாக மட்டும் உணர்ந்து அதன் நோய்களும் சுகங்களும் இயற்கையின் செயல்பாடுகள். மனிதனால் அச்செயல்பாடுகளை முற்றிலும் கட்டுப்படுத்த முடியாது என்ற புரிதல் ஆதி தந்திர மருத்துவத்தின் அடிப்படை.

நோய்வாய்ப்பட்ட உடல் தன்னைத்தானே சரி செய்து கொள்ளும். ஒரு வேளை சுகம் திரும்பாவிட்டால், உடலில் இயற்கையின் ஆற்றல் குறைந்துவிட்டது என்று பொருள். இத்தகைய அணுகுமுறையே தந்திர மருத்துவத்தின் மையம். இறந்தவரின் உடல் இயற்கையில் கலந்து விடுகிறது.

இறந்தவர் 'இயற்கை எய்தினார்' என்று சொல்லும் மரபின் ஆணிவேர், இங்கிருந்தே தொடங்கியிருக்க முடியும்.

**உடல் - மனம்**

மனிதனை, உடல் - மனம் என்று பகுக்காத அணுகுமுறையாக மருத்துவத் தந்திரப் பண்பாடு நிலவியது. உடல் - மனம் என்ற பகுப்புதான் மருத்துவம் - மதம் ஆகிய துறைகளின் தோற்றுவாய் ஆகும்.

நிலவுடைமையின் வளர்ச்சியும் அறிவுத்துறை மேம்பாடும் மெய்யியல்களின் புதிய வாசல்களைத் திறந்தன. உடலுக்கும் மனதுக்குமான வேறுபாடுகளை அம்மெய்யியல்கள் ஆய்ந்தன. உடற்கூறியல் எனும் அறிவியல் வளர்ந்தது. மனம் குறித்த சிந்தனைப் பள்ளிகள் ஆன்மா என்ற புதிய கருத்து முதல்வாத தளத்திற்குச் சென்றன.

இயற்கையின் அங்கமாகத் தம்மை உணர்ந்து, அதன் வழி வாழ்ந்த மனிதக் கூட்டம் இயற்கையை மிஞ்சிய உச்ச ஆற்றலாகத் தம்மைக் கற்பிதம் செய்து கொள்ளத் தொடங்கியது. வேதியர் இந்தச் சிந்தனை மரபை இந்திய நிலப்பரப்பில் தோற்றுவித்தனர். இயற்கையுடனான ஊடாட்டங்களைப் புறக்கணித்து, நேரடியாகக் 'கடவுளரிடம்' விண்ணப்பித்து 'வேண்டியவற்றைப் பெறும்' வழிபாட்டு முறையை வேதியர் கையாண்டனர்.

மனம் எனும் பொருள் முதல்வாதக் கருத்துருவின் மீது 'ஆன்மா' எனும் கருத்துமுதல்வாத முலாம் பூசப்பட்டது. 'ஆன்மா அழிவற்றது' என்ற புதிய பொய் பரப்பப்பட்டது.

தமிழர் மெய்யியல் இதற்கு நேர் எதிரானது.

**'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே'** 3

என்றார் தொல்காப்பியர்.

ஐம்புலன்களும் கண்ணுக்குப் புலனாகும் பருப்பொருட்கள். மனம் மட்டுமே கட்புலனாகாதது. 'மனம்' தான் ஆறாம் அறிவு என்ற வரையறை உலக மெய்யியல் தளத்தில் புரட்சிகரமானதும் அதற்கு முன்னும் பின்னும் நிலவிய, நிலவும் பல்வேறு மெய்யியல் பிழைகளைச் சரி செய்யும் ஆற்றல் கொண்டதும் ஆகும்.

மனிதரின் ஆறாம் அறிவு - பகுத்தறிவு - என்ற பிழையான / ஒரு சார்பான புரிதலை ஐரோப்பிய பகுத்தறிவுவாதம்

> **' உடல் - மனம் இவ்விரண்டையும் தனித்தனியே பிரித்து அணுகும் முறையும் தமிழர் மெய்யியலுக்குப் புறம்பானது. மேற்கண்ட பாடலில், 'ஓர் அறிவு என்பது உற்று அறிவது' என்று கூறிவிட்டு 'இரண்டாம் அறிவு என்பது அதனொடு நாக்கு' என்று கூறுகிறார் தொல்காப்பியர். பிற அறிவுகளுக்கும் இதே போன்ற விளக்கத்தையே, அதாவது 'மூன்றாம் அறிவு' என்பது ஓர் அறிவு, ஈரறிவு ஆகியவற்றுடன் மூக்கு' என்று வரிசைப்படுத்தியும் தொகுத்தும் விளக்கப்படுகின்றது. '**

அறிமுகப்படுத்தியது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழகக் கோட்பாட்டுத் தளத்தின் ஒரு பிரிவும் இதை அப்படியே உள்வாங்கியது.

'மனம்' என்ற விசாலமான கருத்துருவில் 'பகுத்தறிவு' ஒரு அங்கம். அவ்வளவே. பகுத்தறிவு மட்டுமே ஆறாம் அறிவு என்பது அரைகுறைப் புரிதல். மனம் தனக்குள் நம்பிக்கையையும், தர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆசைகளையும் இன்னும் எண்ணற்ற சிந்தனைகளையும் கொண்டுள்ளது.

இதை உணர்ந்து உலகுக்கு அறிவித்தவர் தொல்காப்பியர். மேலும், 'மனம்' குறித்த தமிழரின் அறிவு தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே நிலவியது. மேற்கண்ட பாடலின் இறுதி வரியில்,

**'நேரிதின் உணர்ந்தோர், நெறிப்படுத்தினரே'**

என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.

உடல் - மனம் இவ்விரண்டையும் தனித்தனியே பிரித்து அணுகும் முறையும் தமிழர் மெய்யியலுக்குப் புறம்பானது. மேற்கண்ட பாடலில், 'ஓர் அறிவு என்பது உற்று அறிவது' என்று கூறிவிட்டு 'இரண்டாம் அறிவு என்பது **அதனொடு** நாக்கு' என்று கூறுகிறார் தொல்காப்பியர். பிற அறிவுகளுக்கும் இதே போன்ற விளக்கத்தையே, அதாவது 'மூன்றாம் அறிவு' என்பது ஓர் அறிவு, ஈரறிவு **ஆகியவற்றுடன்** மூக்கு' என்று வரிசைப்படுத்தியும் தொகுத்தும் விளக்கப்படுகின்றது.

'ஐம்புலன்கள் / ஐந்தறிவு மற்றும் மனம் - இவற்றின் சேர்க்கை மனிதர்' என்பதைத் தொல்காப்பியர் ஐயந்திரிபற கூற விரும்புகிறார். இதன் பொருள் 'மனிதர்' என்பவர் கட்புலனாகும் புலன்கள் மற்றும் கட்புலனாகா மனம் ஆகிய இரண்டின் சேர்க்கை என்பதாகும்.

இந்த வரையறுப்பில், உடல் வேறு மனம் வேறு என்று நீக்க இயலாது. மனம் உடல் இன்றி நிலவாது. உடல் மனம் இன்றி வாழாது. இந்த அடிப்படையில், உடலுக்கு வெளியே, 'அழியாது' நிலவும் 'ஆன்மா' என்ற புனைவு ஒழித்துக் கட்டப்பட்டது.

தமிழரின் இந்த மெய்யியல் பொருள்முதல்வாதத் தளத்தில் உருவாக்கப்பட்டது ஆகும். இந்தச் சிந்தனை மரபைத் தொடர்ந்து வளர்ந்தது சித்த மருத்துவ முறை.

சித்தர்களின் கோட்பாடுகளை ஆய்ந்த சாமி. சிதம்பரனார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'உயிரும் உடம்பும் ஒன்றே. உடம்பில்லாமல் உயிர் வாழ முடியாது. இரண்டும் தனித்தனியாக இயங்க முடியாது. உடம்பிலே தோன்றி உடம்புடன் வாழ்வதே உயிராகும். உடம்பு அழிந்தால் உயிரும் அழிந்து போகும். ஆதலால் உடம்பைப் பாதுகாப்பதே உயிரைப் பாதுகாப்பதாகும். உடம்பை அப்பழுக்கின்றி - மாசுமறுவின்றி - வலுவுடையதாக வைத்துக் காப்பதே உயிரைக் காப்பதாகும். இதுவே சித்தர்களின் கொள்கை ; நம்பிக்கை.'[4]

உடல் - மனம் என்ற மெய்யியல் பாகுபாடு, மருத்துவத் துறையில் உடல் - உயிர் என்று அணுகப்பட்டது. இரண்டும் ஒன்றே என்று சித்தர்கள் கூறியது, அக்கால வேதியர்களின் மூடத்தனமான மருத்துவ அறிவுக்கு மாற்றாக அமைந்தது.

சாமி. சிதம்பரனார் தரும் சில விளக்கங்களைக் காண்போம்.

'பரமாத்மா வேறு ; ஜீவாத்மா வேறு ; பரமாத்மா பேரறிவு படைத்தது ; எல்லாம் வல்லது. ஜீவாத்மா சிற்றறிவும் சிறு தொழிலும் உள்ளது. பரமாத்மாவுக்கு எல்லாவற்றையும் தாமே உணரும் ஆற்றல் உண்டு. ஜீவாத்மா உணர்த்தினால்தான் உணர முடியும் இயல்புள்ளது. பரமாத்மாதான் கடவுள் ; ஜீவாத்மாதான் உயிர்...

இவ்வாறே பல மதங்கள் கூறுகின்றன.

சித்தர் வழியினர் இக்கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. பரமாத்மா எங்கும் தனியாக இல்லை. நமது உடம்புதான் பரமாத்மாவின் இடம். ஆதலால் கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பைப் பேணுவதே கடவுட்பணி ; உடம்பினுள்ளேயே பரமாத்மாவைக் கண்டு மகிழ்ந்திரு என்பதே சித்தர்களின் கொள்கை.

'உடம்பினைப் பெற்ற பயன்ஆவது எல்லாம்

உடம்பினால் உத்தமனைக் காண்'

என்பது ஔவையின் ஞானக் குறள்.'[5]

இவ்வாறு விளக்குகிறார் சாமி. சிதம்பரனார்.

சிவ வழிபாடு என்ற கடவுள் நம்பிக்கைக் கருத்தியலில் வளர்ந்தாலும் சித்தர்களின் கோட்பாடு, மனித உடலுக்கு வெளியே எதுவும் இல்லை என்றது. மேலும், சிவனும் இயற்கையின் குறியீடாகவே அணுகப்பட்டான்.

'சிவம் என்பது ஆண் - சக்தி என்பது பெண். இவ்வுண்மையைக் காட்டவே சிவலிங்கங்கள் தோன்றின. இலிங்கத்தின் அடிப்பாகம் - வட்டமும் தட்டையுமான பாகம் சக்தியைக் குறிப்பது. மேலேயுள்ள குழவி போன்ற பகுதி சிவத்தைக் குறிப்பது. சிவமாகிய ஆணும், சக்தியாகிய பெண்ணும் சேர்ந்ததே சிவலிங்கம். உலக உற்பத்தியை உணர்த்தவே இலிங்க உருவம் தோன்றியது. இதுவே சித்தர்களின் கொள்கை.'[6]

சித்தர்களின் சிவ வழிபாடு 'மதவழிபாடு' எனும் வகையைச் சேர்ந்தது அல்ல. அது தந்திரப் பண்பாட்டின் - இயற்கையைப் போற்றுதலின் தொடர்ச்சி.

மதவழிபாடு - நிறுவனமயத்தை நோக்கி நகர்வது. சித்தர்கள் - நிறுவனமயத்தை எதிர்த்தவர்கள்.

சிவலிங்கம் குறித்த மேற்கண்ட விளக்கத்தை மேலும் சில சான்றுகளின் வழி நிறுவ இயலும்.

'சாலமோன் கோயிலில் ஆண் கடவுள் தனக்கு நிகரான ஆற்றல் உடைய பெண் கடவுளான செக்கினாவுடன் குடி கொண்டிருப்பதாக யூதர்கள் நம்பி வந்துள்ளனர். ஆன்மீக அனுபவத்தைப் பெற விரும்பிய ஆண்கள் கோயிலுக்கு வந்து பெண் குருக்களுடன் புனிதச் சேர்க்கையில் ஈடுபட்டுக் கடவுளனுபவம் பெறுவது அன்றைய பழக்கம்.' [6]

'பாலியல் சடங்கை நிறைவேற்றுவதன் மூலம் மனிதன் விண்ணகம் செல்கிறான் என்று இசிசு காலத்திலிருந்து கருதப்பட்டு வந்தது. உடலியல் ரீதியாக ஆண் உடலுறவின் உச்சகட்டத்தை அடையும் நிலையில் ஒரு வினாடி அளவேனும் சிந்தனையற்ற நிலையை அடைகிறான். கடவுளை அறியும் நிலையை அப்போது அடைகிறான். சலனமற்ற அந்த ஒரு வினாடி மனநிலையை அடையும்போது மனிதனுக்குள் பேரொளி வீசுகிறது. அந்த அனுபவம் தெய்வீக அனுபவம்.' [8]

இந்தச் சடங்குகள் அனைத்தும் தந்திரப் பண்பாட்டின் கூறுகளே. இயற்கையில் கலத்தல், இயற்கையைப் போற்றுதல், இயற்கையைத் தூண்டுதல் ஆகிய நடவடிக்கைகளே கடவுளருக்கான சடங்குகளாகக் கருதப்பட்ட காலம் அது.

தமிழர் வரலாற்றில், 'முருக வழிபாடு தொடக்கத்தில், புணர்ச்சிச் சடங்குகளோடு இருந்தது' என்பதைப் பேராசிரியர். க. நெடுஞ்செழியன் சான்றுடன் நிறுவியுள்ளார். [9]

நிலவுடைமையின் ஆதிக்கத்தில் தமிழரது மெய்யியல் மதிப்பீடுகள் சிதைக்கப்பட்ட காலத்தில், இறை நம்பிக்கையும் மருத்துவமும் சித்தர் வழியில் பின்னிப் பிணைந்தன.

செல்வம் குவித்தல், மத நிறுவனங்களின் வழி சுரண்டல் ஆகிய தம் காலத்திய புதிய போக்குகளைச் சித்தர்கள் கண்டித்தனர். சாத்திரங்கள், புராணங்கள் ஆகிய வேதியரது கருத்தியல் ஆயுதங்களைச் சித்தர்கள் துணிந்து எதிர்த்தனர்.

மருத்துவர்களாக மட்டும் இல்லாது, தமிழர் மெய்யியலின் பங்களிப்பாளர்களாகவும், சித்தர்கள் விளங்கினர். மேலும், சித்தர்களின் மருத்துவமுறை தமிழர் மெய்யியல் தளத்திலிருந்தே கட்டப்பட்டது.

'மணி, மந்திரம், மருந்து மூன்றும் சித்த வைத்தியத்தில் கூறப்படுகின்றன.'[10]

இம்மூன்றும், மூன்று அறிவுத் துறைகள் தொடர்பு உடையவை.

மணி - வானியல் மற்றும் கால நிலை அறிவு

மந்திரம் - உளவியல்

மருந்து - உடற்கூறியல் மற்றும் மருந்தியல்

மருத்துவத் துறையின் வளர்ச்சியில் உடற்கூறியலும் வானியல் மற்றும் காலநிலை அறிவும் இணைந்து கொண்டன. மந்திரம் - என்பது ஆதி மருத்துவ முறையின் தொடர்ச்சியே ஆகும். அதாவது, தந்திர மருத்துவ முறையின் தொடர்ச்சி.

'மனதை உறுதியாக்கிக் கொள்ளும் முறையே மந்திரம்.' [11] என்கிறார் சாமி. சிதம்பரனார்.

உடல், மனம் ஆகிய பகுப்புகளில் மருந்து - உடலுக்கும், மந்திரம் - மனதுக்கும் சிகிச்சை அளித்தன.

**உடலுக்கு வெளியே ஆன்மாவை கற்பிதம் செய்தது வேதியர் கருத்தியல். உடலை ஒரு பண்டமாக மட்டுமே அணுகுகிறது இன்றைய முதலாளிய மருத்துவம்.**

**இவ்விரண்டுக்குமிடையிலான கருத்தியல் தொடர்புகள் யாவை?**

தொடரும்.


சான்றுகள்

1. உலகாயதம் - தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, சவுத் விசன், - *1999* நவம்பர்.

2. சங்ககாலச் சமுதாயம் - கா. சுப்பிரமணியன் (ஆய்வுக்கட்டுரைகள்) என்.சி.பி.எச். *1982*

3. தொல்காப்பியம் - மரபியல் *(27)*

4. சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம் - சாமி. சிதம்பரனார், தாமரை பதிப்பகம் - இரண்டாம் பதிப்பு, *2006* (பக். *27*)

5. மேலது - (பக். *29*)

6. மேலது - (பக்.*28*)

7. தாவின்சி கோடு கற்பனையா? வரலாறா? - தமிழ்நேயம் *25* (பக். *32*)

8. மேலது - (பக். *31,32*)

9. தமிழனுக்கு மெய்யியல் உண்டு - தமிழ்நேயம் *30* (பக்.*24*)

10.சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம் (பக்.*14*)சாமி. சிதம்பரனார்.

11.மேலது - (பக். *16*)


■

# த.தே.வி.இ நடத்திய எழுச்சிமிகு எல்லைக் காப்பு எல்லை மீட்பு மாநாடு

**''இருப்பதைக் காப்போம், இழந்ததை மீட்போம்''**! என்ற முழக்கத்துடன் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சார்பில் கடந்த 08.06.2008 ஞாயிறு அன்று ஈரோடு, கருங்கல்பாளையத்தில் தமிழக எல்லைக்காப்பு எல்லை மீட்பு முழுநாள் மாநாடு நடைபெற்றது.

காலை 9 மணியளவில் பன்னீர்செல்வம் பூங்கா பெரியார் சிலை அருகிலிருந்து பேரணி புறப்பட்டது. வடக்கெல்லைப் போராட்ட ஈகி குறளகம் திருவள்ளூர் பச்சையப்பனார் பேரணியைத் தொடங்கி வைத்தார். தோழர் ஓவியா, தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துப் பேரணிக்கு தலைமையேற்றார்.

பேரணியில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு முழக்கம் எழுப்பிச் சென்றனர். பேரணி முடிவில் தமிழர் தேசிய விடுதலை இயக்கக் கொடியை பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஏற்றிவைத்தார்.

மொழிப்போர் ஈகி திருப்பூர் ப.பெரியசாமி மாநாட்டுக் கொடியை ஏற்றிவைத்தார். வழக்கறிஞர் ப.பா.மோகன் ஒளிப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

எல்லை மீட்பு ஈகி பெ.சு.மணி அரங்கத்தில் காலை 10.30 மணியளவில் ஈரோடு பள்ளிக் குழந்தைகளின் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. கண.குறிஞ்சி வரவேற்புரையாற்ற, தோழர் வேலிறையன் தொடக்க அரங்கத்திற்குத் தலைமை ஏற்றார். தோழர் க.தேவேந்திரனும் க.இரா.முத்துசாமியும் ஒகேனக்கலில் இருந்து கொண்டு வரப்பட்ட ம.பொ.சி. சுடரை மங்கலக்கிழாரின் புதல்வர் ம.கி.சிவானந்தத்திடம் கையளித்தனர்.

தோழர் தியாகு எழுதிய ''*இழந்த மண் மீட்க எழுக தமிழகம்*'' என்ற குறுநூலைத் தோழர் கோ.பாவேந்தன் வெளியிட, அறிவுச் சோலை குப்புசாமியும் நா.ப.இராசாமியும் பெற்றுக் கொண்டனர். தெற்கெல்லைப் போராட்டத் தளபதி நேசமணி, வடக்கெல்லைப் போராட்ட வீரர் தணிகைக்கோ இரசீத் ஆகியோரின் படங்கள் திறந்துவைக்கப்பட்டன. த.தே.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் பெ.மணியரசன் தொடக்கப் பேருரை ஆற்றினார்.

பகல் உணவு இடைவேளைக்குப் பின் பா.குமரன், செ.பசும்பொன் ஆகியோர் எழுச்சிப் பாடல்கள் பாடினர். அடுத்து, தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவை சார்பில் திருப்பூர்பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

''தமிழக எல்லை- காக்க வேண்டியதும் மீட்க வேண்டியதும்'' என்ற தலைப்பில் தோழர் சிவ.காளிதாசன் தலைமையில் கருத்தரங்கம் தொடங்கியது. தெற்கு பற்றிக் குமரி மைந்தனும், வடக்கு பற்றிப் புலவர் சி.ஞானமணியும், கச்சத்தீவு பற்றிப் புலவர் செ.இராசுவும், தேசியத் தாயக உரிமை பற்றிப் பேரா.த.செயராமனும் உரையாற்றினர். கவிஞர் ஜெயபாஸ்கரன் கருத்தாழமிக்க கவி வீச்சு வழங்கினார்.



தணிகைக்கோ இரசீத் அவர்களின் புதல்வர் தணிகை மைந்தனும் தமிழ்நாடு மொழி, எல்லைப் போராட்டத் தியாகிகள் சங்கத்தின் சேலம் மாவட்டச் செயலாளர் மெ.இரத்தினமும் தோழர் சோழநாடன் தலைமையில் எல்லை போராட்ட வீரர்களை அறிமுகம் செய்து உரையாற்றினார்கள்.

முப்பதுக்கும் மேற்பட்ட எல்லைப்போராட்ட ஈகியருக்கு கேடயம் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டது.

தமிழகத்தைத் தமிழர் தாயகமாக இந்திய அரசு வெளிப்படையாக அறிந்தேற்க வேண்டும், தமிழகம் இழந்த பகுதிகளை மீட்டுக் கொடுக்கும் வகையில் புதிய எல்லை வரையறை ஆணையம் அமைக்க வேண்டும், தமிழக அரசு தமிழக எல்லைக் கண்காணிப்பு ஆணையம் அமைக்க வேண்டும். கச்சத்தீவை மீட்க வேண்டும், 1956 மொழிவழி மாநில அமைப்புக்குப்பின் தமிழகத்திற்குள் வந்தேறியவர்களை அயலராகக் கருதவேண்டும் என்பன உள்ளிட்ட 26 தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. தோழர் தியாகு விளக்கப் பேருரையாற்றினார்.

தோழர் நா.ஆறுமுகம் தலைமையிலான வாழ்த்தரங்கத்தில் கருநாடகத் தமிழ் மக்கள் இயக்கத்தின் தலைவர் சி.இராசன் பேசினார்.

தோழர் மு.மோகன்ராசு தலைமையில் நடைபெற்ற பொது அரங்கத்தில் கவிஞர் தமிழேந்தி (மா.பெ.பொ.க.), தோழர் பூ.சந்திரபோசு (தி.இ.பே.), தோழர் நிலவன் (த.ஒ.வி.இ.), தோழர் கி.வே.பொன்னையன் (பு.இ.மு.), தோழர் இரா.விசயகுமார் (த.தொ.மு.), தோழர் புலி.பாண்டியன் (சா.ஒ.பொ.மு.) ஆகியோர் உரையாற்றினர்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் நிறைவுப் பேருரையாற்றினார். மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பா.சண்முகவேல் நன்றியுரையுடன் மாநாடு நிறைவுற்றது.

# வேதாரண்யம் வேதனைபுரம் ஆனது ஏன்?



தமிழ்த் தென்றல் திரு.வி.க. தம் எழுத்துக்களில், 'இயற்கையோடு இயைந்த இன்பவாழ்வு' பற்றி கூறிச் செல்வார். இதன் பொருள் மனிதர்கள் இயற்கையோடு இணங்கி அந்த வழியில் இயற்கையை தமக்குச் சாதகமாக மாற்றி வாழ்வது என்பதாகும்.

ஆனால், மேற்கத்திய முதலாளிய உற்பத்திமுறை, மனிதர்கள் இயற்கையோடு மோதி அதனைப் பயன்படுத்திக் கொள்வது என்ற முறையில் தொடங்கியது.

மேம்பட்ட மனிதவாழ்வு அனைத்திற்கும் மேற்கத்திய உலகமே வழிகாட்டுகிறது என்ற பிழையான கருத்து இந்தியாவில் மட்டுமின்றி வளரும் நாடுகள் பலவற்றிலும் விதைக்கப்பட்டது. இதனால் விளைந்த தீமைகளை தமிழகமும் சுமக்கிறது.

வேதாரணியம் எனப்படும் மரைக்காட்டில் கெம்பிளாஸ்ட் வேதியியல் உப்புத் தொழிற்சாலை 3500 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் 1963ஆம் ஆண்டிலிருந்து செயல் பட்டு வருகிறது. இங்கு உணவு உப்பு உற்பத்தி மற்றும் சிறு உப்பு உற்பத்தி முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் வேதியியல் உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. ஓர் ஆண்டின் 365 நாட்களும் உயர் அடர்த்தி உப்பு நீரை 3500 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தில் ஆழமான குழிகளில் தேக்கி வைத்து அவற்றில் இருந்து வேதியியல் உப்பு தயாரிக் கிறார்கள்.

நாள் ஒன்றுக்கு சற்றொப்ப ஆயிரம் டன் உப்பை கழுவி தூய்மை செய்து வேதியியல் உப்பை தயாரிக் கிறார்கள். இவ்வாறு ஆயிரம் டன் உப்பை கழுவுவதற்கு அங்கு கேணி ஒன்று தோண்டப்பட்டு அதில் இருந்து நன்னீரை நாள்தோறும் பல்லாயிரம் லிட்டர் எடுக்கிறார்கள்.

3500 ஏக்கர் நிலப்பரப்பில் உயர் அடர்த்தி உப்பு நீர் எப்போதும் தேங்கிக் கிடப்பதால் வேதாரணியம் வட்டாரத்தில் பல ஊர்களில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறிவிட்டது. இந்த உப்பு நீர் சாகுபடிக்குப் பயன்படாது.

வேதாரணியம் வட்டாரம் பணப்பயிர் சாகுபடிக்கு பெயர்போன பகுதியாகும். புகையிலை, பூச்செடிகள், காய்கறிகள், மல்பரி போன்ற பணப்பயிர் சாகுபடி நிலத்தடி நீர் உப்பாகிவிட்டதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உயர் அடர்த்தி உப்பு நீரை ஒரே இடத்தில் ஆண்டு முழுவதும் தேக்கி வைப்பதாலும் புரோமின் என்ற வேதிப்பொருள் உற்பத்தி செய்யப்படுவதாலும் பல்வேறு வெளிநாடுகளிலிருந்து கோடியக்கரைக்கு வழக்கமாக வரும் பறவைகள் எண்ணிக்கை குறைந்து விட்டது. இதனால் வனத்துறை கெம்பிளாஸ்ட் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுத்து புரோமின் உற்பத்திக்கு தடை ஆணை வாங்கியுள்ளது.

ஒரு நாளைக்கு ஆயிரம் டன் உப்பைக் கழுவி துப்புரவு செய்வதற்கு பல்லாயிரம் லிட்டர் தண்ணீர் கிணற்றில் இருந்து எடுப்பதால் நிலத்தடி நீர் அப்பகுதியிலிருந்து பெருமளவு வற்றிவிட்டது.

நாட்டு மக்களுக்குத் தேவையான உணவு உப்பு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வேதாரணி யத்தில் உற்பத்தி செய்யப்பட்டு தான் வந்தது. உமணர்கள் என்ற உப்பு வணிகர்கள் வண்டிகளில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு போய் தொலைவு மிக்க ஊர்களுக்கும் வேற்று மொழிப் பகுதிகளுக்கும் விற்று வந்தனர். அந்த உற்பத்தி முறை இயற்கையோடு இணங்கி இயற்கையை மனிதனுக்குச் சாதக மாக்கி மாற்றிக் கொண்ட தொழில் நுட்பம் சார்ந்தது. இப்பொழுது கெம்பிளாஸ்ட் நிறுவனம் செய்யும் உற்பத்திமுறை இயற்கையோடு மோதி அதைக் காயப்படுத்துவதாக உள்ளது.

இறால் பண்ணைகள் இப்பகுதியில் ஏராளமாக அமைக்கப் பட்டதால் அக்குளங்களில் தேக்கப் பட்ட உப்பு நீரால் நிலத்தடிநீர் உவர் நீராக மாறி விளைநிலங்கள்

சாகுபடிக்குத் தகுதியற்றதாகக் கெட்டுவிட்டன.

இப்பகுதியில் உள்ள வானங்கோட்டகம், நொச்சிக் கோட்டகம், மானங்கொண்டான் ஆறு, ஆப்பக்கன்னி ஏரி, ஆள்கொண்டான் ஏரி, தெத்தேரி, ரயிலடிப்பாலம், சாம்புலம். நாசிவன்புலம் ஏரி உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட நீர்நிலைகள் தூர்ந்து போயுள்ளன. பொதுப் பணித்துறைப் பொறுப்பில் உள்ள இந்நீர்நிலைகள் தூர் வாரப்படாமல் பாழ்பட்டுக்கிடக்கின்றன.

வேதாரணியம் பகுதியில் குடிநீர்ப்பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நிலத்தடிநீர் உப்பு நீராக மாறிவிட்டதால் குடிநீர் கைப்பம்புகள் போடுவதை அரசு நிறுத்திவிட்டது. 1986இல் தொடங்கப்பட்ட பட்டுக்கோட்டை -வேதாரணியம் குடிநீர்த் திட்டம் செயலுக்கு வராமலே மறைந்து விட்டது. இப்பொழுது செயல்பட்டு வரும் கொள்ளிடம்-வேதாரணியம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வரும் குழாய் நீர் அடிக்கடி நின்று விடுகிறது. அதற்கு மின்வெட்டு மற்றும் அதிகாரமற்ற மறைமுகக் குழாய் இணைப்புகள் போன்றவை காரணங்களாகக் காட்டப்படுகின்றன.

தன்னிறைவுப் பொருளா தாரத்தோடு அமைதியாக, மாசற்ற சுற்றுச் சூழலில் நெய்தல் வாழ்க்கை வாழ்ந்து வந்த வேதாரணியம் பகுதி மக்களின் அன்றாட வாழ்வு இப்பொழுது அவதிக்குள்ளாகி உள்ளது.

மக்களின் வாழ்வை இந்தளவுக்குப் பலி கொடுத்து செயல்படுத்தப்படும் கெம்பிளாஸ்ட் ஆலையில் வேலை வாய்ப்பாவது மக்களுக்கு கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. தொழிலாளர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. ஆனால் உற்பத்தியோ பெருகி வருகிறது. 5 ஆண்டுகளுக்கு முன் கெம்பிளாஸ்ட் உற்பத்தி சற்றொப்ப ஆண்டுக்கு 70 ஆயிரம் டன். அப்பொழுது தொழிலாளர் எண்ணிக்கை 106. இப்பொழுது அங்கு உற்பத்தி ஆண்டுக்கு ஒரு லட்சத்து எழுபதாயிரம் டன். தொழிலாளர் எண்ணிக்கை வெறும் 73 பேர்கள் தான். அதிலும் அங்கு பார்ப்பனர் கொற்றம் கோலோச்சுகிறது. பார்ப்பன அதிகாரிகள் தங்களின் சிற்றரசாக கெம்பிளாஸ்ட் நிறுவனத்தை நடத்துகிறார்கள். பார்ப்பன ஊழியர்களுக்கு வேலைப் பளு குறைவு. பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு வேலைப்பளு அதிகம். பார்ப்பனர் அல்லாத ஊழியர்களுக்கு சம்பளமும் குறைவு.

பார்ப்பனர் அல்லாத ஊழியர்களை பார்ப்பன அதிகாரிகள் ''வாடா போடா'' என்று ஏசி இழிவு படுத்துகின்றனர். 12 மணிநேரம் வேலை வாங்குகின்றனர்.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தி, விளை நிலங்களை பாழ்படுத்தி, குடிநீருக்கும் பயன்படாமல் நிலத்தடி உப்பாக்கி மக்கள் விரோத தொழிற்சாலை நடத்தும் கெம்பிளாஸ்ட் முதலாளிய நிர்வாகத்திற்கு எதிராக வேதாரணியம் பகுதி மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர். '**மரைக்காட்டுத் தமிழ்ச்சங்கம்**' என்ற அமைப்பு இச்சீர்கேடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் அமைத்துள்ளது.

தமிழக அரசு தக்க வல்லுநர் குழு அமைத்து கெம்பிளாஸ்ட் நிறுவனத்தை ஆய்வு செய்து அத்தொழிற்சாலையால் சுற்றுச் சூழல் மாசடைவதையும், நிலத்தடி நீர் உப்பு நீராக மாறுவதையும் தடுக்க வேண்டும்.

வேதாரணியம் பகுதி மக்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் அன்றாடம் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தூர்ந்து கிடக்கும் நீர்நிலைகளைத் தூர்வாரி, நன்னீர் தேங்கச் செய்ய வேண்டும். ஓடைகளைத் தூர்வார வேண்டும்.

கெம்பிளாஸ்ட் ஆலையில் தொழிற்சாலை சட்டம், தொழிலாளர் சட்டம் ஆகியவற்றை முழுமையாக செயல்படுத்த வேண்டும்.

பார்ப்பனச் சாதி வெறியோடு செயல்படும் நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் மேற்கத்தியப் பாணி உற்பத்தி முறையையும் மிகைத் துய்ப்பு முறையையும் கைவிட்டு தற்சார்பும் தன்னிறைவும் கொண்ட இயற்கையோடு இணங்கிப் போகும் சிறுசிறு எளிய உற்பத்தி முறையை நாட வேண்டும்.

**-நம் செய்தியாளர்**

## மணமக்கள் வாழ்க



த.தே.பொ.க. திருத்துறைப்பூண்டி ஒன்றியச் செயலாளர் தோழர் கா.அரசு அவர்களின் தம்பியும் தி.து.பூண்டி ஆத்திக்கோட்டகம் திரு.காத்தையன்-திருவாட்டி குஞ்சம்மாள் ஆகியோர் மகனுமான செல்வன் **கா.கண்ணனுக்கும்** ஒரத்தநாடு வட்டம் தொண்டராம்பட்டு திரு. இளங்கோவன்-திருவாட்டி பூர்ணகுமாரி மகள் செல்வி **இ.நித்தியாவுக்கும்** 5.6.2008 அன்று திருத்துறைப் பூண்டியில் தோழர் பெ.மணியரசன் தலைமையில் இனிதே திருமணம் நடந்தது. தோழர்கள் நா.வைகறை, தை.செயபால், தொண்டராம் பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. முருகையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500 அன்பளிப்பு வழங்கப்பட்டது.

மணமக்கள் நீடுவாழ்க!

# தமிழ் நாட்டு எண்ணெய் நெருக்கடி தீர..

▪ கி.வெ.



**பெ**ட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகளை இந்திய அரசு தாறுமாறாக உயர்த்தி உள்ளது. இது அனைத்து நுகர் பொருள்களின் விலை யேற்றத்துக்கும் வழிகோலுகிறது. இந்த விலை உயர்வைத் தவிர்த்திருக்க முடியும். அதுவும், தமிழகம் இந்த விலை உயர்வை சுமக்க வேண்டிய தேவையே இல்லை.

உலகச் சந்தையில் பெட்ரோலியத்தின் விலை மின்னல் வேகத்தில் உயர்ந்து வருவதை இதற்குக் காரணமாக ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து வருவது உண்மையே.

எண்ணெய் உற்பத்தியைவிட, தேவை அதிகரித்ததன் காரணமாக இயல்பாக இந்த விலை உயர்வு ஏற்படவில்லை. மாறாக, உலகமய முற்றுரிமை முதலாளிகளின் வரம்பற்ற இலாபவெறியே கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் உலக எண்ணெய் நுகர்வு 6 விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ள நிலையில் (ஆண்டுக்கு சராசரி 1.5% உயர்வு), பெட்ரோலியத்தின் விலை இதே நான்காண்டுகளில் 500 விழுக்காடு (ஐந்து மடங்கு) உயர்ந்துள்ளது. அதாவது 6 விழுக்காடு உயர வேண்டிய இடத்தில் 500 விழுக்காடு உயர்வு!

இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

ஒன்று: அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜப்பான் உள்ளிட்ட வல்லரசு நாடுகளில் பங்குச் சந்தை வீழ்ச்சி அடைந்து வருகிறது. இரண்டு: அமெரிக்க டாலர் நாணய மதிப்பு ஆட்டம் காண்கிறது.

எனவே, பங்குச் சந்தை நிலை பெறுகிற வரையிலும் பங்குச் சந்தையில் தங்கள் பணத்தை உலகமய முதலாளிகள் பலர் முதலீடு செய்ய விரும்பவில்லை. டாலர் நாணயமாகக் கையிருப்பு வைத்திருந்தாலும் அதன் மதிப்பு தேய்ந்து இழப்பைத்தான் தரும்.

இதிலிருந்து தப்பிக்க அம் முதலாளிகளுக்கு இரண்டு வழிகள்தாம் உள்ளன, ஒன்று: தங்கத்தில் முதலீடு செய்து, தங்கள் பணத்தைத் தங்கமாக மாற்றிக் கொள்வது. இரண்டு: கச்சா எண்ணெயில் முதலீடு செய்து, அதனை வாங்கிக் குவிப்பது. பெட்ரோலியம் தான் கறுப்புத் தங்கமாயிற்றே!

தங்கத்தையும், எரி எண்ணெயையும் பெருமுதலாளிகள் வாங்கிக் குவித்துப் பதுக்கி வைப்பதால் இவற்றின் விலை செயற்கையாக உயர்கிறது.

இந்த எண்ணெய் விலை உயர்வை அப்படியே இந்திய நாட்டு நுகர்வோர் தலையில் சுமத்துவது தேவையற்றது. இந்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் இந்த உலகச் சந்தை விலையேற்றத்திற்கு ஏற்ப இங்கு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த முடியாததால் இழப்பைச் சந்தித்து வருவதாகக் கூப்பாடு போடுவதிலும் முழு உண்மை இல்லை. ஏனெனில் விற்பனைக்கு வருகிற எல்லா எண்ணெயும் உலகநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை அல்ல. இந்தியாவிற்குள் உற்பத்தியாகிற எண்ணெயும் உண்டு.

இந்த எண்ணெய்க்கு உற்பத்திச் செலவைக் கணக்கிடுவது கற்பனைக் கணக்காக உள்ளது. வெளிநாட்டில் கொள்முதல் செய்து, கப்பலில் ஏற்றிய செலவு, கப்பல் கட்டணம், கப்பலில் சிந்தி ஆகும் சேதாரம், இறக்குமதி வரி ஆகியவை எதுவும் உள்நாட்டில் உற்பத்தியாகும் எண்ணெய்க்கு இல்லை. ஆனால் அவையெல்லாம் நடந்தது போலக் கற்பனைச் செலவு சேர்க்கப்பட்டு, கச்சா எண்ணெயின் அடிப்படை விலை தீர்மானிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, இங்கு விதிக்கப்படும் வரிகள். பெட்ரோல் விலையில் அனைத்துமே அப்பொருளுக்கான விலை அல்ல. ஒரு லிட்டர் பெட்ரோல் விலையில் 53 விழுக்காடு அதன் மீது நடுவண் அரசும், மாநில அரசுகளும் விதிக்கும் வரிகள் தான். அதாவது இன்று ஒரு லிட்டர் சாதாரண பெட்ரோல் ரூ. 55.53 என்றால், அதில் வரி மட்டுமே ரூ. 29.43 ஆகும். ரூ. 26.10 தான் பெட்ரோலுக்கான அடிப்படை விலை.

அதேபோல் டீசல் விலையில் 39 விழுக்காடு அரசுகளின் வரிப்பகுதி.

இந்திய அரசின் வரிவருமானத்தில் முதன்மையானது எண்ணெய் மீதான வரிதான். 2008 - 09 ஆண்டில் மட்டும் 1,20,000 கோடி ரூபாய் எண்ணெய் வரி வருவாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தையில் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தால் அதற்கேற்ப இந்த வருமானமும் அரசுக்கு உயர்கிறது.

மேற்சொன்ன கற்பனை விலை நிர்ணயிப்பையும், வரி விதிப்பையும் குறைத்தாலே இந்த விலை உயர்வைத் தவிர்த்திருக்க முடியும்.

இந்த எண்ணெய் விலை உயர்வினால் கொள்ளை இலாபம் அடைந்தவர்கள் ரிலையன்சும், எஸ்ஸார் எண்ணெய்க் குழுமமும் ஆகும். இவர்கள் அடித்த மிகை இலாபத்தின் மீது வரிவிதித்து, இவர்களுக்கு எண்ணெய் ஏற்றுமதி மானியம் வழங்குவதை நிறுத்தினால் கூட பல்லாயிரம் கோடி ரூபாய் அரசின் கருவூலத்திற்குக் கிடைக்கும். பெட்ரோல், டீசல் எரிவாயு விலையை ஏற்ற வேண்டி வராது. மாறாக சலுகை விலையில் வழங்க முடியும்.

இந்த விலை உயர்விலும் அதிக விலை உயர்வு தமிழ்நாட்டிற்குத்தான். எடுத்துக்காட்டாக இப்போது பெட்ரோல் விலை தில்லியில் லிட்டருக்கு ரூ; 5/- உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இது ரூ. 5.43 உயர்த்தப்பட்டுள்ளது. டீசல் விலை உயர்வு தில்லிக்கு ரூ. 3/-. ஆனால் சென்னைக்கு ரூ. 3.29 ஆகும். ஒவ்வொரு முறையும் தமிழகத்திற்குக் கூடுதல் விலையே சுமத்தப்படுகிறது.

“இந்த விலை உயர்விலும் அதிக விலை உயர்வு தமிழ்நாட்டிற்குத்தான். எடுத்துக்காட்டாக இப்போது பெட்ரோல் விலை தில்லியில் லிட்டருக்கு ரூ; 5/- உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இது ரூ. 5.43 உயர்த்தப்பட்டுள்ளது. டீசல் விலை உயர்வு தில்லிக்கு ரூ. 3/-. ஆனால் சென்னைக்கு ரூ. 3.29 ஆகும். ஒவ்வொரு முறையும் தமிழகத்திற்குக் கூடுதல் விலையே சுமத்தப்படுகிறது.

**இது இந்திய மயத்தால் தமிழர்கள் சுமக்கிற கூடுதல் சுமை!”**

இது இந்திய மயத்தால் தமிழர்கள் சுமக்கிற கூடுதல் சுமை!

நாகை மாவட்டம் நரிமணத்தில் உலகத்தரம் மிக்க பெட்ரோலியம் ஏராளமாகக் கிடைக்கும் போது, குத்தாலத்திலும், திருவாரூர் மாவட்டம் கோட்டூரிலும் எரிவாயு பீறிட்டுக் கிடைக்கும் போது இந்த விலை உயர்வைத் தமிழர்கள் மீது தில்லி அரசு திணிப்பது அநீதியானது.

உலகச் சந்தையில் என்ன விலை விற்றாலும் ஈரானிலும், சவுதி அரேபியாவிலும் இன்னபிற எண்ணெய் வள நாடுகளிலும் அந்நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் பெட்ரோல், டீசல் விற்கப்படுவதைப் பார்க்கிறோம்.

ஆனால் இங்கு கிடைக்கும் கச்சா எண்ணெய் மீது தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை. உரிய உரிமைத் தொகை கூட (ராயல்டி) கொடுக்காமல் கண்ணெதிரே பகல் கொள்ளை அடித்துச் செல்கிறது தில்லி அரசு!

தமிழ்நாட்டு மண்ணிலிருந்து 2006-2007 நிதியாண்டில் மட்டும் 16.51 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டுள்ளது. காவிரிப் படுகையிலிருந்து மட்டும் 72170 மெட்ரிக் டன் எரிவாயு கிடைத்திருக்கிறது. (காண்க: *சென்னை பெட்ரோலியம் கார்ப்பரே-ன் ஆண்டறிக்கை* பக் 28, 29).

இந்த எண்ணெய்யும், எரிவாயுவும் தமிழகத்திற்கு சொந்தமாக இருந்தால் இங்கு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயரவே தேவையில்லை. இப்போதுள்ளதை விட பாதி விலையில் தமிழ்நாட்டு மக்களுக்கு பெட்ரோல், டீசல் வழங்கமுடியும். காவிரிப் படுகையில் சமையல் எரிவாயு உற்பத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டரை மடங்கு உயர்ந்துள்ளது (Performance Overview – Chennai Petroleum Corporation Limited - from 2001 to 2007) இங்கு கிடைக்கும் கச்சா எரிவாயுவை தூய்மைப் படுத்தி பயன்பாட்டுக்கு கொண்டு வரத் தூய்மையாக்கல் நிறுவனங்கள் உரிய அளவு நிறுவப்பட்டால், தமிழ்நாடு எரிவாயுவில் தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் திகழ முடியும். மிகக் குறைந்த விலையில் சமையல் எரிவாயுவை தமிழ்நாட்டு மக்களுக்கு தாராளமாக வழங்கலாம்.

தேவையற்ற முறையில் உலகமயத்திலும், இந்தியமயத்திலும் சிக்கி தமிழர்கள் எண்ணெய் விலை உயர்வை சுமக்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாட்டில் கிடைக்கும் பெட்ரோலியமும், எரிவாயுவும் தமிழக அரசுக்கே சொந்தமாக்கப் படவேண்டும். இதற்குரிய சட்ட ஏற்பாட்டினை இந்திய அரசு உடனே செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் இந்தியத் தமிழக அரசுகளும் மக்களும் இச்சிக்கலைச் சந்திக்க சில மாற்றுவழிகளையும் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

எல்லையற்ற எண்ணெய் நுகர்வு வரம்புக்குட்படுத்தப்பட வேண்டும். இதில் அரசுகளும், அரசியல் கட்சிகளும் முதன்மைப் பங்காற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள நேரங்களில் பெருநகரச் சாலைகளில் இயங்கிய நிலையிலேயே நிற்கும் வாகனங்களால் தில்லியில் மட்டும் ஒரு மாதத்திற்கு 8 கோடி ரூபாய் வரை விரையமாகிறது என பெட்ரோலிய சிக்கன ஆய்வு சங்கம் குறிப்பிடுகிறது. பதினைந்து விநாடிக்கு மேல் சாலையில் இயங்கிய நிலையில் வாகனம் நிறுத்தப்படுவதால் ஆண்டுக்கு 994 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக கணக்கிடப்படுகிறது.

தமிழக அரசு போக்குவரத்துக் கழக வண்டிகளில் பலவும் எந்திரக் கோளாறு இருப்பதன் காரணமாக நிற்கும் நேரமெல்லாம் இயங்கிய நிலையிலேயே நிறுத்தப் படுகின்றன. சரியான பராமறிப்பு இருந்தால் 15 விநாடிக்கு மேல் நிற்க வேண்டிய இடங்களில் எஞ்சினை நிறுத்தி எண்ணெயைச் சேமிக்க முடியும்.

சக்கர டயர் பராமரிப்பு சரிவர இல்லாததால் 10 விழுக்காடு கூடுதலாக எண்ணெய் செலவாகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றையெல்லாம் சரிசெய்தால் அரசுக்கு பல கோடிரூபாய் இழப்பு தவிர்க்கப்படும்.

அரசும் தனியார் நிறுவனங்களும் உருவாக்குகிற குடியிருப்புகள் மற்றும் கட்டிட அமைப்புகள் எண்ணெய் நுகர்வை அதிகப்படுத்துவதாக ஆய்வுகள் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினாலும் எந்தத் திருத்தமும் ஏற்படவில்லை. கட்டடங்கள் போதிய காற்றோட்டத்தோடும் இயற்கை வெளிச்சம் கிடைக்கும் வகையிலும் கட்டப்படுவதை உள்ளாட்சிகளும் உரிய நிர்வாகங்களும் கவனிப்பதே யில்லை. பிற நாடுகளில் இருப்பது போல் இங்கு மாடிக் கட்டிடங்களில் கூரைப் பூங்கா (Roof Garden), முன்வெளியில் மரங்கள் போன்றவை கட்டாயப் படுத்தப்படுவதில்லை.

அலுவலகங்கள் நகரத்தின் உள் பகுதியிலும் குடியிருப்புகள் நகரத்தின் விளிம்புகளிலும் நிறுவப் படுகின்றன. இது இரு சக்கர, நான்கு சக்கர தானியங்கி வாகனங்களின் பெருக்கத்தைத் தூண்டுகின்றன.

தகவல் தொழில் நுட்பம் வளர்ந்துள்ள இந்தக் காலத்தில் ஒரே இடத்தில் அரசு அலுவலகங்களைக் குவித்து வைப்பது தேவையற்றது. துணைத் தலைமைச் செயலகமே கூட திருச்சியிலோ மதுரையிலோ அமைக்கப்படலாம் என்பதை தொடர்ந்து நாம் வலியுறுத்தி வருகிறோம். இணைய தளத்தின் வழியே கோப்புகளை

> போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள நேரங்களில் பெருநகரச் சாலைகளில் இயங்கிய நிலையிலேயே நிற்கும் வாகனங்களால் தில்லியில் மட்டும் ஒரு மாதத்திற்கு 8 கோடி ரூபாய் வரை விரையமாகிறது என பெட்ரோலிய சிக்கன ஆய்வு சங்கம் குறிப்பிடுகிறது. பதினைந்து விநாடிக்கு மேல் சாலையில் இயங்கிய நிலையில் வாகனம் நிறுத்தப்படுவதால் ஆண்டுக்கு 994 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக கணக்கிடப்படுகிறது.

ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கணநேரத்தில் மாற்றிக் கொள்ள வழியிருக்கும் போது அரசு அதிகாரிகளைத் தேடி, அமைச்சர்களைத் தேடி மக்கள் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு அலைக்கழிக்கப்படுவது தேவையற்றது. போக்குவரத்து நெரிசலையும் எண்ணெய்ச் செலவையும் இது கூட்டுகிறது.

ஒவ்வொரு இயற்கை இடர் நிகழும்போதும் தேவையற்ற முறையில் உயர்மட்ட அதிகாரிகள் வாகனங்களில் பரிவாரங்களோடு பயணம் செய்து நேரடி விசாரணை என்பதெல்லாம் அதிகாரத்தைக் காட்டுகிற வீண் விரயங்களாகும். இவை தவிர்க்கப்பட வேண்டும்.

அரசியல் கட்சித் தலைவர்கள் தங்கள் பாதுகாப்புத் தேவைக்கு மேல் வெற்று ஆடம்பரத்திற்காக வாகனங்கள் அணிவகுக்க வலம் வருவது சமூகத்திற்கு எதிரான குற்றச் செயலாகும். எண்ணெய் நுகர்வை தேவையற்ற முறையில் இவை அதிகரிக்கின்றன.

மகிழுந்து நிறுவனங்களும் இரு சக்கர வாகன உற்பத்தி யாளர்களும் வங்கிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டு வட்டியற்ற கடன், குறைந்த வட்டிக்குக் கடன் என்று வலை வீசி நடுத்தர மக்களை மட்டுமின்றி கிராமப்புற ஏழை களையும் வாகனங்கள் வாங்கத் தூண்டுகின்றன. நுகர்வுப் பண்பாட்டில் சிக்கியிருக்கிற இளைஞர்களும் இளம் பெண்களும் வாகனங்களில் வலம் வருவது அந்தஸ்த்தின் அடையாளம், நாகரிகத்தின் அறிகுறி என்று தேவையின்றி வாகனங்களை வாங்குவதும் இதற்கு ஒரு காரணமாகும்.

பசுமைப் புரட்சி ஏற்படுத்திய தீய விளைவுகள் தெளிவாகத் தெரிந்த பின்பும் இரசாயன வேளாண்மை தொடருவது எண்ணெய் நெருக்கடியை கூடுதலாக்குகிறது.

உலகம் முழுவதும், இந்தியாவில் பல மாநிலங்களிலும் உரத் தட்டுப்பாடு, உரப் பதுக்கல், உர விலையேற்றம் ஆகியவை உழவர்களை கடுமையாகத் தாக்கி வருகின்றன. உழவர்கள் இரசாயன வேளாண்மையைக் கைவிட்டு இயற்கைச் சார்ந்த நீடித்த வேளாண்மைக்கு மாறுவதே நிலைத்த மாற்றாகும். இயற்கை வேளாண்மைக்கு கூடுதல் மானியங்கள் அளித்து உழவர்களை பெட்ரோலிய பொருள் பயன்பாட்டிலிருந்து மாற்றுவதற்கு அரசு திட்டமிட்ட முறையில் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

கிராமங்களைச் சார்ந்து சிறு சிறு நகரங்களில் வேளாண் சந்தைகளை பரவலாக உருவாக்க வேண்டும். செங்கல்பட்டு நுகர்வோர் கோயம்பேடு சந்தை விலையைச் சார்ந்திருப்பதும், திருக்காட்டுப் பள்ளியில் இருப்பவர் திருச்சி சந்தை நிலவரத்தை எதிர்நோக்கியிருப்பதும் சந்தை மையப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இது உழவர்களையும் நுகர்வோரையும் ஒருசேரத் தாக்குவதோடன்றி எரி எண்ணெய்ப் பயன்பாட்டையும் அதிகரிக்கிறது. இது தேவையற்றது. கிராமங்களால் சூழப்பட்ட சிறுசிறு நகரங்களில் சந்தைகள் உருவாவது தேவையற்ற வாகனப் போக்குவரத்தை குறைக்கும். நுகர்வோருக்கு விலையைக் குறைக்கும். பசுமையான உணவுப் பொருள்கள் அவ்வப்போது கிடைக்க வழி ஏற்படுத்தும். இடைத்தரகர்களின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தும்.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டுக்கு மாற்றாக அந்தந்த மண்ணுக்கு ஏற்ற மாற்று எரி எண்ணெய்களை அரசுகள் முன்வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தமிழ் நாட்டில் புன்னை எண்ணெய் டீசலுக்கு மாற்றான சிறந்த எரிபொருளாகும்.

ஒட்டுமொத்தமாக படித்த இளைஞர்கள் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து மீளவேண்டும். மண்ணின் மரபான வாழ்வு முறையை, நுகர்வு முறையை நேசிக்க வேண்டும். அதுதான் தேவையற்ற எண்ணெய் நுகர்வை குறைத்து தேவையற்ற செலவிலிருந்தும் ஏழை நடுத்தர மக்களைப் பாதுகாக்கும். அரசும் ஊடகங்களும் தாங்கள் முன்னெடுத்துக்காட்டாகத் திகழ்ந்து மக்களை இத்திசையில் ஊக்குவிக்க வேண்டும். ■




### சமூகப் பணி

புதிய தமிழர் கண்ணோட்டத்தின் ‘கெடுதலிலும் ஒரு நன்மை’ என்ற கட்டுரையின் தலைப்பும் கருத்தும் மிக நன்று.

மோசடி நிறுவனங்கள் குறித்த கட்டுரை பலருக்கும் கொண்டு செல்லப்பட வேண்டிய சமூகப் பணியாகும்.

சுப. வீரபாண்டியன் ஆட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு திராவிடத்தைத் தூக்கிப் பிடித்து வரும் வேளையில், தமிழ்த் தேசியத்திற்கும் த.தே.பொ.க.விற்கும் எதிரான கொள்கையற்ற பத்மநாபன் கும்பலின் நூல் வெளியீட்டில் உரையாற்றி இருந்த மதிப்பையும் இழந்துள்ளார்.

*-ஆ.சு.மணியன்,*
*திருத்துறைப்பூண்டி*

### பங்காளிகள் என்பது தமிழர்களுக்குப் புரியும்

‘வர்க்கப்போராட்டத்தின் ஒரு வகையினம் தான் தேசிய விடுதலைப் போராட்டம்’ என்று கூறி இதுவரை நடந்த பொதுவுடைமைப் புரட்சி எல்லாம் தேசியத் தன்மையை முதன்மைப் படுத்தியவை என்ற பெ.ம.வின் கருத்து, ஆழமும் செறிவும் நிறைந்தது.

‘புதிய ஜனநாயகம்’ பற்றிய கி.வெ. கட்டுரையைப் படித்தபோது எதிரி யார் என்று தெரியாமல் புதிய ஜனநாயகம் இதழ் புலம்புவது புலப்படுகிறது. பங்காளிகள் இவர்களுக்குப் பகையாளிகள். பகையாளிகளே இவர்களுக்குப் பங்காளிகள் என்பது தமிழர்களுக்கு நன்றாகப் புரியும்.

தமிழின எதிரி மணிசங்கர் ஐயர் பஞ்சாயத்து ராஜ்மூலம்- பிற்காலத் தமிழக அரசர்கள், குறுநில மன்னர்களால் வீழ்த்தப்பட்ட முறையில் இப்போது தமிழக மாநில உரிமைகளை பஞ்சாயத்துகள் வழியாக அழிக்கச் செய்துவரும் சதியை பேரா.த.செயராமன் வெளிப்படுத்தியமை நன்று.

*-முனைவர் ச.இரமேஷ்,*
*கீழ்க்கடம்பூர்*

### கீழறுப்பு வேலைகளால் துவளாது

‘தமிழ்த் தேசியப் புரட்சியில் வர்க்கச் சுரண்டல் எதிர்ப்பும், வர்ணசாதி ஒடுக்குமுறை எதிர்ப்பும் பிரிக்க முடியாத கூறுகளாக இயைந்தும் இணைந்தும் இருக்கின்றன எனும் பெ.ம.வின் கருத்து ஆழமானது; பொருள் பொதிந்தது. மார்க்சியர்களால் பரிசீலிக்கப்பட வேண்டியதுமாகும்.

‘புதிய தமிழர் கண்ணோட்டம்’ கீழறுப்பு வேலைகளால் துவளாமல் முன்னேறும்; முன்னேற வேண்டும்.

*- அ.ப.பாலையன், விடங்கலூர்*

### தலையங்கம் சிறப்பு

புதிய தமிழர் கண்ணோட்டத்தின் சூன் இதழ் தலையங்கம் படித்தேன். ‘‘அமைதி முயற்சிக்குப் பலன் இல்லையேல் ஆய்த வழிதான் எஞ்சியுள்ளது. மாவோயிஸ்ட் படைவீரர்கள் மட்டும் போராடுவதாக இல்லாமல் மக்களின் பேரெழுச்சியும், படைவீரர்களின் போரும் கலந்ததாக இருக்க வேண்டும். நேப்பாள புரட்சி பின்னடையக் கூடாது’’ என்று தலையங்கத்தின் இறுதிவரிகள் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றன. இதுதான் என் விழைவும் ஆகும்.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் இளைய பங்காளிகளும் நேப்பாள புரட்சியின் ஆதாயங்களை அழித்து ஒழிப்பதற்கு அனைத்து வழிகளிலும் முயலுவர். இதை நாம் மறந்துவிடக் கூடாது.

*-தி.க.சி.,நெல்லை*

## தோழமைக் குரல்கள்

தமிழர் கண்ணோட்டம் இதழுக்கு ஏற்பட்ட சோதனையை அறிந்து வருந்துகிறேன். இதழ் மீண்டும் த.தே.பொ.க. கட்சிக்கே வர வாழ்த்துகிறேன். புதிய தமிழர் கண்ணோட்டம் இதழுக்கு நன்கொடையாக ரூ.500 அனுப்பி உள்ளேன். அன்புடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

*-ந.அப்துல்ரகுமான்,ஆங்காங்*

புதிய தமிழர் கண்ணோட்டம் படித்தேன். தமிழ்த் தேசிய இனம் அடைந்துவரும் இன்னல்கள் பளிச்சென தெரிகிறது.

மொழி உணர்வு. இன உணர்வு இல்லாத கங்காணிகளின் கயமைத் தனம் தமிழினத்தை அச்சுறுத்தி அடிமைச் சேற்றில் தள்ளுகிறது. தமிழ்த் தேசியப் புரட்சியே அடிமைத்தனம் அறுக்கும் வாள் என்பதில் ஐயமில்லை.

எனவே தமிழர்கள் கட்சிகளாலும் கருத்துக்களாலும் கலைந்து கிடந்தாலும் தமிழால் ஒன்றுபட்டு உட்பகை, வெளிப்பகை உணர்வுகளைப் புறந்தள்ளி போர்க்குணம் பெற வேண்டும்.

புதிய தமிழர் கண்ணோட்டம் இந்த வழியில் வீரநடை போடட்டும்.

*-இர.அரங்கநாடன், அரியலூர்-4*

தமிழ் இனத்துக்கான த.தே.பொ.க.வின் முயற்சி மேலானது. தமிழர் சிறப்பாக தனித்தனியே இருப்பதும், கூட்டாக செயல் படாததும் ஒவ்வொருவருக்கும் இருக்கும் கூர்மூளையா?

கூர்மூளையற்ற கன்னட, இந்திக்காரர்கள் கூட கூடி வெல்வதும் நாம் இவ்வாறு இருப்பதும் எவ்வளவு காலம்? நாம் ஒன்றுபட்டு எழுந்தால் அவர்களெல்லாம் எந்த மூலைக்கு? தமிழ் தமிழர் ஒன்றியத்தில் இணையும் காலம் தொலைவில் இல்லை.

*-செஞ்சிக் கண்ணனார்,*
*செஞ்சி-2*

புதிய தமிழர் கண்ணோட்டம் இதழ் கிடைக்கப் பெற்றேன். இதேவேளையில் த.தே.பொ.க.வில் இருந்து பிரிந்து போனவர்களின் கண்ணோட்டம் இதழ் நான் கேட்காமலேயே வந்தது; வருகிறது. இதன் முன் அட்டையிலே உள் முகம் தெரிந்தது. பின் அட்டையில் விளம்பரங்கள். இதழ் சென்ற இடத்தை காட்டியது. பார்ப்பனர்களுக்குள் எவ்வளவு உட்பூசல் இருப்பினும் வெளியே தெரியாது; ஆனால்

தமிழர்களின் உட்பகை மறுநாளே தெரிந்துவிடுகிறது. ''கெடுதலிலும் ஒரு நன்மை'' உண்மை நிலைப் பாட்டை வெளிப்படுத்தியது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலேயே கருணா தோன்றிய போது நம்மிடத்திலே அ.பத்மநாபன் தோன்றியதில் வியப்பு ஏதுமில்லை. போன இடம்தான் தமிழர் கண்ணோட்டமாய் இனி இருக்காது.

தமிழக விடுதலையில்தான் அனைத்துத் தமிழர்களும் பயன் பெறுவர்.

புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு என்றும் துணை நிற்பேன்.

*-தமிழ்ச்சேரன், வேலூர்-2*

*''தமிழன் என்கிற தங்கச் சீப்பு*

*நம்மிடம் இருந்து என்ன பயன்?*

*நாம்தான் ஒருவரை ஒருவர் மொட்டையடிப்பதில் முந்திக் கொள்கிறோமே''*

என்ற கவிதையை சமீபத்தில் நினைத்துப் பார்த்தேன். அந்த கவிதைக்கு உயிர் கொடுத்திருக் கிறார்கள் இந்த முத்திசை மூவர். இவர்களைப் போன்றவர்கள் எத்திசை சென்றாலும் எடுபடமாட்டார்கள் என்பதை வரலாற்றுச் சான்றோடு தோழர் பெ.ம. ''கெடுதலிலும் ஒரு நன்மை'' என்ற கட்டுரையில் கூறியிருப்பதைக் கண்டு எனது உள்ளம் உவகையடைந்தது. துரோகிகள் வரலாற்றில் நிற்பதில்லை என்பதை இரசிய வரலாறு மட்டுமல்ல, தமிழக வரலாறு கூட நமக்கு உணர்த்தியிருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மனைத்தான் மக்கள் நினைவில் வைத்துக் கொண்டிருக் கிறார்கள். எட்டப்பனை அல்ல. எனவே உணர்வைக் கொடுத்து உயிராய் வளர்த்த தமிழர் கண்ணோட்டத்தை புதிய தமிழர் கண்ணோட்டமாக முன்னெடுத்து பயணிக்கும் இதழ் ஆசிரியர் தோழர் பெ.ம. அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர் குழுமத்திற்கும் மனித நேயப் பேரவையின் சார்பில் இதயங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*-பெ.ச.பஞ்சநாதன், பெண்ணாடம்*

## பரிவும் பகிர்வும்

**மூன்று வெவ்வேறு திசைகளில் அரசியல் மற்றும் அமைப்பு நிலைபாடுகள் கொண்டுள்ள முத்திசை மூவரான இராசேந்திர சோழன், தணிகைச் செல்வன், அ.பத்மநாபன் ஆகியோர் நமது இதழுக்குச் செய்த ''அழிவுத் திருப்பணியால்'' நமக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட மனமுவந்து நிதியளித்த பெருமக்கள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. | தோழர். முருகானந்தம், அமெரிக்கா (USA) | 2,000.00 |
| 2. | தோழர் நா. ஆறுமுகம், குமாரபாளையம் | 1,000.00 |
| 3. | தோழர் நலங்கிள்ளி, சென்னை | 100.00 |
| 4. | த.தே.பொ.க. தோழர்கள், திருத்துறைப்பூண்டி | 2500.00 |
| 5. | த.தே.பொ.க. தோழர்கள், சிதம்பரம் | 3000.00 |
| 6. | தோழர் கோ. நடராசன், சீர்காழி | 500.00 |
| 7. | தோழர் ந. அப்துல் ரகுமான், ஆங்காங் | 500.00 |
| 8. | பொறியாளர் கா.சிதம்பரம் நினைவாக அவர் இல்லத்தார் | 1000.00 |
| 9. | முனைவர் கு.அரசேந்திரன், சென்னை | 500.00 |
| 10. | தோழர் பெ.ச. பஞ்சநாதன், பெண்ணாடம் | 100.00 |

- தொடரும்

## மணமக்கள் வாழ்க

தஞ்சை ஒன்றியம் வல்லம் புதூர் த.தே.பொ.க. தோழர் வே.தனசேகர் தம்பியும், திரு.வாத்தியார் வேலன், திருவாட்டி வீரம்மாள் ஆகியோர் மகனுமான செல்வன் **தங்கமணி**க்கும்,திருவையாறு வட்டம், பொன்னாவரை திரு புண்ணியமூர்த்தி, திருவாட்டி தனலெட்சுமி ஆகியோர் மகள் **மேகலா புன்னகை**க்கும் 13.06.2008 அன்று வல்லத்தில் தோழர் பெ.மணியரசன் தலைமையில் திருமணம் இனிதே நடந்தது. முனைவர் இராமலிங்கம், வல்லம் புதூர் ஊராட்சி மன்றத்தலைவர் ரெ.இராமதுரை, மருத்துவர் ஆலையழகன், வல்லம் பேரூராட்சித் தலைவர் காப்பாளர் நடராசன், தோழர்கள் பழ.இராசேந்திரன், குழ.பால்ராசு, பி.முருகையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்கள் சார்பில் புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு ரூ.500/- அன்பளிப்பு வழங்கப்பட்டது. மணமக்கள் நீடு வாழ்க.

## ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்– நூல்திறனாய்வுக் கூட்டம்

31.5.2008 அன்று தஞ்சையில் தமிழ்க்கலை இலக்கியப் பேரவை சார்பில் நூல் திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்ப்பல்கலைக் கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கி.அரங்கன் அவர்கள் தலைமை தாங்கினார். ''ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்'' என்ற நூலை தமிழர் கண்ணோட்டம் இணை ஆசிரியர் தோழர் கி.வெங்கட்ராமன் திறனாய்வு செய்து உரையாற்றினார்.

முன்னதாக கவிஞர் பெரியார் பித்தன் நெறியாளுகையில் இனி என்ன வேண்டும்? என்ற தலைப்பில் படைப்பரங்கம் நடைபெற்றது. 15க்கும் மேற்பட்ட படைப்பாளிகள் கவிதை படித்தனர்.

புலவர் கோ.நாகேந்திரன் வரவேற்று தொடக்கவுரையாற்றினார். முடிவில் அ.தனபால் நன்றி கூறினார்.

புதிய தமிழர் கண்ணோட்டம்

# ஆயிரத்தில் ஒருவர்

புதிய தமிழர் கண்ணோட்டத்திற்கு வாழ்நாள், மூன்றாண்டு, ஆண்டுக் கட்டண உறுப்பினர்களாக ஆயிரம் பேரைச் சேர்க்கும் முனைப்பியக்கம் நடந்து கொண்டுள்ளது. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும் , தமிழ் உணர்வாளர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். உறுப்பினர் கட்டணம் வழங்கியோர் பட்டியல் இங்கு வெளியிடப் பட்டுள்ளது.

**வாழ்நாள் : ரூ.1200.00**

1. திரு க. இரா.முத்துசாமி , திருப்பூர்.
2. திரு இரா. வள்ளிநாயகம், திருநெல்வேலி
3. திரு சை. பொன்னிவளவன், தஞ்சாவூர்.
4. திரு சு. பாண்டியன், செங்கிப்பட்டி
5. வெ.ப.மாரிமுத்து, வெண்டயம் பட்டி
6. திரு. ஏ. ரமேசு, திருவான்மியூர்
7. திரு.வெ. இராசேந்திரன், பட்டுக்கோட்டை
8. திரு. சரவணக்குமார், சேலம்

**மூன்றாண்டு ரூ.300.00**

1. திரு இரா. செயக்குமார் , தஞ்சை
2. திரு ச.பழனிவேல், தஞ்சை
3. திரு இரா. பன்னீர்ச் செல்வம், தஞ்சை
4. திரு இராதாகிருஷ்ணன் , சிதம்பரம்
5. திரு சி. மதியழகன், சிதம்பரம்
6. திரு. குமரேசன், காஞ்சி-1
7. திரு. பூ. சந்திரன், பல்லாவரம்
8. பேரா.முகிலை இராசபாண்டியன், பழவந்தாங்கல்
9. திரு. கிருஷ்ணமூர்த்தி, சென்னை
10. திரு. சிவக்குமார், சென்னை
11. திரு. கோ.குமரன், குரோம்பேட்டை
12. திரு.கோ. செயக்குமார், சூளைமேடு
13. திரு. க. சேகர், வெண்ணந்தூர்
14. திரு. க.குமணன், கும்பகோணம்

**ஓர் ஆண்டு - ரூ.120.00**

1. திரு கி.வே. பொன்னையன், பசுவப்பட்டி
2. திரு செ.பசும்பொன், கடைய நல்லூர்
3. திரு சொ.குமார் , தஞ்சை
4. திருமதி ஜெயராணி, மதுரை- 16
5. திருமதி இரமணி, மதுரை -20
6. திரு சரவணன், மதுரை -11
7. திருமதி இராதிகா, மதுரை -20
8. திருமதி சரோஜா , மதுரை - 7
9. திரு கே .ரெங்கராஜன், மதுரை -2
10. திருமதி சந்திரா, மதுரை- 16
11. திருமதி அருணா, மதுரை - 16
12. திருமதி மேரி, தஞ்சாவூர் -5
13. திருமதி காமேசுவரி, உசிலம்பட்டி
14. திருமதி ஞா.அருள்மணி, மதுரை - 16
15. திரு கண்ணன், மதுரை.
16. திரு கே.எஸ்.கண்ணன், மதுரை - 20
17. திருமதி மகேசுவரி, பரவை ,மதுரை
18. திரு முருகன், மதுரை - 16
19. திரு தி. செல்வராசு, சாக்காங்குடி, சிதம்பரம்
20. திரு சு.இராமு (எ) பிரேம்குமார், அம்மாப் பேட்டை, சிதம்பரம்
21. திருமதி பாலமுருகன், அம்மாப்பேட்டை , சிதம்பரம்
22. முனைவர் மா.குணசேகரன், மாமல்லபுரம்.
23. திருமதி ரெ.இராணி அரங்கநாதன், மணலூர் சிதம்பரம்.
24. திரு என். செயபாலன், ஓரத்தூர், சிதம்பரம்
25. திரு இரா.அன்பழகன், புவனகிரி, சிதம்பரம்
26. திரு இரா.தியாகராசன்,சிதம்பரம்
27. திரு சு.சேரன் (எ) அத்தியப்பன் உமையாள்புரம் , ஆத்தூர்
28. திரு பி.தெட்சிணாமூர்த்தி , செங்கிப்பட்டி
29. திரு மா. இராஜா, முருகன்குடி, கடலூர் மாவட்டம்.
30. திரு மு. இராமகிருஷ்ணன், முருகன்குடி
31. திரு சி. பெரியார் செல்வன், முருகன்குடி
32. திரு க. இளவரசன், முருகன்குடி
33. திரு இரா. வீரமணி, முருகன்குடி
34. திரு கோ. கலைவாணன் தாளநல்லூர், கடலூர் மாவட்டம்.
35. திரு த. அசோக்ராஜ், முருகன்குடி
36. திரு அ. வீரசேகரன், முருகன்குடி
37. கு. இராஜசேகர், முருகன்குடி
38. த. செல்வராசு , தாளநல்லூர்
39. சி. பூபாலன், புண்ணியநல்லூர் , தஞ்சை மாவட்டம்.
40. பணி.அ. கிளமெண்ட்ராஜா (இரக்கனார்), கீழ உச்சாணி, சிவகங்கை
41. திரு.செரா.ஃபினா , சிவகங்கை

42. திரு. இராசேந்திரவர்மன், செயங்கொண்ட பட்டிணம் , சிதம்பரம்
43. ஏ. பீட்டர் அமல்ராஜ், சென்னை -97
44. பி. இருதயராசு, தஞ்சை -7
45. எப். கிறிஸ்டின்ராஜ், தஞ்சை -5
46. ஆர்.ஃபிலோமினா , தஞ்சை -7.
47. திரு மு.நடராசன், ஊரப்பாக்கம்
48. திரு எஸ். பார்த்திபன் செங்கல்பட்டு
49. திரு கே.வி. முருகேஷ், கோவை -1
50. திரு த.செந்தில்நாதன் , கோவை-1
51. திரு இரா.முருகன், கோவை -1
52. திரு ந.பழனியப்பன் , கோபி
53. திரு த.கல்யாணசுந்தரம் , கோபி
54. திரு இரா.கவிதா, சத்தியமங்கலம்
55. வழக்குரைஞர் மா.கந்தசாமி, கோபி
56. திரு சு.திருவள்ளுவர், திருவம்பலபுரம், நெல்லை.
57. திரு ஏ.எஸ். பொன்னுச்சாமி, கோவை -1
58. திரு ம.சரவணன், கோவை - 26.
59. திரு. ச.குகநாதன், கோவை-1
60. திரு. ஆர். இரமேஷ், கோவை-1
61. திரு. டி.ஏ.ஜி. அசோகன், காஞ்சி-2
62. திரு. குறளமுதன், காஞ்சி-2
63. திரு. தே.பிரபாகரன், காஞ்சி-2
64. திரு. அ.செல்வமணி, சேலம்-15
65. திரு. இ.கி.ஜோசப்ராஜ், சேலம்-9
66. திரு. ஏ.சுப்பிரமணியம், சேலம்-7
68. திரு. பா. செகநாதன், சேலம்-2
69. திரு. தயாளன், மடிப்பாக்கம்
70. திரு.காமராசு, பழவந்தாங்கல்
71. திரு. பெ.வேல்முருகன், பழவந்தாங்கல்
72. திரு. தமோதரன், குரோம்பேட்டை
73. திரு. சம்பத், பல்லாவரம்
74. திரு. கணேசன், பழவந்தாங்கல்
75. திரு. சீனிவாசன், வண்டலூர்
76. பேரா. ஜோதி, சிதம்பரம்
77. திரு. அ.கந்தசாமி, திண்டுக்கல்
78. பேரா. மனோகரன், நெய்வேலி
79. திரு. இர.காவேரிச் செல்வன், ஊரப்பாக்கம்
80. திரு. எஸ்.டி.சுபராஜா, பாப்பாநாடு
81. திரு. ஆ. அய்யனார், குரோம்பேட்டை
82. திரு. த. சரவணன், குரோம்பேட்டை
83. திரு. எம்.இராமதாசு, கோடம்பாக்கம்
84. திரு. லோகரட்சகன், குரோம்பேட்டை
85. திரு. இந்திரமோகன், ஊரப்பாக்கம்
86. பேரா. அ.சம்பத், சென்னை
87. நூலகர், கிளைநூலகம், பூவிருந்தவல்லி
88. சி.எம்.கே. சப்ளையர்ஸ், பூவிருந்தவல்லி
89. திரு. ஜி.எம்.ரானா, சென்னை
90. திரு. தமிழ்ச் செல்வன், அம்மாப்பேட்டை, சேலம்
91. திரு. அ.கார்த்திகேயன், அம்மாப்பேட்டை, சேலம்
92. திரு. லிங்கேசுவரன், அன்னதானப்பட்டி, சேலம்
93. திரு. மு.கோபி, மூணாம்கரடு
94. திரு. அ.விஜயநிவாஸ், அரும்பாக்கம்
95. திரு. இரா.பாபு, அன்னதானம்பட்டி, சேலம்
96. திரு. மீ.இரவிக்குமார், தஞ்சாவூர்
97. திரு.க.செல்லப்பன், கந்தர்வக்கோட்டை
98. திரு. க.லெனின், பட்டுக்கோட்டை
99. புலவர் கோ.நாகேந்திரன், தஞ்சாவூர்
100. திரு. ந.ஆறுமுகம், தஞ்சாவூர்
101. திரு. சங்க இராசன், தஞ்சாவூர்
102. திரு. ஜா.முகம்மது கவுஸ், தஞ்சாவூர்
103. திரு. த.சங்கிலிமுத்து, சின்னமுத்தாண்டிப்பட்டி
104. திரு. ச.சுந்தரம், செங்கிப்பட்டி
105. திரு. துரை கலியமூர்த்தி, செங்கிப்பட்டி
106. கண்ணையா ஸ்டூடியோ, சாணூரப்பட்டி
107. தஞ்சைவட்ட ஆட்டோ சங்கம், சாணூரப்பட்டி
108. திரு.எஸ்.சாமிக்கண்ணு, தஞ்சை
109. திரு. கே.மணிகண்டன், பூதலூர்
110. திரு. பழ.புண்ணியமூர்த்தி, அயோத்திப்பட்டி
111. திரு. ச.அண்ணாதுரை, அயோத்திப்பட்டி
112. திரு. பி.அகிலன், செங்கிப்பட்டி
113. திரு. ச.சுப்பிரமணியன், அயோத்திப்பட்டி
114. திரு. அ.பீட்டர், செங்கிப்பட்டி
115. திரு.செ. ஜான்பீட்டர், நடுக்காவேரி
116. திரு. இரா. பழனிராசு, புதுக்கரியப்பட்டி
117. திரு. வ.ஆறுமுகம், சின்னமுத்தாண்டிப்பட்டி
118. திரு. இரெ.கருணாநிதி, செங்கிப்பட்டி
119. திரு. சு.ப.பால்ராசு, பழைய கரியப்பட்டி
120. திரு. கோ.ரமேசு, வெண்டயம்பட்டி
121. வழக்குரைஞர் கா.கோவிந்தராசு, வெண்டயம்பட்டி
122. திரு. இ.ராஜூகுமார், வெண்டயம்பட்டி
123. திரு. மு.தேன்மொழியன், வாழவந்தான் கோட்டை
124. திரு. சி.அன்புராஜா, வெண்டயம்பட்டி
125. கவிஞர் ஹேமலதா, வெண்டயம்பட்டி
126. திரு. சயோ சா.பிரபா, வெண்டயம்பட்டி
127. திரு. தேவ ஆசைத்தம்பி, புதுக்குடி
128. திரு. வை.குமார், வெண்டயம்பட்டி
130. திரு. டாக்டர் தமிழ்ச்சுடர், திருச்சி
131. திரு. இரா. தமிழ்ச்சுடர், திருச்சி
132. கதிர் டிஜிட்டல் ஸ்டூடியோ, நவல்பட்டு
133. திரு. முருகேசன், மனையேறிப்பட்டி

- தொடரும்

தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை சார்பில் வெளியீட்டாளர் : பெ.மணியரசன் ■ 20/7, முத்துரங்கன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-17
என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது ■ ஆசிரியர்: பெ.மணியரசன்

# நூல் அறிமுகம்

## திசைகளைத் திருப்பு

**ஆசிரியர்: கவிஞர் இரா.ஜோதிமணி**




காந்தியின் கைத்தடியைத் திருடி, மதச் சண்டைக்கும் சாதிச் சண்டைக்கும் பயன்படுத்தினோம் என்ற சுவையான கற்பனையும், மூன்று தலைமுறைகளை ஒரே இடத்தில் பதிவு செய்யும் வரலாற்றுப் பெட்டகம் வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற சமூக அவலமும் இவர் கவிதைகளில் தெறிக்கும் கருத்துச் சிதறல்கள். துளிப்பாக்களில் மரங்கள்/ பூமியின் உரோமங்கள் என்றும், ஆபாசச் சுவரொட்டிகள்/ எங்கள் சுவர்களுக்கு/ ஆடை கட்டுகின்றன என்பதும் சுவையான கற்பனை.

***80 பக்கங்கள்***
***விலை ரூ. 40/-***

## சிலப்பதிகாரம் நீதி இலக்கியம்

**ஆசிரியர் : முனை இரா.ஜோதிமணி**




தமிழ் இலக்கியங்களில் புரட்சிக் காப்பியமாகவும் தமிழ் மூவேந்தர் நாடுகளிலும் நடந்ததாகவும் வரும் சிலம்பு தமிழர்களின் தனி அடையாளத்தைப் பதிவு செய்த காப்பியம். அதை ஒரு நீதி நூலாகக் காணும் ஆசிரியர் நிறைய தரவுகளையும் மேற்கோள்களையும் காட்டிநிறுவுகிறார். கடும் உழைப்பும், பரந்துபட்ட நூலாய்வும், நூல் சிறிதாயினும் தன் நோக்கை நிறைவு செய்கிறது.

***104 பக்கங்கள்***
***விலை : ரூ.75/-***

மேற்குறித்த இருநூல்களும்
வெளியீடு:
**கவிபா பதிப்பகம்**
**20/7, முத்துரங்கன் சாலை**
**தியாகராயர் நகர், சென்னை-17**

## ஒரு பெண்ணியப்பார்வையில் சாதியும் பால்நிலைப் பாகுபாடும்

**ஆசிரியர் : உமா சக்ரவர்த்தி,**

**தமிழில் : வ.கீதா**




சாதியும், பெண்ணடிமைத்தனமும் சாதியும், வர்க்கமும் சாதி சார்ந்த வாழ்வியல் வரலாற்றுத் தருணங்கள் சமூகப் பின்னணிகள் ஆகியவற்றை துல்லியமாகவும், தெளிவுடனும் ஆராய்கிறது. சாதியமைப்பை விளக்கி தீண்டாமையைச்சுட்டிக்காட்டி, சாதி ஆணாதிக்கச் சிந்தனையையும், ஆன்மீக நெறி முறையோடு ஒட்டிய சாதிமுறையையும் பெண்ணியப் பார்வையில் இந்நூல் திறனாய்கிறது.

***104 பக்கங்கள்***
***விலை : ரூ.40/-***

வெளியீடு:
**பாரதிபுத்தகாலயம்**
**பு.எண்.421, அண்ணாசாலை**
**தேனாம்பேட்டை, சென்னை-18**

## ஒரு நகரமும் ஒரு கிராமமும்

**ஆசிரியர் : எஸ்.நீலகண்டன்**




கரூர் நகரம், செட்டிபாளையம் குக்கிராமம் இரண்டையும் களஆய்வு செய்து வளர்ச்சியின் தன்மையை சமன்படுத்திக் காட்டியிருப்பது நூலின் வாசிப்புக் கனத்தை உயர்த்தி யிருக்கிறது.


கிராமம், நகரம் இவைகளின் ஊடே வாழும் மனிதர்களை பண்பாட்டுப் பாத்திரங்களாய்ப் பதிவு செய்திருப்பது சிறப்புக்குரியதாகும். ஐம்பது அறுபது ஆண்டுகளில் ஒரு நகரமும் ஒரு கிராமமும் அடைந்துள்ள மாற்றங்களை சுய அனுபவ ரசனையோடு எழுதியிருப்பது சிறப்பு. கிராம, நகர வாழ்வுமுறை, சுற்றுச்சூழல், தொழில் முறைகள் என ஆய்வுப்பார்வையோடு சேகரித்த தகவல்களை வெளிச்ச மாக்கியிருப்பது மேலும் இந்நூலுக்கு மெருகூட்டுகின்றன.

***240 பக்கங்கள்***
***விலை : ரூ.150/-***

வெளியீடு:
**சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி**
**நிறுவனம், காலச்சுவடு பதிப்பகம்**
***669, கே.பி.சாலை,***
***நாகர்கோவில்- 629001***

## 123, இந்தியாவே ஓடாதே! நில்!!

**ஆசிரியர் : வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**




இந்திய அமெரிக்க அணுஒப்பந்தத்தை எந்தவித ஆக்கப்பூர்வமான விவாதமின்றி நடைமுறைப்படுத்த மத்திய அரசு முனைப்புக்காட்டுகிறது. அறிஞர்கள் பலர் இதை எதிர்த்துள்ளனர்.

இச்சிக்கலில் அவசரக் கோலத்தில் இந்திய அரசாங்கம் நடந்து கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். இவ்வொப்பந்தம் கூடாதென்பதே பொதுவான கருத்து. இந்நூல் அதையே வலியுறுத்திக் காட்டியிருக்கிறது.

அமெரிக்காவின் மூன்று கல்தீவு என்ற அணுஉலை 200 கோடி டாலர் செலவில் மூடப்பட்டும் கதிரியக்கக் கசிவால் அங்கு விளையும் தீங்கினைக் கண்டபின்னும் அணுஉலையை நாம் ஏன் தலையில் சுமக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுகிறார் நூலாசிரியர். அணு ஒப்பந்தத்தால் சூழ்ந்து வரும் ஆபத்தை தடுப்பதற்கு எச்சரிக்கை தரும் கருவியாய் இந்நூல் உள்ளது.

***120 பக்கங்கள்***
***விலை : ரூ.40/-***

வெளியீடு:
**பொதிகை-பொருநை-கரிசல்**
***4/359இ ஸ்ரீ சைதன்யா அவின்யூ***
**அண்ணா சாலை, பாலவாக்கம,**
***சென்னை-41***


## பன்மை வெளியீடுகள்




பக். 64 விலை ரூ.35.00




பக். 96 விலை ரூ.40.00




பக்.196 விலை ரூ.90.00




பக். 96 விலை ரூ.40.00

**பன்மைவெளி**
காவிரி கணிப்பொறி அச்சு/ 1, இராசா வணிக வளாகம்
நீதிமன்றச் சாலை தஞ்சாவூர்- 613001
தொலைபேசி: 04362- 246774